www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
பெப்.25–மார்ச்.02,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 142

## பதிலடிக்கு முஸ்தீபு



அதிரடியான திட்டங்கள்

ஸ்போர்ட்ஸ்

அசாரின் நம்பிக்கை



ஓடி ஓடி சேர்க்கணும்
ஒவ்வொன்றாக குவிக்கணும்

அடிவாங்கும் பந்துகள்



பட்டுச்சேலை உங்களுக்கு!



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கைப்புண்ணுக்கு கண்ணாடி...?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
மூதூரில் நடைபெற்ற
மனித வேட்டை,
எய்தவன் இருக்க
அம்பை நோகும் கதைகள்
அவலத் தொடராக இருப்பதற்கு
மற்றுமொரு கோரமான சாட்சி!

இனம் தெரியாதோரால்
மக்கள் சுடப்பட்டதாகச் சொன்னது
வெந்த புண்ணில் வேல்!

கொல்லப்பட்டவர்கள்
எழுந்து வந்து
குற்றம் செய்தவர்கள் யார் என்று
சுட்டிக்காட்ட முடியாது.

ஆனால், காயப்பட்டவர்கள்,
காலனின் பிடியில் சென்று மீண்டவர்கள்,
நடந்த கொடுமையை
கண் எதிரே கண்டவர்கள்
உயிரோடு இருக்கிறார்கள்.
காரணம் யார் என்று சொல்கிறார்கள்!

எல்லோர் செவியிலும்
அவர்கள் சொல்வது கேட்கிறது.
அரசாங்கத்திற்கு மட்டும்
கேட்கமாட்டேன் என்கிறது.

அப்பட்டமாகத் தெரிந்த உண்மையை
அறிய கமிஷன் எதற்கு?

கைப் புண்ணுக்கு
கண்ணாடி தேவைதானா?

யார் யார் சம்பந்தப்பட்டார்கள்
என்று தனித் தனியாக இனம்காண
விசாரணை தேவைதான்.
ஒட்டு மொத்தமாக
யார் காரணம் என்றறிய
ஆராய்ச்சி தேவையில்லை!

மத்திய வங்கி தாக்குதலுக்கு
புலிகள்தான் காரணம் என்று
எப்படித் தெரிந்தது?
புலிகள் மறுத்தாலும்
அவர்கள்தான் செய்தார்கள் என்று
அடித்துச் சொல்ல முடிகிறதல்லவா!

மூதூர் தாக்குதல் மட்டும்
எப்படி மூடுமந்திரமாக இருக்கிறது?
அதன் சூத்திரதாரிகள்
யார் என்று தெரிந்தும்
ஆணைக்குழுவை அழைப்பது ஏன்?

ஆணைக்குழு என்றாலே
காலத்தை இழுத்தடிக்கும்
முயற்சிதான் என்பது
அழுத்தமான அபிப்பிராயமாகிவிட்டது.

கடந்தகால அத்துமீறல்களை
இன்றைய ஜனாதிபதி
உரத்த குரலில் கண்டித்தவர்.

சூரியகந்த புதைகுழிகளை
பொதுஜன முன்னணி அரசாங்கம்
தோண்டியது;
துயரக் கதையை அம்பலமாக்கியது.

ஆனால், இன்று?
மூதூர் படுகொலையைப் பற்றி
மூச்சுவிடவே யோசிக்கிறது.

சிங்களக் கிராமங்களில்
புலிகள் தாக்குதல் நடத்துவதை
முரசு கண்டித்திருக்கிறது.

மூதூரில் தமிழ் பேசும் மக்கள்
பலியானதையும், படுகாயமடைந்ததையும்
எந்தவொரு
பிரபல சிங்கள பத்திரிகையும்
முக்கியப்படுத்தவுமில்லை.
வேதனை சொல்லவுமில்லை!

அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள்
படுகொலை நடந்த
அடையாளத்தைக் கூட-தம்
கமராக்களால் பதிவு செய்யவில்லை!

ஆக, மனிதாபிமானம் கூட
இன ரீதியாகத்தான் மலருகிறது.
நியாய உணர்வு கூட
இனமறிந்துதான் வெளிப்படுகிறது!
சோகம் அதுதான்.
இனப் பிரச்சனை தீராமலிருக்கும்
சாராம்சமும் அதுதான்!

மனித உரிமைக் கமிஷன்
என்ன செய்கிறது?
வெள்ளைத் தாமரை இயக்கத்தார்
எங்கே போனார்கள்?
எங்கே? எங்கே? எங்கே?

உரிய நேரத்தில் உரியதை
செய்யத் தவறுகிறவர்கள்
உரத்துச் சொல்லும் கோஷங்களை
மக்கள் எப்படி நம்புவது?
அரசாங்கம் யோசிக்குமா?

மூதூர் விடயத்தில்
ஏற்பட்டுள்ள மூடிமறைப்புகள்-
அதுபோல் சம்பவங்கள்
மேலும் தொடரலாமோ?
என்ற சந்தேகத்தை விதைத்துள்ளன!

சந்தேகத்தைப் போக்க
தகுந்த நடிவடிக்கையை
உடனடியாக மேற்கொள்வது
அரசின் தலையாய பொறுப்பு!

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

## உழைத்து வாழ்வோம்

மனிதனாகப் பிறக்கும் ஒவ்வொருவரும் வேலை அல்லது தொழில் செய்ய வேண்டியது அவசியம். அது இயற்கை. அதுபோல் தேவனின் கட்டளையும்கூட இது தேவனின் சித்தம். ஆதியாகமம் இதனை நன்கு விளக்குகிறது.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்." (ஆதி: 2:15)

"அவன் மண்ணைப் பண்படுத்தத் தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்" (ஆதி: 3:23) வேலை செய்ய வேண்டும் என்பது கடவுளின் சித்தம். எனவே, நாம் வீணில் உண்டுகளித்திருப்பதை வரவேற்கக் கூடாது. இதனால்தான்-


"அமைதலுள்ளவர்களும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கிறவர்களும், உங்கள் சொந்த கைகளினாலே செய்கிறவர்களாய் இருக்க நாடுங்கள். (தெச: 4:12)

இதுபெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று கட்டளையிட்டுள்ளோம். உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுத் திரிகிறார் என்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடு வேலை செய்து, தங்கள் சொந்த சாப்பாட்டை சாப்பிட வேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டு புத்தி சொல்கிறோம். இதனால்-

வேலை செய்தலின் மகத்துவம் விளங்குகிறதல்லவா?

ஏ.பி.வி.கோமஸ்-

## ஆன்மீகம்



## அண்ணலாரின் அருளுரைகள்

★ "நீர் உம் சகோதரனிடம் ஒரு விஷயத்தைச் சொல்லி அதை அவர் உண்மையென்று நம்பிக் கொண்டிருக்க, நீர் சொன்ன விஷயம் பொய்யாக இருப்பது பெரும் நம்பிக்கைத் துரோகமாகும்.

★ "இறுதித் தீர்ப்பு நாளில் இறை நம்பிக்கையாளனின் தராசில் வை(த்து நிறு)க்கப்படும் பொருள்களிலே மிகக் கனமானது அவனது நற்குணமாகும்."

★ "விலை உயரும் வரை ஒரு பொருளைத் தடுத்து வைப்பவன் பாவியே. நல்ல பொருளையும், மோசமான பொருளையும் தனித்தனியாக விற்பனை செய்யுங்கள். எம்மை ஏமாற்றுபவன் எம்மில் உள்ளவன் அல்லன்."

★ "வீர மரணம் எய்திய ஒருவனின் அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன; கடனைத்தவிர."

★ "வாருங்கள் நாம் சூதாடுவோம் என்று எவன் தன் நண்பனை அழைக்கின்றானோ அவன் தர்மம் செய்தல் வேண்டும்."

★ "ஒருவன் தெரிந்துகொண்டே ஒரு திர்ஹம் பெறுமதியான வட்டிப் பணத்தை நுகர்வதானது முப்பத்தாறு முறை விபச்சாரம் செய்வதை விடவும் மோசமானது."

தொகுப்பு: நஸ்மில் அஹ்மத், தெல்கஸ்தென்னை.

## கவிதைப் போட்டி இல-139

### பரிசுக்குரிய கவிதை

### முடிவு காணாவிடின்....!

அன்பினால் அரவணைப்பால் மகனைக்காத்தும்
அன்றாடம் பரவிவரும் போர்ப்புயலால்
சின்னவனும் மாண்டநிலை கண்ணால்காண
அன்னவனின் மனமென்ன களியா கொள்ளும்?
இன்றல்ல என்றென்றும் தொடரும் போர்க்கு
ஏற்றதொரு முடிவுதனைக் காணாவிடின்;
திண்ணமென கதறலொலி எங்கும் கேட்கும்!
திட்டமின்றி பிணக்குவியல் புவியில் ஓங்கும்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### அவலம்

தொலைந்துவிட்ட
மனிதத்தின் சாட்சியாய்
மலிந்துவிட்ட
மனித மாமிசம்!

தயாளினி பரமசாமி,
கல்கிசை.

### புதுவழி

வருகிறது ரவையொன்று
வழியில்லை தடுப்பதற்கு:
பிணமாக அங்கொருத்தி...
பிடி அவளை கேடயமாய்!

செல்வி. ஸுமைறா புஹாரி,
அக்கரைப்பற்று-06.

### சுமை

சுடப்பட்டதால்
நீ எனக்கு சுமை!
சுடப்படாததால்
நானே எனக்கு சுமை!

பாலகமலன்-வவுனியூர்.

### மாய்கிறதோ?

பூ உதிர்ந்து போனதனால்,
வேர் அழுது மாய்கிறதோ?

அ. வதனா, வெள்ளவத்தை.

### வெடி(யா) மருந்து

வெடி மருந்து பிறந்ததால்
வேடிக்கையானதே மனிதம்-விஞ்ஞானிகளே!
வெடியா மருந்தை ஈன்றிருந்தால்
வதங்கியிருக்குமோ இந்த உலகம்?

திருமதி. பத்மா தேவேந்திரராஜா,திருக்கோவில்.

### கொலைக் கலாசாரம்

குண்டுகளை வைத்துக்
குடிமகனைக் கொன்று-இங்கே
வென்றதென்ன இவர்கள்?
சண்டை சமர் செய்யும்
இரண்டு பக்கத்தாரும்-இங்கே
கொல்வதெல்லாம் மனிதம்!
'குற்றமிது' வென்று வெளிநாட்டு
கொற்றவருங் கூறல்-ஆனால்:
தொற்று நோயிது-அங்கேயுந்தான்...!

பாண்டியூர்-பொன் நவநீதன்.



### யமன்!

குண்டாக வந்தவன் யமன்
துண்டாகிப் போனவன் மகன்!

ஸ்ரீபதி ரவீந்திரநாத், அக்கரைப்பற்று-07.

### தாய் மனம்

மாண்டுபோன உயிருக்கு
இழப்புப் பணம்
இருபத்தையாயிரம்;
பணம் கண்டு தேறுமோ
பரிதவிக்கும் தாய் மனம்...?

எஸ்.எம். மாலா, மக்குலுஸ்ஸ-தீவில்ல.

### துடிதுடித்துப் போனதேனோ?

நாடே அதிர்ந்ததம்மா!
நானோடி வந்தேனம்மா!!
நடுரோட்டில் உன்னுயிரும்
துடிதுடித்து போனதேனோ?

காரைதீவு சிவம்- குருக்கள்மடம்.

### மறுபடியும்?

முகவரியைத்தொலைத்த
மனிதாபிமானம்;
முத்திரை குத்தப்பட்ட
அப்பாவிகளுக்கு
வழங்கிய சன்மானம்!

எம்.எச். முஹமட் அஸாத்,
நாகமை.

### சமாதானம்?

சனங்களை சாகடிக்கும்
சனநாயக நாட்டில்
பிணங்களை கையேந்தும்
பேரழிவுக்குப் பெயர்-'சமாதானம்'

அம்பிளாந்துறையூர்-அரியரன்.

### யாரிடம் நீதி கேட்பது?

வேலியே பயிரை
மேயும் போது
நீதி கேட்டு
யாரிடம் நாம் செல்வோம்?

ஏகாம்பரம்-கயல்,
ஆரையம்பதி-02.

### யுத்தம்

தொடர்ந்து நடந்தால்
உமக்கு மட்டுமல்ல,
நமக்கும்
இந்நிலை தான்!

எப். லெனாட்குமார்,
ஹப்புத்தளையூர்.

### அவலநிலை

வருமுன் காப்பதற்கும் வழி ஏதும் இல்லை,
வந்தபின் காப்பதற்கும் வகை ஒன்றும் இல்லை.
இழப்புக்களே எங்கள் வாழ்க்கை!
இனி ஏன் எமக்கிந்த யாக்கை?

க.கமலாம்பிகை,வவுனியா.

## கவிதைப் போட்டி இல-142




### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.03.1996.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 142. தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772, கொழும்பு.

## "ரசிகனே! நியாயமா?"...

அற்புதமான தொடர் கார்லோஸின் "தற்காலிக" இடை நிறுத்தம்; அட்டகாசமான ஏமாற்றம்! மீண்டும் வேகமாய் வர; விருப்போடு வேண்டுகிறோம்.

கூடவே, இனிதாய் முடிவடைந்த பட்டுக்கோட்டை பிரபாகரின் "விலை உயர்ந்த குற்றமும்" பிரமாதம்! "தேன்கிண்ணம்" பகுதியை "ப(ழ)ல வகை படங்கள்" மூலம் இன்னும் இனிமையாக கவர்ச்சிப்படுத்துவது... ஏ(வன்!) வண்ணம்!

கோட்டைமுனை "முத்துமணி", பதுளை.

-●●-

எனதன்பு முரசே!

தினமுரசின் பல்சுவைகளில் ஒரு சுவையாய் இருந்துவந்த ரசிகனின் "மனித வெடிகுண்டு" தொடரின் இடைநிறுத்தம் என்போன்ற கார்லோஸ் ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றம். இடைநிறுத்தத்தின் காரணம் சொல்வாயா?

ஏ.எஸ்.மாலன், வவுனியா.

-●●-

கார்லோசின் துணிச்சல் எம்மை வியக்க வைக்கிறது. இராஜகுமாரனின் இராமாயணம் பாராட்டத்தக்கது. புதிய பரிசுப்போட்டியையும் வெளியிட்ட முரசுக்கு நன்றிகூறி பாராட்டும் நாம்....

எம். உஷா, சவிஷ், இஸ்பிரிங்வூட்.

-●●-

கார்லோஸின் மனித வெடிகுண்டு விறுவிறுப்பாகத்தான் இருந்தது! தற்காலிகமாக நிறுத்தி விட்டீர்கள். வேதனையாக உள்ளது.

ஏ.எல். ஆமீர் ஹுஸைன், கல்முனை-3.

-●●-

தினமுரசின் ரஜினியின் கலப்படமில்லாத கற்பனை பேட்டி தினமுரசையே மெருகூட்டியது. இதை பிரசுரித்ததற்கு எனது வாழ்த்துக்கள்.

எம்.எம். முகம்மது லாஜிர், சாய்ந்தமருது-10.

-●●-

டியர் நாரதர்! எனக்கு உம்மில்தான் சந்தேகம்! நீர் செல்வது அதிகமாக நடக்கிறதே? கார்ட்டூன் மூலை சூப்பர்.

சுபாவரன், கண்டி.

### யார் நீர்?

நாரதரே! உம்மை கைதுசெய்தால் சில சங்கதிகளை அறியலாம் போல இருக்கிறது. பாரசூட் மூலம் தாக்கும் திட்டம் பற்றி விபரித்திருந்தீர். சமீபத்தில் வெலிகந்தையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது ஒரு பாரசூட், உண்மையைச் சொல்லும் யார் நீர்?

கே. ஆதவன், வெலிமடை.

-●●-

மேலும் நாலு வெடிகுண்டு வாகனங்கள் என்று முரசு செய்தி வெளியிட்டது. பரபரப்பு செய்தியாக இருக்குமோ என்று நான் சந்தேகப்பட்டது உண்மை. மறுவாரமே இரண்டு லொறிகள் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் கண்டேன். என் சந்தேகத்திற்காக வருத்தப்பட்டேன்.


கு. சோதீஸ்வரன், தெகிவளை.

-●●-

செய்தியில் ஒரு காசோலை இலக்கம் மாறுபட்டால்கூட மறு வாரம் திருத்தம் போட மறக்காமல் இருக்கிறாயே முரசே! அதுதானே உன் நம்பகத்தன்மையில் நாம் உயிரே வைத்திருக்கிறோம்!

ச.ஜெயந்தி, திருக்கோணமலை.

-●●-



## வாசக(ர்) சாலை

இராஜதந்திரியாரின் அலசல் நிதானமான தோண்டல். பழையன யாவற்றையும் மறந்துவிடும் எமக்கு அவற்றை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார் இராஜதந்திரி.

எஸ்.எம்.ஹமீட், கந்தளாய்.

-●●-

முரசு முரசுதான்

"கொழும்பில் தாக்குவோம், கரிகாலன் எச்சரிக்கை" என்று செய்தி வெளியிட்டு ஒரு வாரம் கூட ஆகவில்லை.

கொழும்பில் தாக்குதல் நடைபெற்று விட்டது. முரசு முரசுதான்.

எம்.ஜே.எம்.இம்திஹான், ஹேனமுல்ல.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- ★ எஸ்.சுபாஷன், கல்முனை-01.
- ★ மர்ஜானா இத்ரீஸ், மருதமுனை.
- ★ செல்வி. சுஜானா றஹீம், புத்தளம்.
- ★ செல்வன். தி.அபிஷேன், சாம்பல்தீவு-05.
- ★ க.மு.சபீக், ஹொறவபொதானை.
- ★ தரன், கொழும்பு.
- ★ சி.சம்பந்தர், மன்னார்.
- ★ கே.ஆர். இராமகிருஷ்ணா, கொழும்பு-11.
- ★ கல்லடி மூர்த்தி, மட்டக்களப்பு.
- ★ செல்வி ஜெகதீஸ், கொழும்பு-08.
- ★ எம்.எம்.எம்.ஜெலீர், கிண்ணியா-03.
- ★ மா. சரவணன், மொன்றியல்-கனடா.
- ★ எஃப்.ஹுஸைன், குவைத்.
- ★ எம்.எஸ்.ரம்ஸியா, பதுளை.
- ★ எஸ்.விஜயன், அக்கரைப்பற்று-07.

மனித வெடி குண்டு கார்லோசின் தொடர் தற்காலிக முற்றும் என்றதைப்பார்த்து அதிர்ந்தேன் என்றாலும் மீண்டும் சிலவாரங்கள் கழித்து பிரசுரிக்க இருக்கும் தினமுரசுக்கு எனது அன்பான பாராட்டுக்கள்.

கே.புவனலோஜினி, இறக்குவானை.

கார்லோஸின் 'ஒப்பரேஷன் எண்டபே' விரைவில் வரும். சந்தோசம்தானே? -ஆர்-



படிப்பகம்

www.padippakam.com

# கப்பலில் வந்த கனரக ஆயுதங்கள்

# தகவல் கொடுத்தது இந்தியக் கடற்படை

## புலிகள்-இந்தியா சமரச முயற்சி முறிவு

**முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான 'ஹொரிசோன்' என்னும் கப்பல் தாக்கியழிக்கப்பட்டது தெரிந்ததே. அதனையடுத்து விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சமரச முயற்சிகள் முறிந்துள்ளன.**

### நீர்மூழ்கிகள்

'ஹொரிசோன்' கப்பலை தாக்கியதில் இரண்டு இந்திய கடற்படைக்கப்பல்களும் பங்குகொண்டன என்று புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

நீர்கொழும்பு மற்றும் பொத்துவில் கடற் பகுதிகளில் அண்மைக்காலமாக நீர்மூழ்கி கப்பல்கள் மர்மமான முறையில் நடமாடி வருகின்றன. அந்த நீர்மூழ்க்கிக் கப்பல்கள் இந்தியாவினுடையவை என்று புலிகளது இலண்டன் சர்வதேச செயலகம் சந்தேகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் பலியான ஐந்து கடற்கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவங்களிலும் இந்தியாவின் நடவடிக்கை கண்டிக்கப்பட்டது.

இந்திய உதவியில்லாமல் இலங்கை கடற்படையினரால் தமது கப்பலை கண்டறிந் திருக்கமுடியாது. கடற்சமரிலும் வெற்றி பெற்றிருக்க முடியாது என்று புலிகள் கூறிவருகின்றனர்.

இதேவேளை புலிகளது 'ஹொரிசோன்' கப்பல் மீதான தாக்குதலில் தமது கடற் படையினர் ஈடுபடவில்லை என்று இந்தியா மறுத்துள்ளது.

ஆனால், சந்தேகத்துக்குரிய கப்பல் ஒன்றின் நடமாட்டம் குறித்து இந்திய கடற்படையினர் இலங்கைக் கடற்படைக்கு தகவல் தெரிவித்திருக்கலாம் என்ற கருத்தை இருநாடுகளுமே மறுக்கவில்லை என்பது குறிபிடத்தக்கது.

திருமலை துறைமுகத்திற்குள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதற்காகவே தமது கப்பல் சென்றதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தி ருந்தார்கள்.

### கிடைத்துள்ள தகவல்கள்

புலிகளது 'ஹொரிசோன்' கப்பல் விவகாரம் தொடர்பாக முரசுக்கு கிடைத் துள்ள தகவல்கள் வருமாறு:

யாழ் குடாநாட்டில் யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைகொண்டபின்னர் வெளிநாடு களில் உள்ள புலிகளின் கிளைகள் துரித கதியில் நிதி திரட்டல்களில் ஈடுபட்டன.

புலிகளிடமும் ஆட்டிலறி பீரங்கிகள் போன்ற கனரக ஆயுதங்கள் இருந்தால்தான் படையினரை எதிர்கொள்ள முடியும் என்று புலிகளது வெளிநாட்டுக் கிளைகள் பிரசாரம் செய்துவந்தன.

யாழ் குடாநாட்டில் படையினரின் முன்னேற்றமும், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை வெற்றிவிழாவாகக் கொண்டா டப்பட்டதும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களிடம் இலங்கை அரசுமீது அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தன.

அதனையடுத்து புலிகள் இயக்கத்தின ருக்கும் கணிசமான நிதி உதவி கிடைத்தது.

சென்றவருட இறுதியில் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

தாய்லாந்தில் உள்ள புலிகளது முக்கிய பிரமுகரான பத்மநாதன்தான் ஆயுதக்கொள் வனவுகள் மற்றும் புலிகளது கப்பல்களை நிர்வகிக்கும் பொறுப்புக்களை கவனித்து வருகிறார்.

பிரபாகரனது மிகவும் நம்பிக்கைக் குரியவரான பத்மநாதன், யாழ்ப்பாணத்தில் மயிலிட்டியைச் சேர்ந்தவர். ஒரு வகையில் பிரபாகரனுக்கு உறவினர் முறையானவர். அடிக்கடி தனது தங்குமிடங்களை வெவ் வேறு நாடுகளுக்கு மாற்றிக்கொண்டி ருப்பார். தாய்லாந்தில் இருந்து கனரக ஆயுதங்கள், வெடிமருந்துகள் சகிதம் புலிகளது ஆயுதக்கப்பலான ஹொரிசோனை அனுப்பிவைத்தவர் பத்மநாதன்தான்.

### இரண்டு பெயர்கள்

தாய்லாந்தில் இருந்து கப்பல் புறப்பட்ட போது 'எம்.வி. கொமே ஜோ' என்ற பெயரே கப்பலில் பொறிக்கப்பட்டிருந்தது.

பின்னர் இடைநடுவில் வைத்து 'ஹொரிசோன்' என்று பெயர் மாற்றப்பட்டது. கப்பல் புறப்பட்ட செய்தி தற்செயலாக க்சிந்துவிட்டாலும், பாதுகாப்பாக இருப்ப தற்காகத்தான் அவ்வாறு பெயர் மாற்றப் பட்டது.

ஹொரிசோன் கப்பலின் கப்டனாக வழிநடத்திவந்தவர் கடற்புலிகள் பிரிவைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் சோதித்தம்பி அல்லது மதன் என்றழைக்கப்படும் யோகச்சந்திரன் ரவிக்குமார். அவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்.

சர்வதேசக் கடற்பரப்பில் ஹொரிசோன் சென்றுகொண்டிருந்தபோது இந்தியக் கடற்படையினரின் சந்தேகப்பார்வைக்குள் சிக்கியிருக்கிறது.

ராடர் கருவிகள் மூலமாக இந்திய கடற்படையினர், மிக உன்னிப்பாக கப்பலின் நடமாட்டத்தையும், அது எங்கே செல்கிறது என்பதையும் நோட்டமிட்டுக் கொண்டி ருந்தனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் கப்பல் நுழைந்ததும் இந்தியக்கடற்படையினர் இலங்கை கடற்படையினருக்கு தகவலை தெரிவித்து உஷார் படுத்தியுள்ளனர்.

### கூட்டுத்தாக்குதல்

அதனையடுத்தே கடற்படையும், விமானப்படையும் கூட்டாகச் சேர்ந்து தாக்குதலில் ஈடுபட்டன.

இதேவேளை முல்லைத்தீவு கடற் கரையில் கரும்புலிப் படகுகள் உட்பட கடற்புலிப் படகுகள் கப்பலை எதிர்பார்த்து காத்து நின்றன.

கப்பல் வந்து சேர்ந்தவுடன் அதனை சுற்றி வியூகம் அமைத்து காவலில் ஈடுபட வேண்டியது கரும்புலிப் படகுகளது வேலை.

ஆயுதங்களை படகுகளில் ஏற்றிக் கரைக்கு கொண்டுசெல்வது கடற்புலிகளது பொறுப்பு.

அதற்கிடையே இலங்கை கடற் படையினர் உஷாராகிவிட்டதை ஹொரிசோன் கப்பலில் இருந்தவர்கள் அறிந்து கொண்டார்கள். கப்பலை நிறுத்துமாறு கடற்படையிடமிருந்து வந்த உத்தரவுகளையும் மீறி கப்பல் முல்லைக் கடலுக்குள் சென்றது. தாம் கண்காணிக்கப்படுவதாக கரைக்கு தகவலும் அனுப்பினார்கள்.

அதனையடுத்து கரையில் நின்ற கரும்புலிப்படகுகள் இரண்டும் கப்பலை பாதுகாக்க விரைந்தன.

ஹொரிசோன் கப்பலை நோக்கிவந்த கடற்படைக் கப்பல்களை தாக்குவதற்கு குறிவைத்தன. ஆயினும் முன்கூட்டியே மோதலை எதிர்பார்த்து சென்ற கடற்படை கப்பல்களது தாக்குதல்கள் பலமாக இருந்தமையால் கடற்கரும்புலிகளது படகுகள் கடல் நடுவே வெடித்துச் சிதறிவிட்டன.

### கப்டன் பலி

அதேநேரம் புக்காரா விமானம் வீசிய குண்டால் ஹொரிசோன் கப்பல் தாக்கப் பட்டது. உள்ளே வெடிமருந்துகள் இருந்த மையால் கப்பல் பயங்கர சத்தத்துடன் வெடித்து எரியத் தொடங்கியது.

எரிந்து கொண்டிருந்த கப்பலை அணைத்து அதற்குள் உள்ள ஆயுதங்களை மீட்க முடியுமா என்று பார்க்கக் கடற் புலிகளது படகுகள் விரைந்தன. அவற்றின் மீது புக்காரா விமானம் தாக்குதல் நடத்தியது. படகுகளில் இருந்து ஒலிகன் ரக துப்பாக்கியால் கடற்புலிகள் சுட்டதில் புக்காரா விமானம் சேதமடைந்தது.

கப்பல் தாக்கப்படுவதற்கு முன்னரே கப்பலில் இருந்த புலிகள் கடலில் குதித்து தப்பிச்சென்றிருக்கலாம் என்று நம்பப் படுகிறது. கப்பல் கப்டன் மட்டுமே கப்பலோடு சேர்ந்து பலியாகியுள்ளார்.

# இந்தியா மீது புலிகள் பாய்ச்சல்!

## கப்பல் தாக்கப்பட்டதில் பங்குண்டாம்!

15.2.96 அன்று விடுதலைப் புலிகள் முதலில் வெளியிட்ட அறிக்கைக்கும், அதே நாளில் விடுதலைப் புலிகள் வெளியிட்ட இரண்டாவது அறிக்கைக்கும் இடையே வேறு பாடுகள் காணப்படுகின்றன.

15.2.96. இல் வெளியிட்ட அறிக்கையில் தமது கப்பல் சிறீலங்கா படையினரின் தாக்குதலுக்கு உள்ளானது என்று மட்டுமே புலிகள் குறிப் பிட்டிருந்தனர்.

15.02.96 இல் விடுத்த இரண்டாவது அறிக்கையில் இந்தியாமீதும் புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

"தமிழீழக் கடற்பரப்பில் இந்திய-சிறீலங்கா கடற்படையினருடன் நடைபெற்ற மோதல்" என்றே அந்த அறிக்கையில் புலிகள் விபரித்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சியில் இருந்து வெளியாகும், புலிகள் அமைப்பினரின் தினசரியான 'ஈழநாதம்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் இந்தியாவை சாடியுள்ளது.

"சிறீலங்கா இனவாத அரசுடன் கைகோர்த்துக்கொண்டு தமிழினத்துக்கு எதிராக இந்திய அரசு மேற்கொண்டுள்ள செயல் அடாவடித்தனமானது.

இந்திய அரசு தனது நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு தடைவிதித்துள் ளமை அதன் எல்லைக்கு உட்பட்டவிடயமே தவிர, அதற்கப்பால் உள்ள விடயமல்ல.

ஏற்கனவே விடுதலைப் புலிகளது கப்பல் இரண்டை இந்தியா வழிமறித்தது. அதில் ஒன்று இந்தியாவினால் கைப்பற்றப்பட்டது.

கேணல் கிட்டு சென்ற கப்பலை இந்தியா கைப்பற்ற முனைந்தது. ஆனால் கிட்டுவும் ஏனைய விடுதலைப் புலிகளும் கப்பலை தகர்த்துவிட்டு தாமும் பலியானார்கள்.

தற்போது தமிழீழக் கடற்பரப்பில் 14.02.96 அன்று நடைபெற்ற சம்பவமானது இந்தியாவின் முன்னைய நிலைப்பாடுகளை விட மேலும் கடுமையானதாக அமைந் துள்ளது.

இந்திய அரசு ஆயுத-தளபாட உதவி களை வழங்குவதோடுமட்டும் நின்று விடாமல், நேரடியாகவோ, மறைமுகமாகவோ சிறீலங்கா படையினருக்கு தாக்குதல்களிலும் உதவ முன் வந்துள்ளமை வெளிப் பட்டுள்ளது." அவ்வாறு ஈழநாதம் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடற் சண்டையில் பலியான ஐந்து கடற்புலிகளுக்கும் 17.02.96 அன்று வன்னியில் அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு கடற்கரும்புலி உட்பட ஐந்து கடற்கரும்புலிகளது படங்களும் பொது மக்களது அஞ்சலிக்காக வைக்கப்பட்டி ருந்தன. பெரும் திரளான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

# புலிகளிடம் மேலும் இரண்டு கப்பல்கள்

புலிகளது 'ஹொரிசோன்' கப்பல் தாக்கப்பட்டாலும், மேலும் இரண்டு கப்பல்கள் புலிகளிடம் இருக்கின்றன. வர்த்தகக் கப்பல்களாக அவை பதிவு செய்யப் பட்டுள்ளன.

பிரபாகரனின் சகோதரர் ஒருவர் வெளிநாட்டு கப்பல் நிறுவனம் ஒன்றில் முக்கிய பொறுப்பில் இருக்கிறார்.

முன்னர் இரண்டு தடவைகள் புலிகளது ஆயுதக் கப்பல் -24.9.94 இல் முல்லைக் கடலிலும், ஏப்ரல் 13- 1995 இல் வடமராட்சிக் கடலிலும் ஆயுதங்களை இறக்கி விட்டுச் சென்றிருந்தது. முரசு மட்டுமே அச் செய்தியை விபரங்களோடு முதன் முதலில் வெளியிட்டிருந்தது.

இந்தியாவில் மர்ம விமானம் ஒன்று ஆயுதங்களை போட்டுவிட்டுச் சென்றமை தெரிந்ததே. அதன் பின்னர் இந்தியா வான் பரப்பிலும், கடற்பரப்பிலும் கடும் கண் காணிப்பு செலுத்திவருகிறது.

இந்த நேரத்தில் புலிகளது கப்பல் வந்து சேர்ந்தமையால்தான் சந்தேகப் பார்வையில் விழ நேர்ந்தது என்று கூறப் படுகிறது.

இந்தியாவில் மர்ம விமானம் ஆயுதம் போட்ட விடயம் தொடர்பாக முரசு 135 இல் எக்ஸ்ரே ரிப்போட்டில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது:

"மேற்கு வங்காளத்தில் விழுந்த பொதிகள் யாருக்காகப் போடப்பட்டாலும் அதனால் புலிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள் ளது.

சமீப எதிர்காலத்தில் வெளியிலிருந்து கடல் மார்க்கமாகவோ, வான் மார்க்க மாகவோ புலிகள் ஆயுதங்களைத் தரு விப்பதை இயலாததாக்கி விட்டது.

இந்தியா தனது வான் பரப்பிலும் கடற்பரப்பிலும் கடும் கண்காணிப்பு செலுத்தும்" என்று கூறப்பட்டிருந்தது. முரசின் கணிப்பு உறுதியாகிவிட்டது.

# பழைய பொலிஸ் நிலையத்துக்கூடாக புதிய வீதி

ஏறாவூரில் தற்போதைய பொலிஸ் நிலையத்தின் முன்பகுதி வீதியைத் தவிர்த்துச் செல்லும் வகையில் பழைய பொலிஸ் நிலைய கட்டிடம் இருந்த வளவினூடாக வாகனங்கள் திருப்பிவிடப்படுகின்றன.

இப்பழைய பொலிஸ் நிலையத்தை 1990ம் ஆண்டு புலிகள் கைப்பற்றியதையடுத்து குண்டு வீச்சு விமானங்களால் பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டது தெரிந்ததே. இதேவேளை மட்டக்களப்பு மைலம்பாவெளி இராணுவ முகாமின் முன் வீதியைத் தவிர்ப்பதற்காக புதிய பாதையொன்றை படையினர் அமைத்து வருகின்றனர்.

# இராணுவ பொலிஸ் தலைமையகம் தாக்குதல் குறியில் இருந்து தப்பியது

கொழும்பு நாரஹென்பிட்டியில் உள்ள விகாரையொன்றில் இருந்து கைக்குண்டுகள் மற்றும் ரொக்கட்டுகள் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

கொழும்பில் கொலன்னாவ, ஒரு-கொடவத்தை எண்ணெய்க்குத தாக்குதலுக் கான ஆயுதங்களில் ஒரு பகுதி நாரஹென் பிட்டிய விகாரைக்குள் இருந்த மறைவிடத்தில் இருந்தே விநியோகிக்கப்பட்டது .

கொழும்பில் மேலும் சில தாக்குதல்களை நடத்தி முடித்துவிட்டு அதன் பின்னர் நாரஹென்பிட்டி இராணுவ பொலிஸ் தலைமையகம் மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்ததாக தெரிய வருகிறது.

ரொக்கட்டுகள் இரண்டு மட்டுமே அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்தன. லோஞ்சர் கொலன்னாவ தாக்குதலுக்கு கொண்டு செல்லப்பட்டது.

விரைவில் ஒரு தொகுதி ஆயுதங்கள் நாரஹென்பிட்டி விகாரை வளவுக்குள் கொண்டு வந்து சேர்க்கப்பட இருந்தன.

ஆயுதங்களைக் கொண்டு வருவது தொடர்பான வேலைகளைக் கவனிக்கவே தர்மலிங்கம் ராமலிங்கம் கொழும்புக்கு வெளியே சென்றதாகத் தெரியவந்துள்ளது.

# மூதூர் படுகொலையும் உடனடி விடுமுறையும்

திருக்கோணமலை மாவட்டத்தில் மூதூர் பகுதியில் இடம்பெற்ற படுகொலைத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சாட்சியம் அளித்த பொதுமக்களில் பலர் மிரட்டலுக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்ணால் கண்டதைச் சொன்னால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாம்.

இராணுவ அதிகாரிகளே விசாரணை களில் ஈடுபடும்போது அவர்கள் முன்னிலை யில் உண்மைகளைச் சொல்ல சாட்சிகள் தயங்குவார்கள். குற்றம் சாட்டப்பட்ட தரப் பினரே விசாரணைகளில் ஈடுபடுவது நியாய மாகாது என்றும் கூறப்படுகிறது.

இதேவேளையில் மூதூர் சம்பவத்தின் எதிரொலியாக ஏதாவது அசம்பாவிதம் நடக்கக்கூடும் என்று கருதியே பாடசாலை களுக்கு உடனடியாக விடுமுறை அறிவிக்கப் பட்டதாக நம்பப்படுகிறது.

மூதூர் சம்பவத்திற்கு பதிலடி என்ற ரீதியில் தலைநகரில் எல்லாளன் படையின் பெயரில் அனர்த்தங்கள் நேரக்கூடும் என்று கருதியே அவசரமாக விடுமுறை அறிவிக்கப் பட்டதாக பரவலான அபிப்பிராயம் நிலவுகிறது.

### ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்தும், வளலாய் இராணுவ முகாமில் இருந்தும் கடந்த சனிக்கிழமை ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தொண்டமானாறு, கெருடாவில் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. வடமராட்சியை நோக்கி இடைக்கிடையே ஷெல் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் படையினர் மீது புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். சேத விபரங்கள் தெரியவில்லை.

# காணாமல் போன ஐயாயிரம் பேர்!

(கண்டி நிருபர்)

கண்டி மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டில் 1447 பேர் காணாமல் போயுள்ளனர். என்று பிரதி அமைச்சர் திரு.மகிந்த விஜயசேகரா கண்டியில் அறிவித்தார். இவர்களில் கூடுதலாக காணாமல் போனோர் குண்டசாலைத் தொகுதியில் ஆகும். அங்கு காணமல் போனோரின் எண்ணிக்கை 321.

அடுத்ததாக கம்பளையில் 185 பேரும், பாத்ததும்பறையில் 122 பேரும், பூஜாப் பிட்டியில் 147 பேரும், தும்பளையில் 112 பேரும் இவ்வாறு அதிக அளவில் காணாமல் போயிருப்பதா அமைச்சர் தெரிவித்தார்.

இதே வேளையில் கண்டி மாவட்டத்தில் காணாமல்போனோரின் எண்ணிக்கை ஐயாயிரத்தை தாண்டி விட்டதாக பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிதிவழங்கு வது தொடர்பாக இக் கூட்டம் கண்டியில் நடைபெற்றது. வடக்கு கிழக்கில் இருந்து கண்டிக்கு அகதிகளாக 195 குடும்பங்கள் வந்து சேர்ந் துள்ளன.

# கடத்தலால் அச்சம்

(வாழைச்சேனை நிருபர்)

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஓட்டமாவடியைச் சேர்ந்த ஓட்டோவொன்று மாவடிவேம்பு என்னுமிடத்தில் வைத்து, மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது ஆயுதபாணியான இளைஞர் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து வாழைச்சேனைப் பிரதேசத்திலிருந்து மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர் நகரங்களுக்கு ஓட்டோ வண்டிகளையோ, வாடகைக் கார்களையோ வாடகைக்குப் பெற்றுச் செல்வது கடினமான காரியமாகி உள்ளதாக பிரயாணிகள் கவலை தெரிவிக் கின்றனர். சாரதிகள் தமது வாகனங்கள் கடத்தப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக அப்பிரதேசங்களுக்குச் செல் வதற்கு தயக்கம் காட்டுகின்றார்கள்.

இதன் காரணமாக சகல வாகனங்களும் ஓட்டமாவடி, மீராவோடை, வாழைச்சேனைப் பிரதேசங்களில் (பாதுகாப்பான பிரதேசங் களில்) மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை நடாத்தி வருகின்றார்கள். இந்தச் சம்பவத்தின் காரணமாக தூர இடங்களுக்கான தமது வாடகைப் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும், தமது வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், நாளாந்தம் பராமரிப்புத் தேவைக்கான பணத்தைக்கூட சம்பாதிப்பது மிகக் கடினமாகவுள்ளதாகவும் வாகன உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஆட்டிலறியும்- வெடிமருந்தும்

புலிகளது ஆயுதக்கப்பலில் கொண்டுவரப்பட்ட ஆயுதங்களில் பெரும்பாலானவை நீண்ட தூர ஆட்டிலறி பீரங்கிகளும், வெடிமருந்துகளுமே என்று இலண்டனி லுள்ள புலிகளது வட்டாரங்களில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீண்ட தூர ஆட்டிலறிகள் வந்து சேர்ந்தவுடன் எதிர்வரும் சித்திரைமாதமளவில் யாழ்ப்பாணத்தில் பாரிய தாக்குதல் ஒன்றில் அவற்றை பரிசீலித்துப் பார்க்க புலிகளின் தலைமை திட்டமிட்டு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# திடீர் சோதனைகள்

அம்பாறை, உஹனை, கல்முனை ஆகிய பகுதிகளில் சமீபத்தில் திடீர் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் சோதனையிடப்பட்டன. அம்பாறைப் பகுதியில் பெருந்தொகையான படையினர் கவச வாகனங்கள் சகிதம் சந்திக்குச் சந்தி நின்று கொண்டிருந்தார்கள்.

ஆங்காங்கே குண்டுகள் வெடிக்கும் என்ற தகவலை அடுத்தே இத் திடீர் சோதனைகள் நடைபெறுவதாக படையினர் தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

# எரிபொருளைத் தேடுகிறார்கள்

மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் கடந்த 10.02.96 தொடக்கம் எரிபொருளுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவி வருகிறது. இது அறுவடைக் காலமாக இருப்பதாலும், விவசாயிகள் அதிக இழப்பை எதிர்நோக்கியுள்ளார்கள். கடந்த 10.02.96 அன்று மட்டக்களப்பிற்கான புகையிரதம் குண்டுத்தாக்குதலுக்குள்ளாகியது. இதனால் மட்டக்களப்பிற்கான புகையிரத சேவை நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மண்ணெண்ணெய்க்கு மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்பதைக் காண முடிகிறது . சில எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் எரி பொருளைப் பதுக்கி வைத்து அதி கூடுதல் விலையில் விற்பதாகவும் குறை கூறப்படுகிறது.

# புலிபாய்ந்தகல்லில் புதிய முகாம்

யாழ் மாவட்ட 'ரிவிரெச' நடவடிக்கைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் இருந்தும் திரும்பிச் சென்ற படையினர் மீண்டும் அவ்வப் பகுதிகளுக்கு சென்று கொண்டிருக்கின் றனர். சமீபத்தில் புலிபாய்ந்தகல் என்னும் இடத்திற்கு கிரான் முனையில் இருந்து முன்னேறிய படையினர் அங்கு இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ள னர். அதனையடுத்து எவரும் அப்பகுதி யைக் கடந்து செல்ல அனுமதியளிக்கப் படவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளார்கள்.

## அதிகாரிகள் வருகைக்காக ஒளிச்சசம்?

(திருமலை நிருபர்)

திருக்கோணமலையில் பல்கலைக் கழகவளாகம் ஒன்று நிறுவப்படவேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப் பட்டிருக் கிறது. சமீபத்தில் இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரியில் ஆங்கில விரிவுரை மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாட லிலேயே இவ்வாறான தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது. மாணவர் ஒன்றியத் தால் ஒழுங்கு செய்யப் பட்ட இக்கலந் துரையாடலில் கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் வணபிதா. ராஜேந்திரம், இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரி இணைப்பாளர் செல்வி ராஜரட்ணம், பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.தங்கத் துரை, நகரசபைத் தலைவர் திரு.பெ.சூரியமூர்த்தி ஆகியோருடன் சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி வளாகம் நிறுவுவதற்கான அனுமதியைப் பெற்றுத்தருவது தம் பொறுப்பு என பாராளுமன்ற உறுப்பினர் கூற, நகரசபைக்குச் சொந்தமான எட்டு ஏக்கர் நிலத்தை வழங்கத் தாம் தயார் என் றார் நகரசபைத் தலைவர். எனினும் ஐம்பது ஏக்கர் நிலமாவது ஒதுக்கப்பட வேண்டும் என்ற கருத்து சமூக ஆர்வலர்களிடையே மேலோங்க, சாம்பல்தீவு, நிலாவெளிப் பகுதிக்குள் பொருத்தமான காணியைத் தெரிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் முடிந்ததும் முரசு நிருபரைச் சந்தித்த சில மாணவர்கள், தங்கள் குறைகளைத் தெரிவிக்கத் தயங்க வில்லை. கலந்துரையாடல் நடந்த மண்ட பத்துக்கு அன்றுதான் முதன் முதலாக பல் புகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. புல் செடிகள் வளர்ந்து புதராகக் காட்சியளித்த நிலப்பகுதி அன்றுதான் அவசரஅவசரமாகச் சுத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. எல்லாவற் றுக்கும் சிகரம் வைத்தாற் போல், கல்லூரி நீர்த்தாங்கியிலிருந்து பக்கத்து வளவுக்கு- எவ்வித கூச்சமும் இன்றி நிரந்தரமாகத் தண்ணீர் பெறுவதற்கான இணைப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

கல்லூரி வளவை விட்டு வெளியேறியும் தீராத ஒரு சந்தேகம்.... பல்கலைக்கழக வளாகம் அமைப்பதில் மாணவர்கள் நலன், பிரதேச நலன் என்பவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட அதிகாரிகளின் ஆடைகளில் அழுக்குப் படியக்கூடாது என்ப தற்கு அதிக முக்கியத்துவம் சிலரால் கொடுக் கப்படுவது ஏன்....? என்பதுதான்.

## காட்டூன் மூலை




நன்றி- லங்காதீப

## நியமனத்தில் தமிழ் பேசுவோர் புறக்கணிப்பு

திருமலை நிருபர்

தேசிய நீர் வழங்கல் சபையின் திருக்கோணமலைக் காரியாலயத்தில் சிங்களத் திணிப்பு இடம் பெறுகிறதா? அண்மைக்கால நியமனங்களை நோக்கும் போது பொதுமக்கள் மத்தியில் அவ்வா றான கேள்வி எழுவது ஆச்சரியமான தொன்றல்ல.

கடந்த ஆண்டு இவ்வலுவலகத்துக்கு 15 தொழிலாளர் நியமனங்கள் வழங்கப் பட்டன. இதில் 13 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர் எவருக் கும் நியமனம் வழங்கப்படவில்லை.

அண்மையில் நான்கு பேர் புதிதாக தொழிலாளர் தரத்துக்கு நியமனம் பெற்றுள்ளார்கள். அனைவரும் பெரும் பான்மை இளைஞர்களே.

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கென பிரதி பொது முகாமையாளர் அலுவலகம் ஒன்று திருக்கோணமலையில் இயங்கி வருகின்றது. எனினும் நியமனங்கள் அநுராதபுரத்திலுள்ள மாவட்ட அலுவல கத்தில் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலமே வழங்கப்படுகின்றன.

திருகோணமலை நலனில் அக்கறை உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரா வது தலையிட்டால்தான் இந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்கிறார் மேற்படி சபையின் ஊழியர் ஒருவர்.

## இறால் பண்ணை அமைக்க ஆட்சேபம்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மண்முனைப் பற்று பிரதேசத்திலுள்ள காங்கேயனோடையில் இறால் பண்ணை அமைப்பது தொடர்பாக ஆட்சேபம் தெரிவித்து மண்முனைப் பற்று பிரதேச சபை, மட்டக்களப்பு மாநகரசபை உட்பட காங்கேயனோடையில் உள்ள பல்வேறு பொது நிறுவனங்கள் கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் செயலாளருக்கு கடிதங்களை அனுப்பி வருகின்றன.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு பொது நிறுவனங்களின் ஆட்சேபனை காரணமாக இடைநிறுத்தப்பட்ட காங்கேயனோடை இறால் வளர்ப்புத் திட்டம் தற்போது ஆளும் அணியில் பங்காளிக்கட்சி அரசியல்வாதி ஒருவரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிக்க திரை மறைவில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

புத்தளத்தில் இறால் பண்ணை தொழிலை மேற்கொண்ட தனியார் நிறுவனமே மட்டக்களப்பிலும் ஆரம்பிக்கவுள்ளது.

## தபால் வேகத்தில் தந்தி?

கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறைப் பிரதேசம் கிட்டத்தட்ட 60,000 த்துக்கும் மேற்பட்ட சனத்தொகை வாழும் ஒரு பிரதேசமாகும். சம்மாந்துறைப் பிரதேசத் தைப் பொறுத்தமட்டில்-இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி மற்றும் பல சமூக சங்கங் களையும் பல கிராம சேவகர் பிரிவுகளை யும் உள்ளடக்கம் பெற்ற முக்கியமான தொரு தேர்தல் தொகுதியாகும்.

இது இவ்வாறிருக்க, இங்கு 7 தபால் காரியாலயங்களும், ஒரு பிரதான தபால் காரியாலயமும் அமைக்கப்பட்டி ருக்கின்றன. ஒவ்வொரு உபதபால் காரியாலயத்துக்கும் தொலைபேசி வசதி களும் ஒரு பிரதான தபால் காரியால யத்துக்கு மேலதிகமாக 'பெக்ஸ்' வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. தபால் காரியாலயங்கள், குறிப்பாக அவசரச் செய்திகள், இரகசியச் செய்திகள், நோர்மல் கடிதங்கள், பதிவுத் தபால்கள் இன்னும் பல விடயங்களையும் சுமந்து வருவதில் மிக முக்கிய பங்களிக்கின்றன.

ஆனால் இயங்குகின்ற சில தபால் காரியாலயங்கள்- குறிப்பாக தந்திச் செய்தி களை அறிவிப்பதில் தாமதமடைகின்றன. உதாரணமாக, ஒரு காரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியர் சம்மாந்துறையிலேயே இருந்து கொண்டு, முக்கிய விடயமாகவோ அல்லது சுகமில்லாமலோ, அன்று காரியால யத்துக்குச் சமூகம் கொடுக்காமல் தந்திச் செய்தி அனுப்பினால் அது அன்றைய நாளில் கிடைப்பதில்லை. மறு நாளோ அல்லது அதற்கடுத்த நாளோதான் கிடைக் கின்றது. அவ்வூழியன் மறுநாள் காரியால யத்துக்குச் சென்று அவன் கையாலேயே இத்தந்திச் செய்தியை காரியாலயத் தலை வரிடம் எடுத்துக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றதாம். ஆக, இது தந்திச் செய்தியா? அல்லது தபால் செய்தியா? என காரியாலயங்களில் வேலை செய்யும் ஊழியர் கள் முறைப்பட்டுக் கொள்கின்றனர்.

எனவே தபால் காரியாலயங்கள் முக்கிய தந்திச் செய்திகளை அறிவிப்பதில் இனி மேலாவது சிறப்பாக இயங்க வேண்டும்.

பீ.எம்.ஹிதாயத்துள்ளாஹ், சம்மாந்துறை.

## மட்டக்களப்பில் தொண்டர் நிறுவனங்கள்
## படையினர் விவரம் சேகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவிப் பணி களில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களினதும் சமூக சேவை அமைப்புக்க ளினதும் விவரங்களைப் படையினர் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நிறுவனம் எப்போதிருந்து செயற்படு கிறது: வலிந்துதவு நிறுவனமாயின் மக்களின் சேமிப்பைக் கொண்டா அல்லது உள்நாட்டு வெளிநாட்டு நிதி உதவியைக் கொண்டு இயங்கு கிறதா? நிறுவனத்திற்கு நிதி கிடைக்கும் விதம்? நிறுவனத்தினால் வழங்கப்படும் உதவிகள் எத்தகைய மக்களைச் சென்றடைகின்றன? கொடுக்கப்படும் உதவிகள் திரும்பப் பெறப்படு கின்றனவா? கல்வித் திட்டமாயின் அதன் மூலம் எத்தகைய விழிப்புணர்ச்சி மக்களுக்கு புகட்டப்படுகிறது? நிறுவனத்தில் செயலாற்றும் அலுவலர்கள், அவர்கள் பாவிக்கும் வாகனகள், அவர்களது சுய விலாசங்கள், இதுவரை காலமும் நிறுவனங்களால் நிறைவேற்றப்பட்ட பணிகள், நிறுவனங்கள் செயற்படும் இடங்கள், நேரங்கள் போன்ற விவரங் களே இப்பொழுது படையினரால் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது ஒரு புறமிருக்க, உதவி நிறு வனங்கள் என்ற போர்வையில் உளவுக் கும் வருவார்கள் என்பதனால் எச்சரிக் கையாயிருக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளும் துண்டுப்பிரசுர மொன்றைப் புலிகள் சிலமாதங்களுக்கு முன்னர் வெளி யிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.


### சுவிஸ் தமிழ் கலாசார மன்றம்

9 வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தும் பேச்சுப் போட்டி

**சுவிஸ் வாழ் தமிழ் மாணவ மாணவிகளே!**

எமது தாய் மொழியை நாம் எவ்விடம் இருப்பினும் மறவாது பேண வேண்டும் என்பதற்கமைய இந் நாட்டிலும் செந்தமிழ்தனை பேணிக் காக்க எமது மன்றம் எதிர்வரும் தமிழ்ப்புத்தாண்டில் பேச்சுப் போட்டியை நடத்தவுள்ளது. இது உங்களுக்கோர் அரிய வாய்ப்பு. இதனைப் பயன்படுத்தி இலை மறை காய் போல் இருக்கும் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள்.

**விடயங்கள் பின்வருமாறு:**

1. கீழ்ப்பிரிவு: 8 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் 3 நிமிடங்கள்
   தலைப்பு: அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
   விபுலானந்தர்
   நான் விரும்பும் மலர்

2. மத்தியபிரிவு: 9-13 வயதிற்குட்பட்டவர்கள் 5நிமிடங்கள்
   தலைப்பு: நான் விரும்பும் தொழில்
   ஆறுமுகநாவலர்
   தமிழ் எமது தாய்மொழி

3. மேற்பிரிவு: 14-18 வயதிற்குட்பட்டவர்கள் 7 நிமிடங்கள்
   தலைப்பு: தமிழ்க்கல்வி
   நான் விரும்பும் ஈழத்துப்புலவர்
   மனித உரிமைகள்

போட்டியில் வெற்றி பெறும் மாணவ மாணவிகளுக்கு
1 ஆவது பரிசு தங்கப்பதக்கம்
2 ஆவது பரிசு வெள்ளிப்பதக்கம்
3 ஆவது பரிசு சிறந்த புத்தகங்கள்

உங்கள் விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி

Tamilen Kultural Zentrum
Post fach 876. 8038 Zurich.

*விண்ணப்ப முடிவுத்திகதி 31.03.1996*

மேலதிக விபரங்களுக்கு 01-4919147 அல்லது 01-3621462 அல்லது 077-594283 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.



1996ஆண்டுஆகஸ்ட் மாதம்
நடைபெறவுள்ளஆண்டு 5 புலமைப்பரிசில்
போட்டிப் பரீட்சைக்கான
**BRIGHT ன் வெற்றிக்கனி இதழ்**
7முதல்12வரை முன்னோடிப் பயிற்சி நூல்
மாதந்தோறும் வெளி வருகின்றது.

மாணவர்களின் நலன் கருதி 1995 ஆண்டு வினாப்பத்திர வினாக்களை போல தயாரிக்கப்பட்டு மாதந்தோறும் வெளி வரும். ஆண்டு 5 மாணவர்கள் பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெற்றுக்கொள்ள பாவிக்க வேண்டிய நூல்

**வெற்றிக்கனி யாகும்.**

வெற்றிக்கனி இதழ் 7 முதல் 12 வரை பெறவிரும்பும் மாணவர்கள் 5 இதழ்களுக்கும் 250/= ரூபாவை செலுத்தி தொடர்ந்து பெற்றுக்கொள்ளமுடியும். இதழ் 1முதல் 6 வரையான வெற்றிக்கனிக்களஞ்சியமும் 250/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கட்டணத்தை காசுக் கட்டளையாக The Director - BBC எனும் பெயருக்கு SEA STREET SPO தபாற்கந்தோரில் பெறக்கூடியதாக, பதிவுத் தபாலில் விண்ணப்பத்துடன் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

முழுப்பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
காசுக்கட்டளை இல : ........................................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S - 27 FIRST FLOOR, P.O. BOX - 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11 T.P : 434770



# சுவிட்சர்லாந்தில்
# ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்கு மாணவர்கள் தேவை
## 1996 ஆம் ஆண்டுக்கான மாணவர் அனுமதி

இலங்கைப் பிரஜைகளிடமிருந்து பின்வரும் பாடநெறிகளுக்காக சுவிட்சர்லாந்திலுள்ள ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி நிலையத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(1) உணவு மற்றும் விடுதிகள் சிற்றுண்டிச்சாலைகளுக்கான முகாமைத்துவம். (1வருடம்)
CERTIFICATE IN FOOD & BEVERAGE MANAGEMENT (1 YEAR COURSE)

(2) அறைகளைக் கொண்ட கட்டிட பிரிவுகளுக்கான முகாமைத்துவம். (1வருடம்)
CERTIFICATE IN ROOMS DIVISION MANAGEMENT (1 YEAR COURSE)

(3) ஹோட்டலை வழிநடத்துவதற்கான முகாமைத்துவம். (2வருடம்)
DIPLOMA IN HOTEL OPERATIONAL MANAGEMENT (2 YEAR COURSE)

(4) உயர்முகாமைத்துவத்திற்கான, உல்லாச பிரயாணத்திற்கான முகாமைத்துவ டிப்ளோமா. (3வருடம்)
HIGHER DIPLOMA IN HOTEL MANAGEMENT & TOURISM (3 YEAR COURSE)

**தகைமைகள்:** க.பொ.த (சா.த) மற்றும் அதற்கும் மேற்பட்ட தராதரம்–17 வயதுக்கு மேற்பட்டிருப்பதோடு ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கல்வியாண்டும் ஐந்து மாத வகுப்பறைக் கல்வியும் ஏழுமாத நடைமுறைப் பயிற்சியும் உள்ளடக்கப்பட்டதாக இருக்கும்.

நடைமுறை பயிற்சிக்காலத்தின் போது மாதாந்தம் எஸ்.எப்.ஆர். 2,000 முதல் 2,500 வரை படியாக வழங்கப்படும். ஆண்டுக்கு எஸ்.எப்.ஆர். 10,000 வரை (இலங்கை நாணயப்படி சுமார் ரூபா.4,70,000) சேமிக்கலாம்.

சுவிஸ் ஹோட்டல் முகாமைத்துவ பாடசாலையின் இலங்கைப் பிரதிநிதியை மாணவர்களும் பெற்றோரும் 1996 மாசி மாதம் 25ஆம் திகதியிலிருந்து சந்தித்து சுவிட்சர்லாந்தில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை பற்றிய மேல் விவரங்களையும் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**தளுவத்த அண்ட் ஜெப்பே அசோசியேட்ஸ்.**
**LG 15, பீப்பிள்ஸ் பாக் சொப்பிங் கொம்பிளெக்ஸ்**
**கொழும்பு - 11.**
**தொ.பே. *320139***
(குணசிங்கபுர தனியார் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்)





33 வருட கடும் சேவைக்கு பின் உலக மாந்திரீக சக்ரவர்த்தி என பட்டமெடுத்த எமது நிர்வாகத்தில் தெட்டத்தெளிவான சேவை என்னவென்றால் மலையாள மாந்திரீகமோ அல்லது ஜோதிட ஆயுள் கணிப்போ வீட்டுக்கு வீடு வாசல்படி உண்டு. பல மொழிக்கு ஒப்ப எனது நிர்வாகத்தில் எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு என்ன கிழமை உங்கள் உந்தன் விடயம் சரிவரும் என்று கருதி உறுதிமுத்திரையுடன் வாங்கும் பணத்திற்கு அத்தாட்சி வழங்கி பெயர் வாங்கிக் கொண்டிருப்பது அரசு அங்கிகாரம் பெற்ற திரு.பி.கே.சாமி (ஜே.டி.ஜீ.என்)ஜே.பி.யின் பி.கே.சாமி அசோசியட் தனியார் நிறுவனம் உண்மை பொய் அறிய நேரில் வந்து காணலாம் திரு.பி.கே.சாமி அவர்களை காலை ஆறு முதல் மாலை 2.00 மணிவரையே சந்திக்கலாம். நேரில் மட்டுமே அவரின் ஆலோசனை பெறலாம். தெளிவுரையாளர் மூலமே தொலைபேசியில் பேசலாம். ஆலோசனைக் கட்டணம் ரூபா 250. வெளிநாட்டவர்கள் ஆலோசனைக் கட்டணம் ரூபா 2000. அவர் அவர் கையிலேயே மாந்திரீகப் பார்சலை ஒப்படைக்க அவர்களது உண்மையான தொலைபேசி சரியான இலக்கத்தை குறிப்பிட்டு அங்கத்தவர் கட்டணம் 2000 ரூபா அனுப்பினால், அவர் இல்லத்திலேயே அவர்களது கையிலேயே எமது பிரதிநிதி பார்சலை ஒப்படைப்பார். வெளிநாட்டவரோ உள்நாட்டவரோ மலையாள மாந்திரீக சக்தி உதவி தேவையென்றால் உண்மை சேவையான எமது ஸ்தாபனத்திற்கு வருகை தரலாம்.

**நேரிலோ, அல்லது தொலைபேசியிலோ, கடிதத்தொடர்புகளுக்கோ**

திரு.பி.கே.சாமி (J.D.G.A.N) JP
ஸ்ரீ துர்க்காதேவி ஸ்தானம்,
162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு–13.

தொலைபேசி வரிகள்:– 01-342463, 342464, 344432, 344431.
நுவரெலியா:– 052 3093, 2508, 3570, 3336.

இன்னும் உண்மை விளங்க எமது விளம்பர சேவை 'ஜோதிடம் பார்ப்போம்' நிகழ்ச்சி பிரதி சனிக்கிழமைதோறும், காலை 10.45 மணிக்கு FM 99இல் நடைபெறும் கேட்டு உண்மை அறியலாம்.

www.padippakam.com

# அரசின் புலிச்சவாரி

# பதிலடிக்கு முஸ்தீபு

**கொ**ழும்பைப் பொறுத்தவரை புலிகளது தாக்குதல் முறைகள் இரண்டு வகைப்படுகின்றன.

1. குண்டுத்தாக்குதல். 2. அதிரடித் தாக்குதல்.

ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர் கள் மற்றும் கைக்குண்டுகள் மூலம் நடத்தப் படுவதே அதிரடித் தாக்குதல்.

கொலன்னாவ, ஒருகொடவத்த எரிபொருள் நிலையங்கள்மீது நடத்தப்பட்டது அதிரடித்தாக்குதல்.

மத்திய வங்கி கட்டிடம், அதற்கு முன்னர் கூட்டுப்படை தலைமையகம் மீதும், கடற்படைத் தளபதி, காமினி திசாநாயக்கா, பிரேமதாசா போன்றோர் மீதும் நடத்தப்பட்டது குண்டுத்தாக்குதல்.

குண்டுத்தாக்குதல் மூலம் கட்டிடங்களை தகர்ப்பதாயின் வாகனங்களில் வெடிமருந்துகளை நிரப்பிக்கொண்டு சென்று மோதவேண்டும்.

குண்டுத்தாக்குதல் மூலமாக தனிநபர்களை கொல்வதாயின் மனிதக் குண்டாக ஒருவர் அல்லது இருவர் அனுப்பிவைக்கப்படுவார்கள். வெடிகுண்டை பொருத்திய உடையை தற்கொலைப்பிரிவு நபர் அணிந்து வருவார்.

அதிரடித்தாக்குதல் பிரிவினரும் கொழும்பில் நடத்தப்படும் தாக்குதல்களில் தற்கொலைப் படையாகவே அனுப்பப்படுகின்றனர்.

தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் செல்ல முடியாதபோது, எதிர்த்தரப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தியபடி தற்கொலையாகிவிடுவர்.

சயனைட் விழுங்கி பலியானால் எதிர்த்தரப்புக்கு பாதிப்பு ஏற்படாது. மனிதக்குண்டாக பலியானால் பாதிப்பு ஏற்படும்.

அதனால்தான் வடக்கு-கிழக்குக்கு வெளியே தாக்குதலில் ஈடுபடும் புலிகளது அதிரடிப் பிரிவினருக்கு வெடிகுண்டு பொருத்திய ஜாக்கெட் அணியுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி கட்டிட தாக்குதல் போன்ற பாரிய நடவடிக்கைகளில் ஈடுபட அனுப்பிவைக்கப்படும் தாக்குதல் பிரிவினர் பிரியாவிடை கொடுத்தே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

உத்தரவைமீறி உயிர்தப்ப நினைத்துத்தான் கொழும்பு மத்தியவங்கி தாக்குதலில் ஈடுபட்ட இருவர் மாட்டிக்கொண்டார்கள்.

அதனையடுத்து இருவருமே தமக்கு தெரிந்த அனைத்தையும் விலாவாரியாக ஒப்புக்கொண்டுள்ளனர்.

அவர்கள் கொடுத்த தகவல்களை வைத்து புலிகளுக்கு உதவி செய்த வர்த்தகர்கள் பலர் பொலிசாரின் வலையில் சிக்கியுள்ளனர்.

எனினும், ஒரு குறிப்பிட்ட வரையறைக்கு அப்பால் கொழும்பில் புலிகளது நடமாட்டங்கள் நடவடிக்கைகள் பற்றி அந்த இருவருக்கும் தெரியாது.

அதனால் கொழும்பில் புலிகளது இரகசிய தளம் எங்கே இருக்கிறது, எங்கெங்கே பதுங்குமிடங்கள் உள்ளன என்பவை தொடர்பாக பூரண விபரங்களை புலனாய்வாளர்களால் பெறமுடியவில்லை.

கைதுசெய்யப்பட்ட இருவரும் கொடுத்த தகவலின்படி மேலும் நான்கு வாகனங்கள் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட நிலையில் இருப்பதை அறிய முடிந்தது.

ஆனால் அவை எங்கே நிறுத்தப்பட்டுள்ளன? நான்கு வாகனங்களும் எந்த ரகத்தைச் சேர்ந்தவை? லொறியா? வேனா? காரா? போன்ற விபரங்கள் கைதான இருவருக்கும் தெரியாது.

கொழும்பில் மிகவும் திட்டமிட்ட முறையில் இரகசிய வேலைமுறையை புலிகள் உருவாக்கியுள்ளனர்.

ஆட்கள், ஆயுதங்கள் என்பவை பல்வேறு பிரிவுகளாக பிரித்துவைக்கப் பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் மக்கள் மத்தியில் பிரபலமாகாதவர்கள்தான் கொழும்புக்கு அனுப்பப்படுகிறார்கள்.

பாரிய தாக்குதல்களுக்கான இலக்கு தொடர்பான தகவல்களை சேகரிக்க ஒரு குழு இருக்கிறது.

அக்குழு தாம் சேகரித்த தகவல்களை தலைமைக்கு அனுப்பிவைக்கிறது. அத்தகவல்களைவைத்து தாக்குதல் எப்படி நடத்தப்பட வேண்டும்? எத்தனை பேர் பங்குபெற்ற வேண்டும்? போன்ற முடிவுகள் தலைமையால் மேற்கொள்ளப்படுகின்றன.

திட்டம் போடப்பட்டவுடன் தாக்குதலுக்கு தேவையான ஆட்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட தாக்குதல் தொடர்பாக மட்டுமே அவர்களுக்கு தெரிந்திருக்கும்.

வேறுதாக்குதல் தொடர்பாகவோ, கொழும்பில் உள்ள தமது ஏனைய பிரிவுகள் தொடர்பாகவோ அவர்களுக்கு தெரிந்திருக்காது.

கொழும்பு மத்திய வங்கி தாக்குதலில் பங்குகொண்டவர்கள், தாக்குதல் நடத்தப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்கள்.

வெவ்வேறு இடங்களில் தனித்தனியாகத் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். அதனால்தான் அவர்கள் கைதுசெய்யப்பட்ட போதும் ஒரு வரையறைக்கு அப்பால் விபரங்கள் தெரிந்திருக்கவில்லை.

சமீபத்தில் கொழும்பு நாரஹென்பிட்டியில் ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

16 கைஎறி குண்டுகள் (கிரனைட்), 2 ஆர்.பி.ஜி. ரக ரொக்கட்டுக்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆர்.பி.ஜி ரக ரொக்கட்டுக்கள் இருக்கின்றன. அவற்றை ஏவும் லோஞ்சர்கள் அங்கு காணப்படவில்லை.

ஏற்கெனவே கொழும்பில் நடைபெற்ற தாக்குதல்களில் ஒன்றுக்கு பயன்படுத்த அந்த லோஞ்சர் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். தேவைக்கு அதிகமாக இருந்த இரண்டு ரொக்கட்டுக்களை விட்டுச் சென்றிருக்கலாம் என்று நம்ப இடமுண்டு.

எனவே, கொழும்பில் புலிகளது இரகசிய ஆயுத விநியோக தளங்களில் ஒன்றாக நாரஹென்பிட்டி விகாரை வளவு பயன்பட்டிருக்கிறது.

சந்தேகம் வராதமுறையில் தமது ஆயுதக் கிடங்குகளை புலிகள் கொழும்பில் வைத்திருக்கின்றனர்.

பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த மத நிறுவனங்களுக்கு அரசாங்கமும், படைத்தரப்பும் காட்டிவரும் சலுகைகளை மிகத் திறம்பட பயன்படுத்தியுள்ளனர் புலிகள்.

நாரஹென்பிட்டி விகாரையோடு சேர்ந்து இதுவரை நான்கு விகாரைகள் புலிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதல் மூன்று விகாரைகளிலும் வெடிமருந்து மற்றும் ஆயுதங்கள் வைக்கப்பட்ட வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

ஒருகொடவத்த- கொலன்னாவ எண்ணெய் நிலையங்கள் மீதான தாக்குதலுக்குரிய ஆயுதங்களோடு தயாராக இருந்த லொறியும் ஒரு விகாரையில் தான் நிறுத்தப்பட்டிருந்தது.

சமீபத்தில் கொட்டாஞ்சேனையில் உள்ள விகாரை வளவொன்றில் வெடிகுண்டு நிரப்பப்பட்ட லொறியொன்று மாட்டியது. அதற்கு முன்னரும் அப்பகுதியில் உள்ள வளவொன்றில் வெடிகுண்டு நிரப்பப்பட்ட வேன் ஒன்று பிடிபட்டது.

எனினும் நாரஹென்பிட்டி விகாரை விடயம் சற்று வித்தியாசமானது. விகாரை வளாகத்தில் வேறு பலரும் தங்கியிருந்தனர். அப்படி இருந்தும் கூட கைக்குண்டுகளையும், ஆயுதங்களையும் நிலத்தில் தோண்டி மறைத்து வைத்தது கில்லாடி வேலைதான். சகலரது கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு காரியம் பார்த்திருக்கிறார்கள்.

"பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது, கருடா சௌக்கியமா?" பௌத்த விகாரைகளுக்குள் புலிகள் தமது இரகசிய திட்டங்களை மேற்கொண்டதும் அந்த மாதிரித்தான். அரசாங்கம் அதிர்ந்து போய் நிற்கிறது.

எந்தப் புற்றுக்குள் பாம்பிருக்கிறது? என்று கண்டு பிடிப்பதைவிட தலைவலியான வேறு வேலை இருக்க முடியாது.

அதுதவிர வேறு ஒரு புதிய பிரச்சனையும் ஏற்பட்டுள்ளது.

நாரஹென்பிட்டிய விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளவர் தொழில் திணைக்களத்தில் பொறுப்பான பதவியில் இருந்த தமிழர். அதாவது உதவித் தொழில் ஆணையாளர்.

ஏற்கெனவே கொழும்பில் பணியாற்றும் தமிழ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் விடயத்தில் பாதுகாப்பு தரப்புக்களது சந்தேகப்பார்வை விழுந்திருந்தது.

நாரஹென்பிட்டி விவகாரம் அந்தச் சந்தேகப் பார்வைக்கு நியாயம் கற்பிக்க உதவியாகிவிட்டது.

உதவி ஆணையாளர் என்ற உயர்ந்த பொறுப்பில் இருப்பவரே புலிகளது முக்கிய புள்ளியாக இருந்திருக்கிறார். யாரைத்தான் நம்புவது? என்று கேட்கப் போகிறார்கள்.

எனவே- முக்கிய திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் இருக்கும் தமிழர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவார்கள். அதுதவிர வாயில் காவலர்கள் முதல், சக ஊழியர்கள் வரை வீசப்போகும் சந்தேகப் பார்வைகள், விசேஷ கவனிப்புக்கள் என்பவற்றுக்கும் உள்ளாகப் போகிறார்கள்.

மறுபுறத்தில் நோக்கும்போது, புலிகளது போராட்டம் தமிழ் மக்கள் மத்தியில் சகல மட்டங்களிலும் ஆதரவைப் பெற்றிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

கைநிறையச் சம்பளம் வாங்கும் ஒரு அதிகாரி, புலிகளது கைக்குண்டுகளை மறைத்துவைக்கும் வேலையைச் செய்ய நேர்ந்ததும் அதனால்தான்.

ஏதோ வற்புறுத்தல் காரணமாகவோ அல்லது தற்செயலாகவோ அவர் புலிகளுக்கு உதவியதாகக் கருத இடமில்லை.

மறைவான இடமாக இருக்கக்கூடிய, சந்தேகப் பார்வைகளுக்கு அப்பாற்பட்ட விகாரை வளாகத்தில் அவர் அறை எடுத்துக் கொண்டதே ஒரு நோக்கத்தோடுதான்.

யாழ்ப்பாணத்திற்கு மாற்றல் உத்தரவு வந்தும்கூட அவர் செல்லாமல் இருந்திருக்கிறார்.

கொழும்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ள மிக முக்கியமான புலிகளோடு மட்டுமே அவருக்கு தொடர்பு இருந்திருக்கிறது.

கொழும்பில் தேடப்படும் சந்தேக நபர்கள் என்று சிலரது புகைப்படங்களை பாதுகாப்பு தரப்பினர் வெளியிட்டிருந்தனர். பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தன.

அப் புகைப்படங்களில் உள்ளவர்களில் ஒருவர் உதவி ஆணையாளர் தர்மலிங்கத்தை அடிக்கடி வந்து சந்தித்துள்ளார்.

பத்திரிகைகளில் வெளியான புகைப்படங்களை பார்த்த விகாரையின் குருவுக்கு சந்தேகம் வந்துவிட்டது. அதிலிருந்துதான் ஆரம்பமானது வினை.

மத்திய வங்கி குண்டுவெடிப்பு நடைபெற்ற பின்னர் தர்மலிங்கத்தை அறையில் காணவில்லை. அதற்கு முன்னர் கொலன்னாவ- ஒருகொடவத்த எண்ணெய் நிலையத் தாக்குதல்கள் நடைபெற்ற போதும் தர்மலிங்கம் அறையில் இருக்கவில்லை. எல்லாவற்றையும் முடிச்சுப் போட்டுப் பார்த்ததில் விகாரைக் குருவுக்கு சந்தேகம் பெருகிவிட்டது.

பொரளை பொலிசாரிடம் போய்ச் சொன்னாராம். அவர்கள் விசாரித்துப் பார்த்திருக்கிறார்கள். உதவி ஆணையாளர். வயது 56. பல வருடங்களாக கொழும்பில் இருக்கிறார். ஆகவே சந்தேகப்படத் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள்.

இறுதியாக பொலனறுவையில்வைத்து சந்தேகத்தின் பேரில் தர்மலிங்கத்தை கைது செய்து விசாரித்திருக்கிறார்க்ள்.

எதற்கும் ஒரு முறை அவர்தங்கியுள்ள வீட்டைப் பார்க்கலாம் என்று அழைத்து வந்திருக்கிறார்கள். அப்படியே விகாரை வளவுக்குள் மேலோட்டமாக சென்று பார்த்தபோது, மண்ணுக்கு வெளியே தலை நீட்டிக் கொண்டிருந்த பொலித்தீன் பை கண்ணில் பட்டது. சற்று உறுத்த லாக இருக்கவே; அந்த இடத்தை மெல்ல தோண்டி யிருக்கிறார்கள்.

பொலித்தீன் பைக்குள் ஒரு பொம்மை. பொம்மை ஏன் பாரமாக இருக்கிறது? உடைத்துப் பார்த்தால் உள்ளே கைக்குண்டுகள்.

நடந்தது அதுதான். ஆனால் பத்திரிகைகளில் ஆளாளுக்கு ஒவ்வொரு தகவலை வெளியிட்டு சின்னதாக ஒரு குழப்பு குழப்பி விட்டார்கள்.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள ராமலிங்கம் தர்மலிங்கம் மூலமாகக்கூட கொழும்பில் புலிகளது ஏனைய மறைவிடங்களை கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் தர்மலிங்கத்துக்கு ஆயுதங்களை மறைத்து வைத்து விநியோகிக்கும் பொறுப்புத்தானே தவிர, புலிகளின் கொழும்பு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் ஆதியோடு அந்தமாக அவருக்கு தெரிந்திருக்க முடியாது.



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

### நாரதர்

தர்மலிங்கம் புதைத்துவைத்துள்ளவற்றில் கைக்குண்டுகளும், ரொக்கட்டுக்களும் காணப்படுகின்றனவே தவிர, வெடிமருந்துகள், மற்றும் ரொக்கட்டுக்களை ஏவும் ஆயுதங்கள், துப்பாக்கிகள் என்பவை காணப்படவில்லை.

கொழும்பு தாக்குதலில் வெடிகுண்டுத் தாக்குதலே பிரதான பங்கு வகிக்கிறது. அதுதவிர தற்கொலைப்பிரிவினர் பயன்படுத்தும் வெடிகுண்டு பொருத்தக்கூடிய உடைகளும் முக்கியமானவை.

மத்திய வங்கித் தாக்குதலுக்கு 400 கிலோ வெடிமருந்தை புலிகள் பயன்படுத்தி இருந்தார்கள். ஆகவே வெடிமருந்துக்கு சற்றும் தட்டுப்பாடு இல்லாமல் புலிகள் தாராளமாகவே வைத்திருக்கின்றனர்.

அப்படியிருந்தும் வெடிமருந்துகள் எவையும் நாரஹென்பிட்டியில் மாட்டவில்லை.

ஆக, புலிகளது பிரதான தளம் ஒன்று கொழும்பிலோ, அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள பகுதி ஒன்றிலோ இருக்கிறது.

எனவே- கொழும்பில் புலிகளது தாக்குதல் வியூகம் தகர்ந்து போய்விட்டதாக கருத இடமில்லை. தலைநகருக்கு ஆபத்து இல்லாமல் போய்விட்டதாக முடிவு செய்யவும் முடியாது.

யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைகொண்டுள்ளனர். கொழும்பில் புலிகள் நிலைகொண்டுள்ளனர்.

படைகள் எங்கு முகாம் அமைத்துள்ளார்கள் என்று புலிகளால் கண்டு பிடிக்க முடியும். கொழும்பில் புலிகள் எங்கு தங்கியுள்ளார்கள், எந்தெந்த ரூபங்களில் மறைந்திருக்கிறார்கள் என்று படைகளால் கண்டு பிடிக்க இயலாது. வில்லங்கமே அதுதான்.

மத்திய வங்கித் தாக்குதலை புலிகள் நடத்தி முடித்தபின்னர், புலிகளுக்கு எப்பாடுபட்டாவது பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட் டுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளிலும் அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

அரசின் நிலை புலிச்சவாரி மாதிரித்தான். போர் மூலம் புலிகளை ஒழித்து கட்டியே தீருவேன் என்று அரசாங்கம் சூளுரைப்பது மூலம் புலியின் மீது ஏறி அமர்ந்துவிட்டது.

இனி இறங்குவது சுலபமில்லை. புலிச்சவாரியில் ஒரு கஷ்டம் அதுதான். புலியின் மீது ஏறி இருப்பவர் தானாக விரும்பினாலும் கீழே இறங்கமுடியாது. புலி பாய்ந்து தின்றுவிடும். எனவே புலியின் இழுப்புக்கு ஏற்ப செல்ல வேண்டியதுதான்.

வென்றே தீருவோம் என்று போரை ஆரம்பித்த பின்னர் இடைநடுவில் கைவிட்டால், எதிர்க்கட்சி கைகொட்டிச் சிரிக்கும். அடுத்த தேர்தலில் வாக்கு வங்கிகள் கைவிட்டுப் போகும்.

எனவே-கொழும்பில் புலிகள் தாக்கினால் 'எதிர்பார்த்ததுதான்' என்று சொல்வதைத் தவிர வேறுவழியில்லை. ஆனால் சொல்வதோடு மட்டும் நிறுத்தினால் மக்களின் கோபம் அரசாங்கத்தை நோக்கி திரும்பும்.

தாமாகவே உருவாக்கிய 'போர் மூலம் புலிகளைத் தோற்கடிப்போம்' என்ற முழக்கத்தை அரசாங்கம் சுலபமாக கைவிடமுடியாது.

எனவே-மற்றொரு பாரிய நடவடிக்கைக்கு திட்டமிடுவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை.

தரைப்போக்குவரத்துப் பாதையை திறப்பது அல்லது கிளிநொ[illegible]சியிலும் புலிகளுக்கு அடிகொடுப்ப[illegible] என்ற திட்டத்தோடு படைகள் மு[illegible]விடப் படலாம்.

கிளிநொச்சி மற்றும் ஆ[illegible]றவு இராணுவ முகாம்கள் பலப்படு[illegible]ட்டு வருகின்றன.

அப்படி ஒரு நடவடிக்கை [illegible]ப மானால் புலிகள் தலைநகரில் தமது கைவரிசையைக் காட்டுவார்கள். அதனை எதிர்பார்த்து பாடசாலைகளை மூடியும், இயல்பான நிலையைப் பாதிக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்தும் கொண்டு விழிப்பாக இருப்பது நீண்டகாலத்திற்கு ஏற்றதல்ல.

பாடசாலைகளை தொடர்ந்து மூடுவதால் மெல்ல மெல்ல முணுமுணுப்புக்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன. இனியும் இரண்டில் ஒன்று பார்க்காமல் காலத்தை நீடிக்க முடியாது.

ஒன்றில் போரில் வெல்ல வேண்டும். அல்லது புலிகளோடு பேச்சில் ஈடுபட வேண்டும். முதலாவதுதான் அரசாங்கத்திற்கு லாபம். புலிகளோடு பேசச் செல்ல முன்னர் அவர்கள் பலவீனமாக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். ஆனால் அது நிறைவேறாது என்று மக்கள் நினைக்குமளவுக்கு புலிகள் கெரில்லாப் பாணியிலான பதிலடிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கில் மற்றொரு பாரிய நடவடிக்கையை படைகள் மேற்கொண்டால்கூட புலிகள் எதிர்த்தாக்குதலை பெரியளவில் செய்யப்போவதில்லை.

படைகள் தமது பலத்தை பரவலாக்கிக்கொள்ளட்டும் என்று விட்டு விடுவார்கள். கொழும்பில்தான் அதன் பிரதிபலிப்பை காட்ட நினைப்பார்கள்.

அதற்கான ஏற்பாடுகளை புலிகள் செய்துவருகின்றனர் என்பதுதான் தகவல். பாரிய குண்டுவெடிப்பை அடுத்து படையினர் உஷாரான சோதனைகளில் ஈடுபடுவார்கள். பின்னர் மெல்ல மெல்ல உஷார் குறையும். அப்போதுதான் புலிகள் தமது இலக்கை நோக்கி அம்மை எய்ய நேரம் குறிப்பது வழக்கம்.

எனவே-இரு தரப்பும் பதிலடி முஸ்தீபுகளில் இறங்கியுள்ளன. ஆனால் குறைந்த ஆட்பலத்தில் நிறைந்த இழப்பை ஏற்படுத்தும் புலிகளது தாக்குதலை எதிர்கொள்வது எப்படி என்பது அரசுக்கு பெரும் பிரச்சனைதான்.



## அதிரடி அய்யாத்துரை

**ஹா**யாக ஊர்வலம் வந்த மதத்தலைவர்கள் பாடுதானுங்கோ திண்டாட்டமாய் போச்சுது. அவை மாதிரியே ரெண்டு எழுத்தார் ஊடுருவலாம் எண்டு தகவல் வந்தபிறகு அவை போற இடங்களில் தடவல் நடக்குதாம். ஆசீர்வாதம் செய்துபோட்டு நோகாமல் இருக்கக்கூடிய காலமோ இது?

**நீ**ர் கொழும்பிலை கேட்ட சத்தம் என்னவென்று அறியவே ஒருநாள் தேவைப்பட்டிருக்குது. அரச வெகுஜன தொடர்பு சாதனங்களும் வெடிச்சுப் போட்டுது எண்டுதான் சொல்லிக் கொண்டிருந்தவை. வதந்திகளை பரப்ப வேண்டாம் எண்டு சொல்லிக்கொண்டே தாங்களும் வதந்தி பரப்பலாமோ? விமானம் எழுப்பிய ஒலிதான் சத்தம் வந்ததுக்கு காரணம் எண்டு சம்பவம் நடைபெற்ற மாலையே தெரிஞ்சு போச்சு. அரச வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கு மட்டும் தெரியாது. எங்கைபோய் சொல்லுறது?

**தே**சிய தொலைக்காட்சியிலை உலகக் கிண்ணப் போட்டி காட்டுகினம். பொறுத்தகட்டதில் தடங்கல் வந்து தொலைக்குது. அதை மறைக்க இடையில் ஒருவர் தோன்றி அசட்டுத் தனமாக சிரித்துவிட்டு அறுக்கிறார். அறுவையிலும் தமிழுக்கு இடம் கொடுக்காமல் கவனமாகப் பார்த்துக் கொள்கிறார்கள். செந்தமிழைக் கேட்க வேண்டுமானால் யாராவது அவுட்டாகும் வரையும் பொறுமை காக்க வேணும். வாழ்க, சம மொழி அந்தஸ்து.

**எ**த்தனை தடவை அமைச்சராக இருந்தும் மலையக தனித்துவத் தலைவரால் பெரும்பான்மை இன மக்களது ஆதரவைப் பெறமுடியேல்லை. பலருக்கு அவரைக் கண்ணிலையே காட்டக்கூடாது. ஆனால் முரளி மைதானத்திலை இறங்கினாலே போதும் பெரும்பான்மை இன ரசிகர்கள்கூட விசில் அடிச்சு பயங்கர ஆதரவுங்கோ. இன ஒற்றுமையின் சின்னமாக முரளிதரனை அறிவிச்சால் என்ன?

**தீ**ர்வு யோசனையில் ஏனைய தமிழ் கட்சிகளோடு சேரப் போவதில்லை எண்டு மேலிடத்துக்கு உறுதி கொடுத்திருக்கிறாராம் நீலமானவர். தமிழ்கட்சிகள் பேசக் கேட்டதுக்கு, மத்திய குழு, செயற்குழு, பொதுக்குழு எல்லாம் கூடித்தான் முடிவெடுக்கவேணும் எண்டு சொல்லப்பட்டதாம். சொல்லி ஒரு மாதமாச்சு. குழு எப்போது கூடும். வரம் எப்போது கிடைக்கும் எண்டு தமிழ் கட்சிகள் காத்திருக்குமோ?

**மூ**தூர் விவகாரத்திலை முழுப் பூசணிக்காயை சோற்றில் அதுவும் ஒரு அகப்பை சோற்றில் மறைக்க முற்பட்டது பரவலான அவநம்பிக்கைகளை ஏற்படுத்தியிருக்குது. திருவான மலையின் தங்கமானவர் எடுத்த நிலைப்பாட்டில் உறுதி காணாது எண்டு ரெண்டு எழுத்து வானொலியில் கண்டிக்கப்பட்டதாம்.

**ப**த்துவருசம் கொழும்பிலை இருக்கிறோம் எண்டு சொன்னால் விசாரணைகளில் இருந்து தப்பலாம் என்பது பழைய கதை. இப்ப எல்லாம் மாறிப்போச்சுது. அண்மையில் ஒருவரை பொலிசார் விசாரிச்சவையாம். நான் ஐந்து வருடமாக கொழும்பில் இருக்கிறேன். சந்தேகப்படுவது நியாயமோ? என்று கேட்டாராம் நண்பர். அதற்கு பொலிஸ்காரர் சொன்ன பதில்: "ஐந்து வருசம் என்ன பதினைஞ்சு வருசம் கொழும்பில் இருந்தவையே அவைக்கு உதவி செய்து சிக்கியிருக்கினம்." எண்டாராம். இனி என்ன சொல்லித் தப்புறது!

**ப**ள்ளிக்கூடங்கள் மூடப்பட்டதாலை மாணவ சமூதாயத்திலை எக்கச்சக்கமான மகிழ்ச்சி. கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகளை ரசிக்க சான்ஸ் கிடைச்சிட்டுதல்லோ. உலகக் கோப்பை போட்டி நேரத்திலை விடுமுறையை அனுபவிக்கும் மாணவ சமுதாயம் உலகிலேயே நம்நாட்டில்தான் இருக்கும் எண்டு நினைக்கிறன். முன்னேற்றம்தான்.

இந்தியாவில் வெளியான ஒரு கவிதை. எக்கும் பொருந்தக்கூடியது.

### காணவில்லை

"பெயர்-சுதந்திராதேவி.
வயது- நாற்பத்தியொன்பது.
இளம் பெண்மணி
மெலிந்த தேகம்.
தகவல் தெரிந்தவர்கள்
தொடர்பு கொள்ளவேண்டிய
முகவரி:-
பின் தங்கிய நாடு
ஏழைகளின் பூமி
பாரதம்."

என்ன கவிதை புரிகிறதா? எங்காவது பொருத்திப் பார்க்க நினைக்கிறீர்களா?



படிப்பகம்

www.padippakam.com

# 67

### மூன்றுவித விளக்கம்

ரெலோ இயக்கத் தலைவர் சிறீ சபாரத்தினம் 6.5.86 அன்று கொல்லப் பட்டார். அதன் பின்னர் தமிழ்நாட்டில் தங்கியிருந்த புலிகள் அமைப்பின் தலை வரிடம் ரெலோ இயக்கம் மீதான தடை தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டன.

"ரெலோ இயக்கமும், அதன் தலைவர் சிறீ சபாரத்தினமும் புலிகள் இயக்கத்தை ஒழித்துக்கட்ட திட்டம் தீட்டியிருந்தார்கள். அதனை அறிந்து நாம் முந்திக்கொண்டோம்" என்று தமிழ் நாட்டில் விளக்கம் சொன்னார்கள் புலிகள் இயக்கத்தினர்.

"இந்தியக் கைக்கூலிகள் என்பதால் ரெலோ இயக்கத்தை தடைசெய்தோம்" என்று வடக்கு-கிழக்கில் சொன்னது போல, தமிழ்நாட்டில் சொல்லவில்லை என்பதையும் கவனிக்க முடிந்தது.

ரெலோ இயக்கத்தை முற்றாகத்தடை செய்தது மூலம் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் பலமுள்ள அமைப்பு என்று இந்தியா தவிர்ந்த வெளிநாடுகளில் பிரசாரம் செய்யப்பட்டது.

ரெலோ மீதான நடவடிக்கைக்கு மூன்று விதமாக- மூன்றுவிதமான சூழல் களுக்கு ஏற்ப, புலிகள் அமைப்பினர் விளக்கம் கொடுத்தனர் என்பதுதான் உண்மை.

அமெரிக்க 'டைம்' சஞ்சிகை 9.6.86 அன்று வெளியான இதழில் இலங்கைப் பிரச்சனை தொடர்பாக ஏழுபக்க கட்டுரை வெளியிட்டிருந்தது.

"தமிழ்ழ விடுதலை கோரும் அமைப் புக்களில் பிரபாகரன்தான் குழப்பமற்ற ஒரு தலைவராக விளங்குகிறார்" என்று குறிப்பிட்டிருந்தது 'டைம்' சஞ்சிகை.

இலண்டன் பி.பி.சி. தமிழோசை அப்போதிருந்தே விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவே செய்திகளை வெளியிட்டு வந்தது.

2.5.86 அன்று இலண்டன் பி.பி.சி. தனது செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவித்தது:

"விடுதலைப் புலிகள், இராணு வத்தை எதிர்கொள்வது போல இம்முறை ரெலோ மீது எடுத்த நடவடிக்கையினால் தமிழ் மக்களை மேலும் கவர்ந்துள்ளனர். அது மட்டுமல்ல, அங்குள்ள பெரியவர்கள், விடுதலைப் புலிகள் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்".

### யூ.என்.ஐ.செய்தி

கொழும்பிலுள்ள யூ.என்.ஐ.செய்தி நிறுவன நிருபர், "ரெலோ உறுப்பினர் களை புலிகள் பெற்றோல் ஊற்றி உயிருடன் எரித்தனர். சிறுவர்களை விரட்டி விரட்டிச் சுட்டனர்" என்று தனது செய்திக் குறிப்பில் தெரிவித்தி ருந்தார்.

13.5.86 அன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் யூ.என்.ஐ. நிருபர் எழுதிய கட்டுரையில், புலிகள் அமைப்பினர் ரெலோவை தடைசெய்தமைக்காக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் சொன்ன கருத்து இடம்பெற்றிருந்தது. அது இதுதான்:

"இந்திய அரசின் ஆதரவில் தமிழர் பிரச்சனைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணவும், பாரம்பரிய அரசியல் பாதைக்கு திரும்பவும் 'ரெலோ' தயாராக இருந்தது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரே நோக்கம் சுதந்திர தமிழீழத்தை அமைப்பதுதான். அதிலே அவர்கள் பிடிவாதமாக உள்ளனர்.

இந்தியத் தயாரிப்பான ஓர் அரசியல் தீர்வினைத் தற்காலிகமாகவேனும் ஈழத் தமிழர் இப்போது ஏற்றால், இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளின் பின்னர் மீண்டும் புதிதாக போராட்டத்தினை ஆரம் பிக்க நேரும் என்று விடுதலைப்புலிகள் நினைக்கிறார்கள். அதைவிட இப்போது நடைபெறும் விடுதலைப் போரை தமிழீழத்தை அடைவதுவரை தொடர்ந்து நடத்துவது மேலானது என்று புலிகள் கருதுகிறார்கள்" என்று பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் விளக்கமளித்தார்.

### கோவையின் மடல்

பிரபாகரனின் பண உதவியால் தமிழ் நாட்டிலிருந்து கோவை மகேசன் வெளி யிட்டு வந்த பத்திரிகை 'வீரவேங்கை.'

ரெலோ தடை செய்யப்பட்டது தொடர் பாக கோவை மகேசன் வீரவேங்கையில் ஒரு நீண்ட மடல் வரைந்திருந்தார்.

அதில் ஓர் இடத்தில் கோவை மகேசன் காட்டமாகக் குறிப்பிட்டிருந்தது இப்படி:

"தாயக விடுதலை என்ற இலட்சியத்தை ஏற்று களத்தில் இறங்கி விட்டபின்னர், அந்த இலட்சியத்திற்கு துரோகம் செய்யத் துணிந்து விட்டவன் எவனாயிருந்தாலும், அவன் நண்பனாக இருந்தாலும், தந்தையாக இருந்தாலும், தம்பியாக, தங்கையாக ஏன் தாரமாக இருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டியவர்களே.

ரெலோ மட்டுமல்ல-சுதந்திர தமிழீழம் என்ற ஈழத்தமிழர்களின் கண்ணீராலும், செந்நீராலும், எலும்புகளாலும், தசைகளாலும் வளர்க்கப்பட்டுள்ள இலட்சியப்பயிரை, நம் ஊனோடும், உயிரோடும் கலந்துவிட்ட விடுதலை இலட்சியத்தை கைவிட்டு ஜெயவர்த்தனாவின் மாகாணசபை என்ற மாய்மாலத்தில் மயங்கி சிங்கள மேலாதிக் கத்தையும், சிறீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்பையும், சிங்கள தேசியக் கொடி யையும், தேசிய கீதத்தையும் எவர் ஏற்றுக் கொண்டாலும் - அப்படிப்பட்டவர்கள் ஈழத் தமிழர்களின் பச்சைத் துரோகிகள் என்றே நான் கூறுவேன்.

தமிழீழ விடுதலை எனும் உயிர்கொள் கைக்கு எதிரான அனைத்து இயக்கங் களையும் தமிழீழ மண்ணில் இயங்க விடாமல் தடைசெய்வது என்று விடுதலைப் புலிகள் தீர்மானித்திருப்பதாக யாழ்ப்பாணத் தளபதி தம்பி கிட்டு அறிவித்திருப்பதை வீரவேங்கை சார்பாக வரவேற்கிறேன்."

என்றெல்லாம் எழுதியிருந்தார் கோவை மகேசன்.

### சுவாமியின் கோபம்

இந்திய அரசியல்வாதியான சுப்பிரமணியம் சுவாமி ரெலோவுக்கு ஆரத வாக இருந்தவர்.

சிறீ சபாரத்தினம் பலியானவுடன் ரெலோ இயக்கம் தன்னை நம்பித்தான் வர வேண்டும் என்று நினைத்தார் சந்திரஹாசன். தந்தை செல்வாவின் மகனான சந்திரஹாச னுக்கு முன்னரே ரெலோவோடு இருந்த தொடர்பை விளக்கியிருக்கிறேன்.

பின்னர் அந்த தொடர்பை சிறீ சபாரத்தினம் வெட்டிவிட்டதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன்.

சந்திரஹாசனுக்கு நெருக்கமானவர் சுப்பிரமணியம் சுவாமி.

ரெலோவை புலிகள் தடைசெய்ததை கண்டித்து காரசாரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார் சுப்பிரமணியம் சுவாமி.

"பிரபாகரன் மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று தனது அறிக்கையில் கோரிக்கையும் விடுத்திருந்தார் சுப்பிரமணியம் சுவாமி.

### பிரபா ஒரு புதிர்

ஜுன் 30, 1986 இல் வெளிவந்த 'இந்தியா டுடே' ஆங்கில சஞ்சிகை பிரபாகர னின் பேட்டியை பிரசுரித்திருந்தது.

பிரபாகரன் தொடர்பாக தனது வாசகர் களுக்கு நீண்டதொரு அறிமுகமும் செய்திருந்தது.

அதிலிருந்து ஒரு பகுதி இது:

"பிரபாகரன் ஒரு புதியாத புதிராக விளங்குகிறார். அவரைச் சுற்றி யார் எத்தகைய பிரசாரத்தினை மேற்கொண்ட போதிலும் பிரபாகரன் ஒரு அதிசய மனித ராகவே எளிமையுடன் வளங்குகிறார். அவரது நடவடிக்கைகள் மிகவும் இரகசிய மாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன."

இந்தியா டுடேக்கு அளித்த பேட்டியில் பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக மனம்திறந்து பேசியிருந்தார் பிரபா.



1986 இல் பிரபாவின் தோற்றம்

# பிரபாகரன் ஒரு - புரியாத புதிர்

**அரசியல் தொடர்**

**அற்புதன் எழுதுவது**

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



# "இறுதி வரை ஈழத்துக்காக போராடுவோம்" -பிரபா சூளுரை

அப்பேட்டியின் முக்கிய பகுதிகளை வாசகர்கள் அறிவது அவசியம். இதோ பேட்டி:

**கேள்வி: இலங்கைத் தமிழர் பிரச்சினை யின் அடுத்த அத்தியாயம் எப்படி இருக்கு மென எதிர்பார்க்கிறீர்கள்?**

பிரபா: இராணுவ ரீதியாக ஏதாவது தனக்குச் சாதகமான வெற்றி நிலை ஏற்பட்டால் மட்டுமே சிறீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். பேச்சுவார்த்தை மேசைக்கு வருவார். அதுவரை அவர் இராணுவத் தீர்வையே நாடித் தொடர்ந்து அதிலே ஈடுபடுவார்.

**கேள்வி: சிறீலங்கா அரசினர் தமது முழுப் படை பலத்தையும் பிரயோகித்து இறுதியில் உங்கள் இயக்கத்தையே அழித்து விடுவர் என்று நீங்கள் கருதவில்லையா?**

பிரபா: தமிழீழ விடுதலைப் பிரச்சி னைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு கண்டுவிடலாம் என ஜே.ஆர். நினைக்கக் கூடும். ஆனால் பெரிய அளவில் 'இனக் கொலை' ஒன்றை நடத்தி முடிப்பதிலேயே அவர் வெற்றி காண முடியும். எமது இலட்சியத்தை அடையும்வரை ஒருவர் பின் ஒருவராக போராடிச் சாவதற்கு எம்மிடம் ஏராளமான இளைஞர்கள் உண்டு.

**கேள்வி: புலிகளின் இராணுவ பலத்தையும், சிறீலங்கா அரசின் இராணுவ பலத்தையும் நீங்கள் எவ்வாறு கணக்கிடு கிறீர்கள்?**

பிரபா: இராணுவ ரகசியம் எதையும் நான் கூற முடியாது. சிங்கள இராணு வத்தை தமிழீழ மண்ணை விட்டு விரட்டும் ஆற்றல் எம்மிடமுண்டு. சிறீலங்கா இராணு வத்தை தோற்கடிக்கும் அளவுக்கு போது மான ஆதரவைத் திரட்ட எமது இயக்கத்தினால் முடியும்.

### தமிழீழம் எப்போது?

**கேள்வி: சுதந்திர இறைமையுள்ள தமிழீழத் தனிநாட்டை அடைவதற்குக் குறிப் பிட்ட காலக்கெடு ஏதாவது நிர்ணயித்துள் ளீர்களா?**

பிரபா: தமிழீழ நாட்டை நாம் எப் பொழுது மீட்போம் என்று வரையறுத்து என்னால் கூற முடியாது. ஆனால் நிச்சயமாக நாம் அதை மீட்டே தீருவோம். இது ஓரளவு சர்வதேச அரசியல் நிலையிலும், சிங்கள அரசுக்கு ஏற்படுகின்ற பொருளாதார நெருக் கடியிலும் தங்கியுள்ளது. எமது ஆயுதப் போராட்டம் காரணமாக சிங்களத்துப் பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டே தீரும். ஜெயவர்த்தனாவின் வெளிநாட்டு ஆதரவாளர் களால், இலங்கைத்தீவை ஒரே நாடாக வைத்துக் கொள்வதற்கு ஜெயவர்த்தனா வினால் முடியாது என்பது உணரப்பட்ட வுடன், அவர்கள் அவரைக் கைவிட்டுவிடு வார்கள். அவரிடமுள்ள துப்பாக்கிகளாலும் குண்டுகளாலும், கவச வண்டிகளாலும், அவரது ஆட்சியை எதிர்த்துத் தொடர்ச்சி யாகப் போராடி வரும் எம்மை அசைத்துவிட முடியாது.

**கேள்வி: சிறீலங்கா அரசுடன், கௌரவ மான அரசியல் உடன்பாடுகாண முடியும் என்று நீங்கள் கருதவில்லையா?**

பிரபா: ஐக்கிய இலங்கைக்குள் அமைந்த ஓர் அரசியல் உடன்பாட்டினைக் காணமுடி யும் என்கிற காலகட்டத்தையும் எதிர்பார்ப்புக் களையும் நாம் இன்று கடந்து வந்து விட்டோம். தமிழீழ நாட்டை மீட்கும் எமது குறிக்கோளிலிருந்து அணுவளவேனும் பின்வாங்குவதற்கோ, திரும்பிப்பார்ப்பதற்கோ இனி இடமேயில்லை!

**கேள்வி: தமிழீழத் தாயகம் என்னும் பெயரில் நீங்கள் விடுவிக்கப்பட விரும்பும் பூகோள எல்லைகள் எவை?**

பிரபா: தமிழீழம் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்களுக்கெனத் தனியானதோர் தாயகம் இலங்கைத் தீவிலுண்டு. அத்தாயகத்தில் எமது இறைமையையும் சுதந்திரத்தையும் ஆட்சியை யும் நிலைநிறுத்தவே நாம் போராடி வருகி றோம்.

**கேள்வி: நீங்களே யுத்தகளத்தில் நின்றிருக்கிறீர்களா?**

பிரபா: ஆம். ஏராளமான எமது இராணுவத்தாக்குதல்களில் நான் பங்குபற்றி யுள்ளேன். எமது இராணுவத்தில் நாம் எல்லோரும் பங்கு பற்றியே தீரவேண்டும்.

**கேள்வி: உங்கள் முதலாவது கெரில்லா நடவடிக்கை என்ன?**

பிரபா: யாழ்ப்பாணமாநகர முதல்வராக இருந்த அல்பிரெட் துரையப்பாவை 1975 இல் சுட்டுக் கொன்றதே எனது முதல் நடவடிக்கையாக இருந்தது. அதைத் தொடர்ந்து எத்தனையோ தாக்குதலில் பங்கு பற்றியுள்ளேன். திலாவெளியில் நடைபெற்ற தாக்குதலின்போது பெரும்பாலும் அங்கேயே தங்கியிருந்தேன். 1983 ஜுலையில் 13 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவமும் என் தலைமையிலேயே இடம் பெற்றது.

**கேள்வி: 'ரெலோ' மீது நீங்கள் போர் தொடுத்த காரணம் என்ன? தீவிரவாதிகள் மத்தியிலுள்ள ஒற்றுமையின்மை, உங்கள் இயக்கத்தையே பாதிக்கும் என்பதை நீங்கள் சிந்திக்கவில்லையா?**

பிரபா: எமது போராட்டத்தில், நாம் ஒருமைப்பாடான அணுகுமுறையையே பின்பற்ற வேண்டும். எமது மத்தியிலுள்ள ஒற்றுமையின்மை, தமிழின விடுதலை இயக்கத்துக்கே பலவீனமானதுதான். ஆனால் இந்த ஒற்றுமையீனம் சிலரால் திட்டமிட்டே வளர்க்கப்பட்டு வந்துள்ளது. எனது கருத்தின்படி, ஒரேயொரு பலம் வாய்ந்த தீவிரவாத இயக்கமே விடுதலைப் போரைத் தலைமையேற்று முன்னெடுக்க வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளா கிய நாமே, சிறீலங்கா இராணுவத் தாக்குதல்களைப் பல கட்டங்களில் முறியடித்துள்ளோம். ஒன்றுபட்ட ஐக்கிய மான அமைப்புக்கு எதிராக நடவடிக்கை யெடுப்பது சிங்கள ராணுவத்துக்கே மிக ஆபத்தானது. இப்போது விடுதலைப் புலிகளே பலம் வாய்ந்த ஒன்றுபட்ட தனித்துவமான இராணுவமாக விளங்கு கின்றனர்.

### இயக்க ஒற்றுமை?

**கேள்வி: பேச்சுவார்த்தைகளினால் இந்த ஒற்றுமையை ஏற்படுத்த உங்களால் முடியாதா?**

பிரபா: ஏனைய இயக்கங்களே தங்களுக்குள் நம்பிக்கை இழந்து, தமக் குள்ளேயே ஒற்றுமையின்றித் தவிக்கும் போது, அந்த இயக்கங்களில் யாருடன் நாம் எதைத்தான் பேச முடியும்?

**கேள்வி: ஏனைய குழுக்களை இல்லாதொழிப்பதே, ஐக்கியமான அணுகு முறைக்கு ஒரே வழியா?**

பிரபா: நாம் எந்த ஒரு இயக்கத்தை யும் துடைத்தெறியவில்லை. 'ரெலோ' வுக்கு ஒரு பாடமே கற்பித்தோம். 'ரெலோ' எமது இயக்க வீரர்களை கொலை செய்து வந்தது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடின், விடுதலைப்புலிகள் இயக்கம், படிப்படியாக செயலிழந்து விடும். ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா குழு) இயக்கத்துடன் எமக்குப் பிரச்சினை ஏற்பட்டாலும், நாம் மிகவும் பொறுமை யுடன் இருப்பதை நீங்கள் அவதானிக்க முடியும். 'ரெலோ' விடயத்திலும், எம்முடன் போரிட வந்த 100 உறுப்பினர் கள் வரை போரில் கொல்லப்படினும், 400 'ரெலோ' உறுப்பினர்களை மட்டுமே கைது செய்து, அவர்களது ஆயுதங்களை யும், தளவாடங்களையும் சுவீகரித்தோம். உண்மையான எதிரியான சிங்களப் படைகளுடன் போரிட முடியாத இவர் களிடம் ஆயுதங்கள் இருக்கக் கூடாதென் பதே எமது குறிக்கோள். எமது இயக்க வீரர்கள் சிங்கள இராணுவத்தை முகாமுக் குள் முடக்கி வைத்திருக்கும்போது, 'ரெலோ' குழுவினர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டனர். விடுதலைப் போராட்டத்திற்கான முழுப்பொறுப்பை யும் விடுதலைப்புலிகளே ஏற்பதுதான் நமக்கு நல்லது என்று யாழ் குடி மக்கள் கூறுகிறார்கள்.

**கேள்வி: உங்களை 'பயங்கரவாதி' என் அழைக்கும் ஜெயவர்த்தனாவுக்கு நீங்கள் கூறுவதென்ன?**

பிரபா: நாம் பயங்கரவாதிகள் அல்லர்; அரச பயங்கரவாதத்தின் கோரப் பிடியிலிருந்து வெளியேறிச் சுதந்திரமாக வாழத் துடிக்கும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் நாமே!

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# -மூதூர் படுகொலைகள்-

## அலசுவது–இராஜதந்திரி

# கேள்விக்குறியாகியுள்ள பாதுகாப்பு?

மூதூர்-கிளிவெட்டி, குமாரபுரத்தில் அப்பாவிப் பொதுமக்கள் கண்ட துண்டமாகக் கொலை செய்யப்பட்டுள்ளமை இரத்தத்தை உறைய வைப்பதாக இருக்கின்றது.

கர்ப்பிணிகள் உட்பட வயது வேறுபாடின்றி இந்த மனித வேட்டை இடம்பெற்றுள்ளது.

கிராமவாசிகள் கொல்லப்படுவதும், ஆலயங்கள், தேவாலயங்கள், பாடசாலைகளுக்குள் தஞ்சம் புகுந்தவர்கள் சாகடிக்கப்படுவதும் சர்வசாதாரணமாகவே நிகழ்ந்து வருவது வடக்கு-கிழக்கு யுத்தத்தில் ஒரு நியதியாகிப் போயுள்ளது.

வெறிகொண்ட சீருடை தரித்த ஆயுதபாணிகள் தமது மனம் போனபோக்கில் மூதூர் படுகொலைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

குமாரபுரம் கிராமத்துக்கு அருகே இருந்த இராணுவ முகாமில் இருந்து வந்தவர்களே இந்தப்படுகொலைகளைச் செய்துள்ளார்கள் என்பதும் தெளிவாகியுள்ளது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையையடுத்து ஜெனரலாக உயர்ந்துள்ள அமைச்சர் அனுருத்த ரத்வத்த, இலங்கையில் ஆயுதப்படையினர் பற்றி அண்மையில் குறிப்பிட்டபோது, அவர்கள் மிக ஒழுக்கக் கட்டுப்பாடுடையவர்கள் என்று கூறியிருந்தார். இதுதவிர அப்பாவி வடக்கு-கிழக்கு மக்களைப் பாதுகாப்பதே தமது அரசாங்கத்தின் பிரதான நோக்கமெனவும் கூறியிருந்தார்.

ஆனால் மூதூர் குமாரபுரம் சம்பவம் அரச படைகளிடம் ஒழுக்கக் கட்டுப்பாடும் இல்லை; அவர்களால் எந்தவகையிலும் வடக்கு-கிழக்கு மக்களைப் பாதுகாக்கவும் முடியாதென்பதையுமே எடுத்துக் காட்டியுள்ளது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் வடக்கே நெடுந்தீவுக்கடலில் குமுதினிப் படகில் பிரயாணஞ் செய்த அப்பாவிப் பயணிகளை ஒவ்வொருவராக வெட்டியும், குத்திக் குதறியும் கடற்படையினர் வெறியாட்டம் நடத்தியிருந்தனர்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் நினைவை விட்டு நீங்காதவை. இதேபோன்று வடக்கு-கிழக்கில் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களிலும் படையினர் நடத்திய நரபலி, வடக்கு-கிழக்கு யுத்த நிலவரத்தை மேலும் மோசமடையவே செய்திருந்தது.

பயங்கரவாதத்தை முறியடிப்பதும், நாட்டின் ஐக்கியத்தை பாதுகாப்பதுமே ஆயுதப்படையினரின் பிரதான பணிகள் என்று ஜெனரல் ரத்தவத்தை தாம் செல்லுமிடமெல்லாம் கூறிவருகின்றார்.

ஆனால் மூதூர் சம்பவம் சீருடையினரே பயங்கரவாதிகள் போன்று நடந்திருப்பதையும், நாட்டின் ஐக்கியத்தைப் பேணும் யுத்தத்துக்கு அவர்களால் ஒத்துழைக்க முடியாதென்பதையும் புலனாக்கிவிட்டுள்ளது.

வடக்கே யாழ்ப்பாண நகரத்தையும், அதன் சுற்றுப் புறப்பகுதிகளையும் அரச படையினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

ஒப்பரேஷன் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதும், வடக்கே அப்பாவிப் பொதுமக்கள் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் அங்கிருந்தும் அகன்றனர்.

ஒப்பரேஷன் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது முன்னேறிவந்த படையினர் தமது உயிர்களைப் பந்தாடுவார்கள் என்று அஞ்சியே வடபகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு அகன்றிருந்தனர்.

வடக்கேயிருந்தும் வெளியேறிய மக்களை மீண்டும் தத்தமது சொந்த இடங்களுக்குத் திரும்புமாறு ஆட்சியாளர்கள் கேட்டு வருகின்றனர்.

அவ்வாறு திரும்பும் மக்களுக்கு புனர் வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்றும் ஆட்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் மூதூர் படுகொலைகளை அவதானிக்கும்போது, படையினர் வசமிருக்கும் யாழ்ப்பாண நகருக்குள் மீண்டும் பிரவேசிக்கும் பட்சத்தில் புனர்வாழ்வுக்குப் பதிலாக புனர்ஜன்மம் எடுக்கும் சூழ்நிலைகள் ஏற்படுமென்பதையே உணர முடிகின்றது.

கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் பற்றியும் வேறு சந்தேகத்துக்கிடமான மரணங்கள், ஊழல்கள், மோசடிகள் என்பன குறித்தும் நாட்டில் தற்போது எண்ணிலடங்காத விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் விசாரணைகளை நடத்திவருகின்றன.

இது தவிர மனித உரிமைகள் செயலணிக் குழு என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் மனித உரிமைகள், மற்றும் அது சார்ந்த பல்வேறு விடயங்கள் பற்றியும் அடிக்கொருதடவை கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டுவரக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் தற்போது இடம்பெற்றுள்ள மூதூர் படுகொலைகள் குறித்து காலதாமதமற்ற, கூடவே பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானதாகின்றது.

எண்ணிலடங்காத விசாரணைக்கமிஷன்கள் தற்போது இயங்கிவருகின்றன. ஆனால் அரசாங்கம் தனது தேர்தல் பிரசாரங்களின்போது சுட்டிக் காட்டிய சூரியகந்த விவகாரம் பற்றி இதுவரை எந்தவொரு விசாரணைக் கமிஷனும் உருவாக்கப்படவில்லை.

எம்பிலிப்பிட்டிய சூரியகந்தயில் பாடசாலை மாணவர்கள் பலர் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தனர்.

தமது தேர்தல் பிரசார காலங்களில் ஜனாதிபதி நேரடியாகவே சூரியகந்தப் பகுதிக்குச் சென்று அங்கே புதைகுழி இருந்த இடத்தையும் பார்வையிட்டார்.

சூரியகந்த விவகாரமே பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரத்தின்போது முக்கிய விடயமாக சூடு பிடித்திருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்ததும் இது விடயமாக பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். அத்துடன் சில படை அதிகாரிகள் சிலகாலம் தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டனர்.

அப்படை அதிகாரிகளில் ஒருவரே பிரிகேடியர் பரி லியனகே. இவர் சூரியகந்த விவகாரம் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டியவர்களில் ஒருவராக இருந்தார்.

ஆனால் கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சூரியகந்த இராணுவ நடவடிக்கையில் பிரிகேடியர் பரி லியனகேயும் முக்கிய பங்கு வகித்திருந்தார்.

கூடவே இலங்கையின் 48-வது சுதந்திர தினத்தைமுன்னிட்டு கடந்த 4ந்திகதி இராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட்ட விசேட விருதுகளில், பிரிகேடியர் பரி லியனகேயும் விருது பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றில் அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு தவறு என்பதை மக்களுக்கு சொல்லியிருக்க வேண்டும். அல்லது குற்றம் சாட்டப்பட்டது சரியானால் விருது வழங்கப்பட்டிருக்கக் கூடாது.

இது தவிர கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு பொல்கொட வாவியிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் இனந்தெரியாதவகையில் பல சடலங்கள் கொலை செய்யப்பட்டுப் போடப்பட்டிருந்தன.

பாராளுமன்றக் கட்டிடத்தைச் சூழவுள்ள தியவன்ன ஓயாவிலும் சில சடலங்கள் போடப்பட்டிருந்தன.

இச் சடலங்கள் போடப்பட்ட விவகாரம் குறித்து சந்தேகத்தின் பேரில் சில விசேட அதிரடிப்படை வீரர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களும் தற்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் அம் மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் என்றுமில்லாதவாறு நெருக்கடிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும், சோதனைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய தன்மைகளே காணப்படுகின்றன.

மூதூரில் போன்று அப்பாவித் தமிழ் மக்களை அவலத்துக்குள்ளாக்கும் செயல்களில் படையினரில் ஒரு பகுதியினர் நேரடியாகவே குதிக்கிறார்கள்.



எனவே எவ்விதத்திலும் ஒரு பாதுகாப்பற்ற நிலையிலேயே தமிழ் மக்கள் வாழ்ந்து வருவதைக் காண முடிகின்றது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மனியில் யூதர்கள் அனைவரையும் ஜெர்மன்காரர்கள் அருவருக்கத்தக்கவர்களாகவே நடத்தினார்கள். அது போன்றே தற்போது இலங்கையிலும் தமிழர் என்ற பெயர் அருவருக்கத்தக்கதாகவும், அச்சத்துக்குரியதாகவும் மாறிவருகின்றது.

இத்தகைய நிலைமைக்கு ஆட்சியாளர்கள் தொடர்ந்து இராணுவ அணுகுமுறைகளில் நம்பிக்கை வைத்து வருவதும் இதன் காரணமாக எல்.ரி.ரி.ஈயினரும் தமது இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருவதுமே முக்கிய காரணமாக இருக்கின்றது.

# ஐ.ஆர்.ஏ. அமைப்பை பேச்சுக்கு அழைக்கும் பிரிட்டிஷ் பிரதமர்

கடந்த ஆண்டு எல்.ரி.ரி.ஈயினர் ஒரு தலைப்பட்சமான முறையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதை ஒரு பாரதூரமான நடவடிக்கையாகும் என்று ஆட்சியாளர்கள் கூறினர். அத்துடன் எல்.ரி.ரி.ஈ யினரை பயங்கரவாதிகள், அரசியல் அணுகுமுறைகளில் நம்பிக்கையற்றவர்கள் எனவும் கூறிவந்தனர்.

ஆனால் தற்போது பிரிட்டனில் வட அயர்லாந்தின் ஐரிஷ் கெரில்லாக்களும் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் செய்து கொண்டிருந்த போர் நிறுத்தத்தை 17 மாதங்களின் பின்னர் முறித்துக் கொண்டுள்ளார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கம் அரசியல் நடவடிக்கைகளில் உரிய பங்களிப்பை வழங்கவில்லை என்பது ஐரிஷ் கெரில்லாக்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

எனவே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தங்கள், போர்நிறுத்தங்கள் என்பன முறிவடைவதும், பின்னர் புதிதாக தோற்றம் பெறுவதும் போன்ற நடவடிக்கைகள் சர்வதேச அரங்கில் அவ்வப்போது நடைபெறுவனவாகவே இருக்கின்றன.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈயினரும் அரசின் அணுகுமுறைகளில் நம்பிக்கை இழந்த நிலையிலேயே மோதல்தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டார்கள் என்றே கருதமுடிகின்றது.

அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளதாக ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர். ஆனால் அந்த அரசியல் தீர்வு யோசனைகள் குறித்து மிகப் பலம் வாய்ந்த தீவிரவாத இயக்கமாக இயங்கிவரும் எல்.ரி.ரி.ஈயினருடன் பேச்சுக்களை நடத்தவேண்டியது அவசியமானதாகின்றது.

கடந்தவாரம் இலங்கைக்கு இந்திய-பாகிஸ்தான் உலகக் கிண்ணக் கூட்டு அணியொன்று விஜயம் செய்து இலங்கை அணியுடன் விளையாடிச் சென்றது.

இக்கிரிக்கெட் அணியினருக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தேநீர் விருந்துபசாரமொன்றை வழங்கிக் கௌரவித்திருந்தார்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற இந்த வைபவத்தில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா எல்.ரி.ரி.ஈயினருடன் பேசுவதற்கு தமது அரசாங்கம் தயாராகவே இருப்பதாகக் குறிப்பிட்டார்.

எனவே வெளிநாட்டவர்களைச் சந்திக்கும் போதும், சர்வதேச அரங்குகளில் பேசும் போதும் அரசில் தீர்வு யோசனைகள், மற்றும் எல்.ரி.ரி.ஈ யினருடனான பேச்சுக்கள் என்பனபற்றி ஜனாதிபதி சந்திரிகா, பெரிதாகக் குறிப்பிட்டுவருகின்றார்.

ஆனால் கடந்த ஏப்ரல்மாதம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததையிட்டு எல்.ரி.ரி.ஈயினருடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

கடந்த வாரம் ஐரிஷ் கெரில்லாக்கள் தமது போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்டு லண்டனில் குண்டுத்தாக்குதல் நடத்தியிருந்தனர்.

ஆனால் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேஜர், ஐரிஷ் கெரில்லாக்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவோ, அல்லது உலகிலேயே சிறந்த விமானப்படையாகவும் கடற்படையாகவும், ஆயுதப்படையாகவும் இருக்கும் பிரிட்டிஷ் படைகளை முழு அளவிலான யுத்தத்துக்கும் அனுப்பிவைக்கவோ இல்லை.

ஐரிஷ் கெரில்லாக்களை மீண்டும் பேச்சுக்களுக்கு அழைத்துள்ளதுடன், தாமும் பேச்சுக்களுக்குத் தயாராக இருப்பதாகவே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இலங்கையின் ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஆயுதக்குவிப்பில் ஈடுபட்டுள்ளதுடன் இஸ்ரேலிடமிருந்து கூட நவீன ஜெட் போர் விமானங்களை வாங்கியுள்ளனர்.

அத்துடன் மீண்டுமொரு இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகி வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் ஒரு நிரந்தரத் தீர்வுக்கு வழியமைக்கப் போவதில்லை என்பதை நன்கறிந்திருந்த நிலையிலும் அதன்மீது நம்பிக்கை கொள்வது ஆட்சியாளர்களின் அர்த்தமற்ற போக்கையே வெளிப்படுத்துகின்றது.

இத்தகைய போக்கு மேலும் அழிவுகளுக்கும், அவலங்களுக்கும் வழியமைத்து நிற்பதையே காணமுடிகின்றது.

## அயலகப் பார்வையில்



கொழும்புக் குண்டு வெடிப்பையடுத்து 'விகடன்' வெளியிட்ட கார்ட்டூன்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒரே ஒரு கொலை

ருசிகரமான

## உண்மைச் சம்பவம்

### அல்பேர்ட் பேசுகிறேன்

என் முடி நரைக்கத் தொடங்கி விட்டது. எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. அவள் இளமை என்னைப் பயமுறுத்துகிறது.

பளிச்சென்று கழுவித் துடைத்து வைத்த கிளாஸ் மாதிரி இருக்கிறாள். உள்ளே மது நிரம்பியிருப்பதுபோல இளமையை நிரப்பி வைத்திருக்கிறாள். எடுத்துப் பருக ஆசையிருக்கிறது. கை நடுங்கி கிளாஸ் தவறி விழுந்துவிடுமோ என்று என் பலவீனம் தடுக்கிறது.

கீ கொடுத்த பொம்மையை குழந்தை பார்ப்பது போல, இளமை நிரம்பிய உற்சாகத்தில் மிதக்கும் அவளை நான் ரசிக்கத்தான் முடிகிறது.

'வா என் இனிய கணவனே! இதெல்லாம் உனக்குத்தான். எடுத்துக் கொள்.' என்பதுபோல கட்டிலில் மல்லாந்து கிடக்கிறாள். மார்புகள் விம்முகின்றன. அருகே சென்று அமர்கிறேன். மார்பு உடைக்குள் இடமும் வலமுமாக என் கரம் அசைகிறது. அனுமதிக்கிறாள். அந்த நேரம் என் மனம் அலைபாய்கிறது. அவள் இளமை பயமுறுத்துகிறது.

புத்தகத்தை திறந்துவிட்டு பாதியில் முடிவைத்ததுபோல, இடைநடுவில் நான் அகன்று கொள்கிறேன். ஒரு இனிய கவிதை படிக்கப்படாமல் காத்துக்கிடக்கிறது.

என் பலவீனம் உடலிலா, மனதிலா? அவளுக்குத் தெரியாமல், ஒரு மனோதத்துவ டாக்டரை சந்தித்தேன். "உடல் திடமாக இருகிறது; குறை மனதிலேதான்" என்றார். "முடியாது என்ற நினைப்புத்தான் முதற் கோணல்" என்றார்.

அவளிடம் மாற்றங்கள் தெரிகின்றன. முன்புபோல இரவில் என்னை எதிர்பார்ப்பதில்லை. முன்னரே தூங்கிப் போய்விடுகிறாள். தன்னை வெளிப்படுத்தும் முயற்சி எதுவும் செய்வதில்லை.

அலட்சியம் செய்கிறாளா? அப்படியானால்...அப்படியானால்...அப்போதுதான் எனக்குள் தூங்கிக் கொண்டிருந்த சந்தேக மிருகம் பிடறியைச் சிலிர்த்துக் கொண்டு எழத் தொடங்கியது.

### ருத்மேரி பேசுகிறேன்

அவரை என்னை நோக்கி கொண்டு வரும் சகல முயற்சிகளிலும் தோற்றுப் போனேன்.

படகையும், படகுச் சவாரியையும் எப்போதோ அவர் மறந்த ஒரு கணத்தில் ஒன்றுகலந்தோம். அதற்கு சாட்சியாக ஒரு குழந்தை-பெண்குழந்தை பிறந்தது. அதைக்கொஞ்சக்கூட அவருக்கு நேரம் இருப்பதில்லை.

எனக்குள் நான் சுருங்கிக் கொண்டேன். எல்லாமே வெறுப்பாக இருந்தது. பணம் இருந்தால் மட்டும் போதுமா?

எதிர்ப்பார்ப்பு இருந்தால்தானே ஏமாற்றம் ஏற்படுகிறது. நான் எதிர்ப்பார்ப்புகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு வாழப் பழகிக்கொண்டேன்.

அதுவும் வினையாக வந்து முடியும் என்று நான் எதிர்ப்பார்க்கவில்லை.

தூங்கிக்கொண்டிருந்த என்னை உலுக்கி எழுப்பினார். கண்கள் சிவந்திருந்தன. குடித்திருந்தார்.

"நான் பார்க்க வேண்டும்."

"என்ன பார்க்க வேண்டும்."

"உன்னைப் பார்க்க வேண்டும். முழுமையாக, அணு அணுவாக!"

அவரது பேச்சிலிருந்த வழமைக்கு மாறான வெறித்தனம் என்னை பயமுறுத்தியது.

நான் கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தேன். என்னை தன் கைகளில் தூக்கி எடுத்து கட்டிலுக்கு அருகே நிற்க வைத்தார். நைட்டியின் முடிச்சில் பிடித்திழுத்தார். அவிழ்ந்தது. நைட்டியை விடுவித்தார்.

முதன் முதலாக அவரை அந்நியன் போலப் பார்த்தேன். அவருக்கு முன்பாக உடம்பில் துணியின்றி நிற்கக் கூசியது.

ஒரு சிகரெட் பற்றைவத்துக்கொண்டார். கட்டிலில் கிடந்த போர்வையை எடுக்க குனிந்தேன். கையை பிடித்து முறுக்கிக்கொண்டு, சிகரெட்டால் இடது மார்பில் சுட்டார்.

கதறினேன். "வலிக்கிறதா டியர்?" என்றார். என்ன ஒரு கொடூரம். அவரது முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது. மார்பைப் பொத்திக் கொண்டேன். குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள்.

என் வலது மார்பை பிடித்துப் பார்த்தார். "வேண்டாம்" கெஞ்சினேன். வருடினார். சட்டென்று சிகரெட் முனையை வைத்து அழுத்தினார். வீறிட்டேன். குழந்தை தூக்கம் கலைந்து அழத்தொடங்கினாள்.

### அல்பேர்ட் பேசுகிறேன்

பயமுறுத்திய அவள் இளமைமீது பொறாமையாக இருந்தது. முடிவு செய்து விட்டேன். அந்த இளமையை கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டுவிடவேண்டும்.

எங்கிருந்து இந்த துணிச்சல் வந்தது என்று தெரியவில்லை. கதறுகிறாள். காலடியில் விழுந்து புலம்புகிறாள். என் மனம் கல்லாகவே இருக்கிறது.

உச்சிமுதல் உள்ளங்கால்வரை இளமை வஞ்சகமில்லாமல் அவளை வார்த்துப் போட்டிருக்கிறது.

விரிந்த புத்தகமாக கட்டிலில் கிடக்கிறாள். கண்களில் மழை. சிகரெட்டால் தொடையில் சுட்டுப்பார்த்தேன். அவள் கத்தவில்லை. பழகிப்போய் மரத்து விட்டதோ?



அல்பேர்ட்

### ருத்மேரி பேசுகிறேன்

எல்லாமே பழகிப்போய்விட்டது. வலிக்கும்தான். கத்தக்கூடாது. இனி அழவும் கூடாது. உள்ளே வன்மம் வளர்ந்தது.

என் கணவன் மனிதனே அல்ல, மிருகம்.

"விவாகரத்து செய்யலாம் என்று விபரீதமாகவெல்லாம் கற்பனை செய்யாதே! கொன்று விடுவேன்! கடலில் மீன்களுக்கு உன் உடல் வேண்டுமாம்!"

"செய்! அதைச்செய்!"

"செய்யத்தான் போகிறேன். உன் உடலில் சிகரெட் விளையாட இடமில்லாமல் போகும்போது செய்கிறேன்" என்றார்.

ஒரே வழிதான் இருக்கிறது.

அது-ஒரு கொலை

நான் வேண்டுமானால் தற்கொலை செய்துகொள்ளலாம். ஏன் செய்ய வேண்டும்? ஒரு மிருகம் உயிரோடு இருக்க நான் ஏன் சாகவேண்டும்.

தற்கொலை வேண்டாம்! ஒரு கொலை. ஒரே ஒரு கொலை செய்யப்போகிறேன்.

என் இனிய விரோதியே! உன்னை நான் கொலை செய்யப் போகிறேன்.

அந்த முடிவின் பின்னர்தான் அவனை நான் சந்தித்தேன். அவன் ஹென்றி.

அவனுக்கு மனைவி சரியில்லை. எனக்கு கணவர் சரியில்லை.

ஒரே விதமான பிரச்சனை.

ஹென்றியில் எனக்கு காதல் என்று



ருத்மேரி நண்பியோடு

சொல்லமுடியாது.

என் மிருகத்தை வீழ்த்த எனக்கு ஒரு ஆயுதம் தேவை.

ஹென்றிதான் அந்த ஆயுதம். ஆனால் ஹென்றி பயந்தவன். மெல்ல மெல்ல பதப்படுத்த வேண்டும். மெல்ல மெல்ல கூர் தீட்டவேண்டும்.

### ஹென்றி பேசுகிறேன்

"கொலையா?" நான் உண்மையாகவே அதிர்ந்துதான் போனேன்.

"வேறு வழியில்லை ஹென்றி" என்றாள்.



கனவுடன் ருத்மேரி- அவளைக் காண்கிறார் ஹென்றி.

ஒரு கிளாஸ் பியர் குடிக்கிறாயா? ஒரு சிகரெட் பற்றவைத்துக்கொள்கிறாயா? என்பதுபோல மிக மிக சுலபமாக,-

"ஒரு கொலை செய்கிறாயா?" என்று கேட்டுவிட்டாள். "வேறு வழியில்லை" என்கிறாள்.

நான் பயந்தவன். என் மனைவியை பலதடவை கன்னத்தில் அறைய நினைத்திருக்கிறேன். செய்ததில்லை.

திருப்பித்தந்துவிடுவாளோ என்ற பயம். என்னிடம் கொலை.. கொலை செய்யச் சொல்லி கேட்டால்,... ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கிவருகிறேன் என்று சொல்லி விட்டுப் போய், அப்படியே நைசாக ஓடிப்போய்விடலாமா என்று யோசித்தேன்.

என்மார்பை தடவினாள். ரோமங்கள் சிலிர்த்தன. உடலெங்கும் அவள் கைகள் அலைந்தன. சுதந்திரம் கொடுத்திருந்தேன். சுதந்திரத்தை மிக உபயோகமாக பயன்படுத்த தொடங்கினாள்.

"பயந்துவிட்டாயா ஹென்றி?"

"பயமா? எனக்கா? நெவர்!"

என்றேன், ஆம் என்று சொன்னால் அவள் தன்கைகளை விலக்கிக் கொள்வாளோ என்ற நினைப்பில்.

முக்கியமான ஒரு தருணத்தில் கேட்டாள்: "கொலை, ஒரே ஒரு கொலை செய்வாயா ஹென்றி?"

எனக்கு அவசரம். "ஒரு கொலையென்ன ஒன்பது கொலையே செய்ய நான் தயார்."

**தருவது-ரசிகன்**

### ருத்மேரி பேசுகிறேன்

ஹென்றியை சம்மதிக்க வைத்து விட்டேன். அந்த மிருகத்தை கொல்ல முகூர்த்த நாள் குறித்து விட்டேன்.

ஹென்றியின் மனம் மாறுவதற்கு முன்னர் திட்டத்தை முடித்துவிட வேண்டும்.

"குளோரஃபோம் கொண்டுவா ஹென்றி!"

"குளோரஃபோம் எதற்கு?"

"நீயும் நானும் குடித்துவிட்டு உலகை மறப்பதற்கு; முட்டாள், அது மயக்கமருந்து. அவருக்கு பயன்படுத்த வேண்டியது. கொண்டு வருவாயா?"

"ம்.ம்.. மேரி இப்போதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை. முடிவை மாற்றினால் என்ன,"

"ஒரு கொலையென்ன ஒன்பது கொலை செய்வேன். தயார், என்றாயே நேற்று!"

"இப்போதுமட்டும் மாட்டேன் என்றா சொல்லுகிறேன். உன் முடிவை மாற்றலாமா என்று தானே கேட்கிறேன்."

"உனக்கு நான் வேண்டுமா, வேண்டாமா?" சட்டை போட்டிருந்தேன். நெஞ்சுப் பகுதியில் பட்டன்களை அலட்சியப் படுத்தியிருந்தேன். முறைத்துப் பார்த்தான். அங்கேயே பார்த்துக்கொண்டு. "வேண்டும்" என்றான்.

"அப்படியானால் சொன்னபடி செய்!"

"சரி." என்றான். நெருங்கி அவன் உதட்டைக்கவ்வினேன். பொம்மைக்கு சாவி கொடுக்க வேண்டியிருந்தது.

### ஹென்றி பேசுகிறேன்

முடிவை மாற்றவைத்து விடலாம் என்று முயன்றேன். மறுபடி முயன்றேன். முடியவில்லை.

திட்டத்திலிருந்து விலகிவிடலாமா என்று யோசித்தேன். வசீகரமான உடல் நினைவிற்கு வந்தது. அதன் வளைவுகளில் எனக்குள்ள சுதந்திரம் மனசில் இனித்தது.

'நடப்பது நடக்கட்டும்' குளோரஃபோம் தேடத்தொடங்கினேன். கிடைத்தது.

அல்பேர்ட் கதறுகிறார். படீர் என்று ஒரே போடு. செத்துப் போகிறார். ஹென்றி நீ கைது செய்யப்படுகிறாய். 'கனம் கோட்டார் அவர்களே! இந்த ஹென்றிக்கு மரண தண்டனை விதிக்குமாறு...' திடுக்கிட்டு விழித்துக் கொள்கிறேன். கனவு. உடல் ஏன் நடுங்குகிறது?

மாட்டிக் கொள்ளாமல் கொலை செய்வது எப்படி? எங்காவது புத்தகம் கிடைக்குமா? வேண்டாம் கொலையே வேண்டாம். அப்படியானால் அந்தச் சுகம். பெண் வாசனை. அவள் கைகள், விரல்கள் செய்யும் விஷமங்கள்... வேண்டும். ஆகவே, கொலை செய்ய வேண்டும்.

பார்க்கலாம். இது ஒரு சவால் மாதிரி. முதலில் ஒரு ஹோட்டலில் அறை எடுத்துத் தங்க வேண்டும். மாட்டிக் கொள்ளாத வகையில் முன் ஏற்பாடுகள், சாட்சியங்கள் தயார் செய்ய வேண்டும்.

எப்படியெல்லாம் முன் ஏற்பாட்டோடு நானும் ருத்மேரியும் கொலை செய்தோம் என்பதை கேட்டால் நீங்களே மரணதண்டனை தந்து விடுவீர்கள். (அடுத்தவாரம் கொலையோடு முடியும்)

# ஒரு இனிய எச்சரிக்கை!

முத்தம்! இன்று தமிழ் சினிமாவில் கூட வெகு அலட்சியமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கௌதமி, சுகன்யா, ரேகா என்று பல நடிகைகளுக்கு உதட்டில் முத்தம் கொடுத்தவர் கமல். முத்தம் நமது கலாசாரத்திற்கு மாறான விஷயம் அல்ல என்கிறார். உண்மைதான்.

முத்தம் கொடுப்பதில் முன்னே, பின்னே அனுபவக்குறைவு இருந்தாலும் தம்பதியரும், காதலர்களும் பரிமாறும் விஷயம்தானே அது.

கன்னத்தில் முத்தம், கையில் முத்தம் என்பதெல்லாம் கடந்து உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடுவதுதான் நெருக்கமான முத்தம். ஆழமான நெருக்கத்தின் முத்திரை அது. அதே சமயம் ஆபத்தானதும் அதுதான்.

எய்ட்ஸ் கிருமிகள் உதட்டு முத்தம் மூலம் பரவுவதால் இப்போது மேல்நாடுகளில் இளம் தலைமுறையிடம் ஒரு தயக்கம் ஏற்பட்டு வருகிறது. அதனால் வேறு இடங்களில் கொடுத்துக் கொள்கிறார்கள்.

வாயின்மூலம் முத்தம் கொடுப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றி ஒரு ஆராய்ச்சியே நடத்தப்பட்டிருக்கிறது.

ஒரு முத்தம் கொடுக்கும்போது முகத்தில் உள்ள 39 வகையான தசைகள் செயல்படுகின்றன. 150 கலோரி சக்தி செலவாகின்றது. (ஈடுபாடாக முத்தமிட்டால்) அதாவது 15 நிமிடம் நீச்சல் அடித்தாலோ, அல்லது 20 கிலோ எடையை முதுகில் சுமந்து கொண்டு மலைமீது ஏறினாலோ எவ்வளவு சக்தி செலவாகுமோ அதேயளவு சக்தி ஒரு முத்தத்தில் செலவாகிறது.

அது மட்டுமா? மேலும் கேளுங்கள்.

ஒவ்வொரு தடவை முத்தமிடும் போதும் 250 வகையான பாக்டீரியா மற்றும் வைரஸ் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவுகின்றன. மேலும் 9 மில்லி கிராம் தண்ணீர், 0.7 கிராம் புரதம் என்பவை உடலிலிருந்து செலவாகின்றன.



மனிதர்கள் மட்டமல்ல விலங்குகளும் விரும்பிச் செய்யும் காரியம் முத்தமிடுதல். பெண் ஓநாய் தனது முகத்தின் முன்னுள்ள நீண்ட பகுதியை ஆண் ஓநாயின் வாய்க்குள் செலுத்தி முத்தமிட்டுக் கொள்ளுமாம்.

ஒட்டக சிவிங்கிகள் கழுத்தோடு கழுத்தை கட்டிக்கொண்டு முத்தமிடுகின்றன.

சிம்பன்சிக் குரங்குகள் மனிதர்களுக்கு சவால்விடுவது மாதிரி கட்டிப் புரண்டு முத்தம் கொடுக்கின்றன.

பல்லிகள் விஷயத்தில் ஒரு பயங்கரம் உண்டு. ஆண் பல்லி சற்று வேகமானது. முத்தம் கொடுக்கும் வேகத்தில் பெண் பல்லியின் தலையை 'கட்' செய்துவிடுமாம். கொலைவேக முத்தம்!

பார்த்தீர்களா! முத்தம் பற்றி எத்தனை தகவல்கள். இதற்குப் பின்னரும் முயலும் எண்ணம் இருக்கிறதா என்ன.

பி.குறிப்பு:- முத்தமிடுவதால் ஆயுள் அதிகமாகிறது. ஆனால் சுத்தமான முத்தம் என்ற உத்தரவாதம் அவசியம் என்கிறார்கள் அவுஸ்திரேலியா பல்கலைக்கழக உடலியல் நிபுணர்கள்.

# ஹலோ டாக்டர்

**"வணக்கம் டாக்டர். நீரிழிவு நோயாளர்கள் தொகை கிடுகிடுவென்று ஏறிக்கொண்டிருப்பதால் இன்றைய கேள்விகளும் அதைச் சுற்றித்தான். நீரிழிவு நோயின் அறிகுறிகள் என்ன டாக்டர்?"**

"பெரும்பாலும் நீரிழிவு நோய் 35 வயது முதல் 40 வயதில் உள்ளவர்களுக்குத்தான் ஏற்படுகிறது. நாம் உண்ணும் உணவுக்கு ஏற்ப உடல் உழைப்பு இல்லாமையால்தான் அந்த வயதில் பெரும்பாலும் நீரிழிவு நோய் தாக்குகிறது.

அடிக்கடி தாகம் எடுத்தல், சிறுநீர் அடிக்கடி கழித்தல், உடல் சோர்வு, நரம்பு தளர்ச்சி, கண்பார்வை மங்குதல், பல் எரிச்சல், மூட்டுவலி போன்ற அறிகுறிகள் ஏற்படும்."

**"இறைச்சி உணவு அதிகம் உண்பவர்களுக்கு நீரிழிவு நோய் வருமா டாக்டர்?"**

"அவ்வாறு கூறமுடியாது. இறைச்சி உணவுகள் அதிகம் சாப்பிடுகிறவர்கள் நல்ல திடகாத்திரமாகவும் உள்ளனர். நாம் எடுத்துக் கொள்ளும் உணவின் அளவுக்கு ஏற்ப உடலுழைப்பு இருக்கவேண்டும். அப்படி உடலுழைப்பு இல்லாதவர்கள் கொழுப்புப் பொருட்களை அதிகம் சாப்பிடாமல் இருப்பது நல்லது."

**"நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு வேறு நோய்கள் வரக்காரணம் என்ன டாக்டர்?"**

"நீரிழிவு நோய் இருப்பவர்களுக்கு நாளடைவில் இருதய நோய்கள், சிறுநீரக கோளாறு, அல்சர், மலச்சிக்கல் போன்றவை ஏற்படுகிறது. நீரிழிவு நோய்க்கான மாத்திரைகள், ஊசி போன்றவற்றின் பின்விளைவுதான் வேறு நோய்களை ஏற்படுத்துகிறது."

**"நீரிழிவு நோயாளர்கள் கண்டிப்பாக தவிர்க்க வேண்டியவை என்ன?"**

"குளிர்பானங்கள், ரீ, கோப்பி, இனிப்பு பண்டங்கள், இறைச்சி, நெய், வெண்ணெய், முந்திரி, பாதாம்பருப்பு போன்ற கொழுப்பு சத்து மிகுந்த உணவு வகைகளையும் தவிர்க்க வேண்டும். மது வகைகள், புகைத்தல் போன்வற்றை தவிர்த்தல் நல்லது."

**"நன்றி டாக்டர், மீண்டும் சந்திப்போம்"**

# அசையும் யானை அர்ஜுன்

## உருவாக்கிய விஞ்ஞானி தமிழர்

இந்தியாவில் இவ்வாண்டு குடியரசு தினவிழாவில் பலரது பார்வையும் அர்ஜீன் மீதுதான் யாரந்த அர்ஜீன்? அது ஒரு டாங்கி.

முழுக்க, முழுக்க, இந்திய தொழில் நுட்பத்தை உபயோகித்து தயாரிக்கப்பட்ட சண்டை யானை.

கிட்டத்தட்ட 20 வருடமாக பாடுபட்டு உருவாக்கப்பட்ட நவீன வடிவ டாங்கி.

தொழில் நுட்பம் எந்தளவுக்கு முன்னேறும் என்பதை கவனத்தில் கொண்டு தயாரித்துள்ளார்கள். எனவே சமீப எதிர்காலத்தில் அர்ஜீனை வேறு எந்த டாங்கியும் ஓரம் கட்டிவிட முடியாது.

புதிய தொழில் நுட்பம் வளர வளர அவற்றை சேர்த்துக்கொண்டு மேலும் நவீனமாகிக் கொண்டிருக்கும் அர்ஜீன்.



அர்ஜீன் உருவான செய்தி கேட்டு பாகிஸ்தானும், சீனாவும் சற்று கலக்க மடைந்துள்ளன. அர்ஜீனுக்கு போட்டியாக ஒரு டாங்கியை உருவாக்கும் பணியில் இருநாடுகளும் இரகசியமாக இறங்கியுள்ளன.

அப்படியென்ன இருக்கிறது அர்ஜீன் டாங்கிகளில்? என்று கேட்பீர்கள்...

மலை, பள்ளம், சகதி என்று சகல இடங்களிலும் தடையே இல்லாமல் பாய்ந்து செல்லும்.

கும்மிருட்டாக இருந்தாலும் ஐந்து கிலோ மீற்றர் தூரம்வரை தனது கமராக் கண்களால் பார்த்துக் கொண்டு எழுபது கிலோ மீற்றர் வேகத்தில் சுட்டுத்தள்ளும்.

அடுத்துவரப்போகும் 25 ஆண்டுகளில்

எல்லாம் சரி. அர்ஜீனை தயாரித்த சூத்திரதாரி யார் தெரியுமா? ஒரு தமிழர். அவரது பெயர் நடராஜன். தமிழ் நாட்டுக்காரர்.

இந்த ஆண்டின் சிறந்த விஞ்ஞானியாக நடராஜனுக்கு விருது கொடுத்துள்ளது இந்திய அரசு.

நடராஜன் என்ன சொல்கிறார் தெரியுமா? "நம்மிடம் நவீன பீரங்கிகள் இருக்கிறது என்பதற்காக யுத்தம் வர வேண்டாம். அப்படி வந்தாலும் இந்தியாவுக்கு கிடைக்கப்போகும் வெற்றியில் அர்ஜீனின் பங்கு கணிசமாக இருக்கும்" என்கிறார் நடராஜன்.



வாரமலர் தினமுரசு

பெப்.25-மார்ச்.02,1996


படிப்பகம்

www.padippakam.com

சூழல் மாசடைவதைத் தடுக்க கியூபா அரசாங்கம் செய்துள்ள வித்தியாசமான பிரசாரம் இது. பிரதான சாலையில் போக்குவரத்திலீடுபடுவோர் கண்களில் படக்கூடிய வகையில் சைக்கிளை வைத்திருக்கிறார்கள். பெற்றோல், டீசல் வாகனங்களை தவிர்த்து சைக்கிளை பாவித்தால் சூழல் மாசடையாது. செலவும் கட்டுப்படும். அதுதான் அர்த்தம். நமக்கும் ஏற்ற நல்ல யோசனைதானே!

## இதுவே போதும்





## புள்ளிகளை அள்ளியவள்

காற்றில் விசுக்கென்று உடலை எம்பிப் பாய்ந்து அந்தரத்தில் சுழன்று வந்து சாகசம் செய்வது 'ஜிம்னாஸ்டிக்' என்று அழைக்கப்படும். ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் யாருக்குமே முழுப்புள்ளிகளும் கிடைப்பதில்லை. நடுவர்களை லேசில் திருப்தி செய்ய முடியாது. ஆனால் ருமேனியாவைச் சேர்ந்த நடியா கொமானெசிக்கு முழுப்புள்ளியையும் அள்ளிப் போட்டுவிட்டார்கள். 14 வயதான நடியா அந்தரத்தில் மிகவும் அபூர்வமாக கரணமடித்து ஒரு கலக்கு கலக்கிவிட்டார். நடுவர்களே திறந்த வாய் மூடாமல் இருந்தார்கள். கரணமடிக்கும் காட்சிதான் படத்தில் இருக்கிறது. 1976ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நடியா மூன்று தங்கப்பதக்கங்களையும், ஒரு வெள்ளி, மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டார். ●

படத்தைப் பாருங்கள். உங்கள் விருப்பப்படியெல்லாம் ஊகங்கள் செய்துவிட்டீர்களா? நீச்சல் குளத்தில் 'கிளிக்' செய்யப்பட்ட புகைப்படம் இது.

14 வயதான நீச்சல் வீராங்கனை கதி ஃபிளிக்சொர் நீரில் குத்திப்பாயும் சாகசம் செய்கிறார். மேலே இருந்து நீரை நோக்கி தலைகீழான பாய்ச்சல். நீரை குத்திக் கிழித்துக்கொண்டு தலை உள்ளே சென்றுவிட்டது. உள்ளே செல்ல முன்னர் தலை குத்திய குத்தில் நீரில் ஏற்பட்ட அதிர்வையும் கமரா தெளிவாக பதிவுசெய்திருக்கிறது. உங்களிடம் கமரா இருக்கலாம். இருந்தால் நீச்சல் குளத்தில் உங்கள் நண்பர்கள் குத்திப்பாயும் காட்சியை இப்படி படம் எடுக்க முயன்று பாருங்கள். தோற்றுப்போவீர்கள். இரண்டு நாட்களாக பலத்த கஷ்டப்பட்டு சரியான கோணம் வைத்து இந்தப் புகைப்படத்தை எடுத்தவர் ஜோர்ச் சில்க். இலண்டனைச் சேர்ந்தவர். படப்பிடிப்பு நடந்தது 1962இல். சிறந்த படப்பிடிப்புக்கான விருது பெற்ற படம். ●

## உள்ளே தலை – விருது பெற்ற புகைப்படம்



## வானில் மழை வருமோ?

மான் என்றும், மயில் என்றும் பெண்களை வர்ணிக்காத எழுத்தாளர்களே கிடையாது. லண்டனைச் சேர்ந்த மரீக் சைமன்ஸ் என்னும் பெண் மயிலாகவே மாறிவிட்டார். அதாவது கச்சிதமாக வேடம் போட்டுவிட்டார். லாவகமாக அவள் வளைந்து கொள்ள மேலே தோகைவிரிய கானமயில் வந்து நம் கண்கள்காண நாட்டியமாடுவது போல இருக்கிறதல்லவா?! இந்த மயில் ஆடினாலும் மழை வரத்தானே வேண்டும். வரும்!



**தகவல் பெட்டி**



## பத்திரமான சித்திரம்

மேனியில் சித்திரம். யாருமே வரையவில்லை. பிறக்கும்போதே இயற்கையாக அமைந்துவிட்ட புள்ளிகள் ஒன்றுசேர்ந்து தத்ருபமான சித்திரம் போல காட்சியளிக்கின்றன. ஒரு குதிரையும் குதிரை ஓட்டியும் இருப்பது போல தெரிகிறதல்லவா! அதனால்தான் இந்த மாட்டுக்கு மவுசு. அதிசயமாடாக உலகப் புகழ் பெற்றுவிட்டது. நியூசிலாந்தில் இருக்கிறது. நியூசிலாந்தில் வியப்பானவை எவை? என்ற கேள்விக்கு விடை சொல்லும் பட்டியலில் இந்த மாட்டையும் சேர்த்துக் கொள்ளலாம். ●

## வெண்கல அதிசயம்



இலங்கை ஒரு பௌத்தநாடு என்று சொல்லிக்கொள்கிறார்களல்லவா! ஆனால் உலகிலேயே மிகப்பெரிய புத்தர் சிலை ஜப்பானில்தான் இருக்கிறது. வெண்கலத்தில் செய்யப்பட்ட அச்சிலையின் உயரம் 120 மீட்டர். அகலம் 35 மீட்டர். எடை ஆயிரம் தொன். அதனை செய்து முடிக்க 7வருடங்கள் தேவைப்பட்டன. தாய்வானும், ஜப்பானும் கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய அற்புத படைப்பு. படத்தில் தெரிவது பிரமாண்ட புத்தர் சிலையின் கீழ்பாதத்தில் உள்ள விரல் பகுதி மட்டும்தான். உற்றுப்பாருங்கள் ஒரு விரலில் மூன்று சிறுவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். கொசுக்கள் மாதிரித்தெரிகிறார்கள். அந்தளவுக்கு ஒரு விரலே பிரமாண்டமான பெரிசு. அப்படியானால் சிலை..? ஒரு பெரிய சிலைக்கு ஒரு விரல் உதாரணம்.

இச்சிலை நிறுவப்பட்டது 1993 ஜனவரியில். ●



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

* இந்தியில் இருந்து தமிழுக்கு வந்து பிரபலமான குஷ்பு விரைவில் இந்திப் படமொன்றில் நடிக்கவிருக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக மிதுன் சக்கரவர்த்தி நடிக்கிறார்.

* முதன் முதலில் பாடல்களே இல்லாமல் வெளிவந்த தமிழ்த் திரைப்படம் நடிகர் திலகம் நடித்த 'அந்தநாள்'. இதே பெயரில் தற்போது புதிய படமொன்று தயாராகி வருகிறது. இப்படத்தில் 'வர்றார் சண்டியர்' படத்தில் நடித்த பிரேம் கதாநாயகனாக நடிக்கிறார்.

* மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன் ஆகியோரைத் தொடர்ந்து 'பாலம்', 'புதியகாற்று', 'தொண்டன்' ஆகிய படங்களை இயக்கிய கார்வண்ணனும் நடிக்கத் தொடங்கிவிட்டார். இவர் பாக்யராஜின் 'ஞானப்பழத்தில்' நடித்து வருகிறார்.

* நெப்போலியனின் 50 வது படத்தை பாலுமகேந்திரா இயக்க 'சீவலப்பேரி பாண்டி' தயாரிப்பாளர் பி.ஜி. ஸ்ரீகாந்த் தயாரிக்கிறார். இப்படத்தில் நெப்போலியனுக்கு ஜோடியாக மீனா நடிக்கவுள்ளார்.

* 'ஜமீன் கோட்டை' படத்தை அடுத்து கலைப்புலி ஜி.சேகரன் இயக்கும் படம் 'அதிசய உலகம்'. இதில் 'காவல் பூனைகள்', 'ஜமீன் கோட்டை' ஆகிய படங்களில் சிறு வேடங்களில் நடித்த ராஜ்கோபி கதாநாயகன்.

* விஜயகுமார்- மஞ்சுளா தம்பதிகளின் மூன்று மகள்களில் முதலாவது மகள் வனிதா விஜயகுமாரும், மூன்றாவது மகள் பேபிஸ்ரீதேவியும் நடித்து வருகின்றனர். விரைவில் இவர்களின் இரண்டாவது மகள் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

* கே. பாக்யராஜ் தனது பாக்யம் சினி கம்பைன்ஸ் நிறுவனம் சார்பாக அர்ஜுன் நடித்த 'ஆயுத பூஜை'யைத் தயாரித்தார். அடுத்து இந்த நிறுவனத்தின் சார்பாக விஜயகாந்த் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

* பிரபு, மோகன்லால், தபு நடிக்கும் 'காலாபாணி'யின் தமிழ்ப்பதிப்பான 'சிறைச்சாலை' படத்தில், தபுவுக்கு பின்னணி பேசியுள்ளார் ரேவதி.

* கீதாசிங் இயற்பெயர். சினிமாவுக்காக செண்பகம் என்று மாற்றினார். பின்னர் செண்பகா என்று மாற்றினார். தற்போது தெலுங்கில் இவர் நடித்து வெற்றி பெற்ற 'அம்முவின்டே அலங்கலமார்' படத்திற்குப்பின் அம்மு என்று மாற்றியுள்ளார்.

* புது முகங்களான நவீன்-சிந்து நடித்து வரும் கள்வன் தமிழ்-தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகி வருகிறது. தமிழ்ப் படத்தை செல்வாவும், தெலுங்குப்படத்தை வி.எஸ். ரெட்டி என்பவரும் இயக்குகிறார்கள்.

# தமிழ்ப் படவுலகில் திருட்டு

'ஈயடிச்சான் கொப்பி' விவகாரம் தமிழ்ப் படவுலகிலும் இருக்கிறது. ஒரு படத்தில் இடம்பெறும் பாடல் சூப்பர் ஹிட்டாகிவிட்டால், அதே பாணியில் பத்துப்பாடல்கள் வந்துவிடுகின்றன. கதை விடயத்திலும் அதுதான் நிலை.

அதுமட்டுமல்ல புதிய பிரச்சனை ஒன்றும் உருவாகியிருக்கிறது. தயாரிப்பில் உள்ள படம் ஒன்றில் எடுக்கப்படும் காட்சிகளை உளவறிந்து கண்டுபிடித்து அதே காட்சியைப் போல் படமெடுத்து தமது படங்களில் வெளியிட்டுவிடுகிறார்கள் சில இயக்குநர்கள். குறிப்பாக பிரபல இயக்குநர்கள் இயக்கும் படங்களில் எடுக்கப்படும் காட்சிகளை கண்டறிய பணம் கொடுத்து ஆட்களைப் பிடிக்கிறார்கள் கற்றுக்குட்டி இயக்குநர்கள்.

அதனால்தான் மணிரத்னம் போன்ற இயக்குநர்கள் படு இரகசியமாக படமெடுக்கிறார்கள்.

இந்தியன் பட இயக்குநர் ஷங்கர் என்ன சொல்கிறார் தெரியுமா? "எவ்வளவு பெரிய இயக்குநராக இருந்தாலும் படப்பிடிப்பு நடக்கும்போது அவர்களை பார்வையிட அனுமதிக்க மாட்டேன். என் படத்தில் உள்ள காட்சிகளை கொப்பி அடித்து, எனக்கு முன்பே தமது படத்தை வெளியிட்டு விடுவார்கள்" என்கிறார் ஷங்கர்.

# ரகுமான்+ரகுமான்=அப்பாக்கள்

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானும், நடிகர் ரகுமானும் ஒரே குடும்பத்தில் பெண் எடுத்தவர்கள். ஏ.ஆர்.ரகுமானின் மனைவி நடிகர் ரகுமானின் மனைவிக்கு சகோதரி. ஏற்கனவே ஏ.ஆர்.ரகுமானுக்கு பெண் குழந்தை பிறந்தது. இப்போது நடிகர் ரகுமானுக்கு குழந்தை பிறந்துள்ளது. என்ன குழந்தை தெரியுமா? பெண் குழந்தையேதான். பார்த்தீர்களா..அதிசயமான ஒற்றுமையல்லவா! முரசின் தகவல் பெட்டியில் போட்டிருக்கலாம்.

# "சின்னப் பொண்ணு உளறிட்டாள்"

உலகத் திரைப்படவிழாவில் சுஹாசினியை ... சொன்னார்கள். "நான் இயக்குநராக ஆ... எதிர்பாராமல் நடிகையானேன். நடிப்பதற்கு அறிவோ திறமையோ தேவையில்லை என்று புரிந்தது. ... இயக்குநரானேன். என் முதல் திரைப்படம் 'இந்திரா'" என்றெல்லாம் சுஹாசினி விளாசிவிட்டார். ... கேட்ட நடிகைகள் முகம் சுருக்கிக்கொண்டார்கள்.

சுஹாசினியின் பேச்சை கமலும் கேட்டுக் கொண்டிருந்தார். "சின்னப் பொண்ணு, அறியாமல் பேசி... பெரிது பண்ணாதீங்க" என்று குறைப்பட்டவர்களிடம் சொன்னாராம் கமல்.

# அமைச்சரோடு வந்தார் சுகன்...

சுகன்யாவின் மார்க்கெட் உச்சத்தில் இருந்தபோது ஒரு கிசுகிசு பரவியிருந்தது. தமிழக அமைச்சர் ஒருவரோடு சுகன்யா நெருக்கமாகிவிட்டார் என்பதுதான் அந்த கிசுகி... மார்க்கெட் சரியத் தொடங்கியது.

அமைச்சரோடு தொடர்புள்ள நடிகையோடு தமது பருப்பு வேகாது என்று பல தயாரிப்பாள... சுகன்யா பாதிக்கப்பட்டார். 'அதெல்லாம் வதந்தி' என்று ம...

இப்போது மீண்டும் பலபடங்களில் நடித்துக்கொண்டிரு...

சமீபத்தில் தமிழ்நாட்டில் மதுரையில் பங்கமில் ஒன்றின் ... அமைச்சர் கண்ணப்பன். அவரோடு ஒட்டியபடி வந்து குத்... தெரியுமா? சாட்சாத் சுகன்யாவேதான். மறுப்பு என்னாச்சு...

முன்னுக்கு வரும் நடிகைகள் அரசியல்வாதிகளை கைக்கு... காரணமிருக்கிறது. பலரது வற்புறுத்தலுக்கு வளைந்து கொ... வேண்டாமா, அதற்குத்தான். இல்லாவிட்டால் பொடி... தயாரிப்பாளர்கள்வரை கண்ட நேரத்தில் போய் கதவைத் ...

# மீனாவின்...

'ராசாவின் மனசி... ரசிகர்கள் மனசி... அறிமுகம் செ... நன்றிக்கடன... படத்தில்... நாட்... செ...

முகப்பில்

மீனா

அசாருதீன்



சிரஞ்சீவி
படம் :- சிப்பாயி(கன்னடம்)

# சங்கவியின் நீச்சல்

பிரசாந்தோடு மன்னவா படத்தில் ஜோடி சேர்ந்து நடித்துக்கொண்டிருக்கிறார் சங்கவி. முதல் கட்ட படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது.

தினமும் நீச்சல் பயிற்சி செய்கிறாராம் சங்கவி. உடலை கட்டாக வைத்திருந்தால்தான் கட்டுக்கட்டாக சம்பாதிக்க முடியும் என்று தெரிந்து வைத்திருக்கிறார். அதற்கு நீச்சல் பயிற்சி நிறைய உபயோகமாக இருப்பதாக சொல்கிறார். குடும்பப்பாங்கான வேடங்களில் நடிக்கத்தான் சங்கவிக்கு பிரியமாம். அவர் பிரியப்படலாம், யார் பார்க்கப்போகிறார்கள்?

# கை கொடுத்த கன்னடம்

'புது வசந்தம்' படத்தின் மூலம் தமிழ் படவுலகில் நிலையான இடத்தை எதிர்பார்த்தார் சித்தாரா. கிடைக்கவேயில்லை. கன்னடப் படவுலகம் அழைத்தது. சென்றார். கைகொடுத்தது. விஷ்ணுவர்த்தனோடு ஒரு படம் ஹிட் மளமளவென்று மார்க்கெட் உயர்ந்தது. இப்போது கன்னடத்தில் நம்பர் வன் இடம் சித்தாராவுக்குத்தான்.

# திரையில் 'சிவபார்வதி'

இந்தியாவில் அரசியல் தலைவர்கள் பட்டியலில் சிவபார்வதி ...ின் பெயரும் பிரபலமாகிவிட்டது. பத்திரிகைகளிலும் அவர் பெயர் அடிக்கடி வருகிறது. பார்த்தார் ஒரு படத்தயாரிப்பாளர். தனது புதுப்படத்திற்கு சிவபார்வதி என்று பெயர் சூட்டிவிட்டார்.

ராம்கி-ரஞ்சிதா ஜோடியாக நடிக்கின்றனர். ...வர் றாகு சண்டியரு' படத்தை இயக்கிய என்.கே.விஸ்வநாதன் இயக்குகிறார். மார்ச் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. இசை-சிற்பி. பாடல்கள்-வைரமுத்து. ஆர்.சுந்தரராஜன், செந்தில், மணிவண்ணன், வடிவுக்கரசி ஆகியோருடன் மூர்த்தி, இளம் ஜோடிகளாக நடிக்க புதுமுகங்கள் தேர்வு நடக்கிறது.



சங்கவி

"தோட்டிலே மல்லியப் பூ மணக்குதே மானே.
எடுக்கவா தொடுக்கவா
நடிக்கிறேன் நானே!
பறிக்கச் சொல்லி தூண்டுதே
சுவாமல்லித் தோட்டம்.
நெருங்க விடவில்லையே
நெஞ்சுக்குள்ளே கூச்சம்"

# ஒரு புறம் சுவாதி-மறு புறம் சங்கவி

'முறை மாப்பிள்ளை' பட வெற்றிக்கு பின்னர் அருண்குமாருக்கு பல படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன. அதில் ஒன்று 'சேரன்'. இரண்டு கதாநாயகிகளோடு தாள்கிளப்ப ஒரு அரிய வாய்ப்பு. ஒரு கதாநாயகி சுவாதி. இன்னொரு கதாநாயகி சங்கவி. அருண்குமார் பாடு திண்டாட்டம்தான்.

பெப்ரவரி 15ம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமானது. கதை, வசனம், இயக்கம் ராஜா அண்ணாத்துரை. இசை-தேவா.



பிரசாந்த்
படம் :- மன்னவா

# விஜய் சொல்லும் விளக்கம்

விஜய்-சங்கவி ஜோடி என்றாலே ஜொள்ளுப் பிரியர் கள்பாடு கொண்டாட்டம்தான். அதில் ஒரு சறுக்கல். தைப் பொங்கல் வெளியீடான 'கோயம்புத்தூர் மாப்பிள்ளை' எதிர்பார்த்தளவு ஓடவில்லை. விஜய்-சங்கவி ஜோடி விதம் விதமாக சில்மிஷம் செய்தும் வசூல் மழை பொழியவில்லை.

அடுத்து வரவுள்ள படம் வசந்தவாசல். ஜீவா என்னும் புதுமுகத்தோடு ஒட்டிக்கொண்டு நடித்துள்ளார் விஜய். அதன்மூலம் ஒரு புதிய தத்துவத்தையும் கண்டுபிடித்திருக்கிறார். "படத்திற்கு படம் புதிய நடிகைகளோடு நடிப்பதால் ரசிகர்களுக்கு சலிப்பு வராது. காதல் காட்சிகளிலும் சூடு இருக்கும்." (யாருக்கு?) என்கிறார் விஜய்.

# குவியும் வாய்ப்புக்கள்

'தொட்டாச்சிணுங்கி' படத்தில் அறிமுகமாகி, கல்லூரிவாசல் படத்திலும் கவர்ச்சி விருந்து படைப்பவர் தேவயானி. பம்பாய் வரவான தேவயானியைத் தேடி படவாய்ப்புக்கள் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. தேவயானியிடம் அப்படி என்ன இருக்கிறது, நடிப்பா? அதையெல்லாம் யார் பார்க்கிறார்கள். எப்படியும் நடிக்கத் தயார் என்று தேவயானி சொன்ன செய்தி திக்கெட்டும் பரவியதுதான் காரணம்.

தேவயானி நடித்துள்ள 'சோட்டா சேகர்' என்னும் இந்திப் படம் விரைவில் வெளியாகப் போகிறது. அந்தப் படம் வெற்றிபெற்றால் தேவயானி பம்பாய் பறந்து விடுவார். தமிழ் படவுலகுக்கு கவர்ச்சி இழப்பாகிவிடும்!

# வ...

'அர... கவர்ச்சி... தெரியும... அஹா... கதாநா... ஒப்பந்த... கதாநா... தால்... கிறார்... ஆகி... இ... ச...

# கமலோடு ...

'கண்டேன் சீதையை' ... இசையமைப்பவர் தேவா. முதல் ... கமல் படத்திற்கு இசையமைக்கும் ... பெற்றுள்ளார் தேவா.

மகளிர் மட்டும், சதிலீலாவதி ... போல 'கண்டேன் சீதையை' படமும் ... விருந்து. வசனங்களை கிரேஸி மோகன் ... கலகலப்பாக இருக்கும்.

கமல்ஹாசன், ருசிதா (அறிமுகம்) ரமே... ...ரமா, நாசர், எஸ்.பி.பாலசுப்பி... கிரேஸி மோகன் ஆகியோரும் நடி... மலையாளப்படவுலகின் முன்னணி ... பாலசந்திர மேனன் இயக்குகிறார். பாட... ஒளிப்பதிவு, நம்பியாத்திரி. படப்பிடிப்பு ... மாகிவிட்டன.



படிப்பகம்

# சினி விசிட்

ன்பின்னர் சுகன்யாவின்

துங்கிக் கொண்டார்கள்.

ர் சுகன்யா.
ழா. சிறப்பு விருந்தினர்
கேற்றி வைத்தவர் யார்

ட்டுக் கொள்வதற்கு ஒரு
பிருக்க ஒரு துணிச்சல்
ர்கள் முதல் பெரும்
ர்கள்!

## முன்னாள் நடிகையின் அனுபவம்

நடிகை தேவிகா மறைந்த என்.டி.ராமராவோடு பல படங்களில் இணைந்து நடித்தவர்.

ராமராவை புகழ்ந்திருக்கிறார் தேவிகா. நடிகர்கள் பலர் காதல் காட்சிகளில் நடிக்கும் போது கையைப் பிடிக்க வேண்டி இருந்தால், தமது ஆசையைத் தெரிவிப்பதுபோல அழுத்துவார்களாம். ராமராவ் அப்படியெல்லாம் செய்யமாட்டார் என்கிறார் தேவிகா.

விட்டுக்கொடுத்து நடந்துகொள் என்று பல நடிகர்கள் சொல்லுவதுண்டு. ராமராவிடம் அப்படியான பழக்கங்கள் கிடையாது. என்றெல்லாம் சொல்லியிருக்கிறார் தேவிகா.

தேவிகாவின் மகள் கனகா. ராமராவ் கனகாவைப் பார்த்துவிட்டு பெரிய நடிகையாக வருவாள் என்று சொன்னாராம். அதையும் தேவிகா சொல்லியிருக்கிறார்.

## நன்றி

ம் மூலமாக தமிழ்ப்பட
ம்பிடித்தவர் மீனா.
ராஜ்கிரண். அதற்கு
ராஜ்கிரணின் புதிய
ப்பதற்காக அதிக
மீனா ஒதுக்கிக்
ருக்கிறார். 'பொன்னு
யற பூமி' படத்தில்
ஜ்கிரணின் ஜோடி
மீனாதான்.

## ரசிகைகளின் நாயகன்

ஐந்து பாட்டு, ஐந்து சண்டை என்றால் அது சிரஞ்சீவி படப்பாணி என்பது பிரபலம். சமீபகாலத்தில் சிரஞ்சீவி படங்கள் தோல்வியடைந்து வருகின்றன. அதனால் தனது பாணியை மாற்றிக்கொண்டு கதையுள்ள படங்களில் நடிப்பது பற்றி யோசித்துவருகிறார் சிரஞ்சீவி.

தெலுங்கில் சூப்பர் ஸ்டாரான சிரஞ்சீவியை அரசியலில் இழுத்துவிடும் முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. பிடி கொடாமல் நழுவிக்கொண்டிருக்கிறார் சிரஞ்சீவி.

சிரஞ்சீவிக்கு ரசிகர்கள் கூடுதலா, ரசிகைகள் கூடுதலா என்று கணிப்பு நடத்தியது ஒரு பத்திரிகை. முடிவு என்ன தெரியுமா? ரசிகைகள்.

## விசித்ராவுக்கு பிடித்த விளையாட்டு

வீட்டில் காலை நேரத்தில் டென்னிஸ் விளையாட மறக்கமாட்டார் விசித்ரா. உடலுக்கு உறுதி காலையில் துள்ளுவது, குதிப்பது. விசித்ராவின் உடல் அழகுக்கு அதுதான் காரணமாம்.

விசித்ராவிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்கள்.

* கவர்ச்சி இல்லாமல் நடிக்க முடியாதா?
வி- ரசிகர்கள் விரும்புவதைத்தானே கொடுக்க முடியும்.
* ரசிகர்கள் முத்தம் கேட்டால் கொடுப்பீர்களா?
வி- வயதைப் பார்த்து முத்தம் கொடுப்பேன். (சிறு குழந்தைகள் கேட்டால்)
* பிடித்தமான விளையாட்டு?
வி- கிரிக்கெட்.
* பிடித்தமான விளையாட்டு வீரர்கள்.
வி- கவாஸ்கர், கபில்தேவ்.



மலேசியா வாசுதேவன்-கோவை சரளா
படம் :-சும்மா இருங்க மச்சான்



## கம்பியூட்டர்-'அம்மன்' பார்க்கக்கூடிய படம்

பிரமாண்டமான செலவு. அத்தனையும் தொழில் நுட்ப திறமைக்காக கொட்டப்பட்டிருக்கிறது. படத்தின் பெயர்-அம்மன். கதையென்று பார்த்தால் புதுசாக ஒன்றும் இல்லை. பழைய பாடலை கம்ப்யூட்டர் இசையில் மெருகூட்டுவதுபோல, பழைய படங்களில் இடம்பெற்ற கதையை புதிய தொழில் நுட்ப வித்தையால் புதுசுபடுத்தி விட்டார்கள். தந்திரக் காட்சிகள் விழிகளை விரியவைக்கின்றன. சில இடங்களில் பயமுறுத்துகின்றன.

அம்மனாக நடிக்கிறார் ரம்யா கிருஷ்ணன். இரண்டு மூன்று காட்சிகளில்தான் தோன்றுகிறார். அம்மனாக நடிக்கும் குழந்தை நட்சத்திரம் தான் பிரமாதம். சௌந்தர்யா அம்மன் பக்தையாக நடிக்கிறார். நன்றாகத்தான் நடிக்கிறார்.

பக்தி படம் என்றாலும் ஒரு பாடல்காட்சியில் சுரேசும், சௌந்தர்யாவும் கவர்ச்சியில்லையே என்ற குறைதெரியாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

வில்லனாக ராமிரெட்டி நடித்திருக்கிறார். தெலுங்கில் சூப்பர் ஹிட்டான படம் தமிழில் மொழி மாற்றப்பட்டுள்ளது.

நம்நாட்டுக்கு வீடியோ கசட் வந்திருக்கிறது.

வீடியோ வாய்ப்புள்ளவர்கள் எடுத்துப்பார்க்கலாம். பொழுது போகும் என்பதற்கு 'சினி விசிட்' உத்தரவாதம் தருகிறது. ஆனால் கதையை மட்டும் தேடவேண்டாம். காட்சிகளில் கரைந்துவிடுங்கள்.

## திரையில் புதியவை

தமிழகத்தில் புதிதாக திரைக்கு வந்துள்ள படங்கள். 'அம்மன் கோவில் வாசலிலே' (ராமராஜன்-சங்கீதா) 'மீண்டும் சாவித்திரி' (நிழல்கள் ரவி- ரேவதி-விசு) 'மகாபிரபு' (சரத்குமார்- சுகன்யா) 'யுத்தம்' (மோகன்லால்-ஊர்வசி)

சென்னையில் ஒரு திரையரங்கில் வெள்ளிவிழாவை தொடப்போகும் படம் 'ஆசை'.

## ...ர் அஹானா

...கிளி' படத்தில் அறிமுகமாகி அதிரடியாக ...க்கொண்டிருந்த நாயகி அஹானாவைத் நீண்டகாலமாக காணாமல் போயிருந்த ...படி தோன்றி மிரட்டப்போகிறார். முரளி ...டிக்கும் 'சின்னமாமன்' படத்தில் கதாநாயகியாக ...ப்பட்டிருக்கிறார். ஆனாலும் படத்தில் முக்கிய ...வசிதான். ஊர்வசி கவர்ச்சி காட்டமாட்டார் என்ப ...ச்சாரத்தை கவனிக்க அஹானாவை போட்டிருக்...

...ஜ், கவுண்டமணி, செந்தில், கோவை சரளா, கரிகாலன் ...டிக்கிறார்கள். பாடல்கள் வாலி. இசை-சரத். மலையாளப்பட...
...பாளரான
... முதலாக
... படிக்
இசை
திரைக்கதை-
இயக்கம்
...நாதன்.



பிரசாந்த்-பூஜாபட
படம் :-கல்லூரிவாசல்

## என்ன தகுதி வேண்டும்! சரத்குமார் சொல்கிறார் பதில்!

உற்சாகமாக அரசியலில் குதித்து ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறார் சரத்குமார். ரஜினி அரசியலுக்கு வந்தால் அவர்தான் தலைவர். இல்லையென்றால் நான் தனிக்கட்சி தொடங்குவேன் என்று சூளுரைத்திருக்கிறார்.

"அரசியலுக்கு வர என்ன தகுதி வேண்டும்?" என்ற கேள்விக்கு வில்லனை புரட்டி எடுக்கும் ஆவேசத்தோடு பதில் சொன்னார் சரத்.

"சேவை மனப்பான்மையையும், சமுதாய அக்கறையையும் விட உயர்ந்தபட்ச தகுதி என்ன இருக்கிறது. இன்னும் சொல்வதானால் நடிகர்கள்தான் மக்களுக்கு அதிக உதவிகள் செய்துள்ளோம். எங்களுக்கு மக்கள் பிரச்சனை தெளிவாகத் தெரிகிறது. அதைத் திரைப்படங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிறோம்.

நடிப்பு என்பது தொழில்... எனவே இனி நடிகர்கள் அரசியலுக்கு வரலாமா? என்கிற கேள்வியை எழுப்பாதீர்கள். அரசியலுக்கு நல்லவர்கள் யார் வேண்டுமானாலும் வரலாம். வரட்டும். அரசியல் நல்லதாக மாறட்டும்" என்கிறார் சரத்குமார்.

## கஜோலுக்கு சவால்

'மின்சாரக் கனவு' படுவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. கதாநாயகி கஜோலை வேறு தமிழ்ப்பட தயாரிப்பாளர்களும் அணுகியிருக்கிறார்கள். மின்சாரக் கனவை முடித்துவிட்டுத்தான் புதிய தமிழ்படங்களில் நடிப்பேன் என்றுவிட்டார் கஜோல்.

பிரபுதேவாவின் நடனம் கஜோலுக்குப் பிடிக்குமாம். இந்திப் படவுலகில் நடனம் ஆடுவதில் திறமையுள்ள நடிகை கஜோல். "மின்சாரக் கனவில் பிரபுதேவாவுடன் ஆடுவது சவால்மாதிரி அவரே அசந்து போவது போல ஆடுவது தான் சவால்" என்கிறார் கஜோல்.



பிரபுதேவா-கஜோல்-அரவிந்த்சாமி
படம் :-மின்சாரக்கனவு

## தொழில் அதிபரும் மீனாவும்

இந்த ஆண்டு மீனாவிற்கு ராசியான ஆண்டாக அமையுமா என்பது சந்தேகம்தான்.

நக்மா, மனிஷா, ஊர்மிளா, கஜோல், பூஜாபட் என்ற பம்பாய் இறக்குமதி நடிகைகளின் பட்டியல் நீண்டு கொண்டிருக்கிறது.

எல்லோருமே கவர்ச்சிப் புயல்கள். மீனாவும் கவர்ச்சி காட்ட சளைத்தவரல்ல. தமிழில் ஒரு வரையறை மட்டும்தான் ஆடைக்குறைப்பு செய்தார். தெலுங்கில் என்னைப்பார், என் மேனியைப் பார் என்றளவுக்கு கவர்ச்சிகாட்டினார்.

தமிழில் ரஜினியோடு மூன்று படங்களில் நடித்தது மூலம் நம்பர் வன் இடத்தை குறிவைத்தார் மீனா. பம்பாய் வரவுகள் கவர்ச்சிக் குண்டுகளை வீசியதால் மீனாவால் அந்த இடத்தை கைப்பற்ற முடியவில்லை.

இந்த ஆண்டு ராஜ்கிரணின் 'பொன்னு விளையுற பூமி' படத்தை பெரிதும் நம்பியிருக்கிறார்.

இதற்கிடையே கேரள தொழிலதிபர் ஒருவர் மீனாவை வெகு தீவிரமாக காதலித்துக் கொண்டிருக்கிறார்.

கேரளா சென்று அந்தத் தொழிலதிபரோடு சில நாட்கள் தங்கியிருந்து தங்கள் காதலை பரிசீலித்துப் பார்த்திருக்கிறார் மீனா. விஷயம்வெளியே கசிந்து விட்டது.

இப்போதைக்கு திருமணமில்லை என்று மட்டும் சொல்கிறார் மீனா. காதல் விவகாரத்தை மட்டும் மறுக்கவில்லை.

## ரம்யாவின் பழக்கம்

காதல் விவகாரங்களில் அடிக்கடி மாட்டிக் கொள்பவர் ரம்யா கிருஷ்ணன். அவர் கவலைப்படுவதே கிடையாது. "நான் எல்லோருடனும் சகஜமாகப் பழகுவேன். நெருக்கமானவர்களிடம் உரிமை எடுத்துக் கொண்டு பழகப்போக மற்றவர்கள் அதனை தவறாக எடுத்துக்கொள்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்வது?" என்று கேட்கிறார். ●

www.padippakam.com

# செல்லமான ரோஜாக்கள் சிங்காரக் குழந்தைகள்!

குழந்தைகளின் சுய வளர்ச்சிக்குத் தடைகள் இல்லாத வகையில் நாம் குழந்தைகளை வளர்த்திட வேண்டும்.

நாமே ஒவ்வொன்றையும் சொல்லிக் கொடுப்பதை விட, குழந்தைகள் தாமாகவே அறிந்து கொள்ளும் ஆவலையும் அதற்குரிய வாய்ப்பையும் நாம் அளிக்க வேண்டும். இதனால் குழந்தைகள் புத்திசாலிகளாக வளரும்.

மற்றவர்கள் தயாரித்துப் புகட்டும் அறிவை விடத் தானாக வளர்த்துக் கொள்ளும் புத்திசாலித்தனம் வாழ்க்கையில் அதிக பயனைத்தரும்.

வீட்டிற்கு விருந்தினர்கள், புதிய நண்பர்கள் வரும்போது குழந்தைகள் அதிக குறும்பு செய்யும். இது வந்திருக்கும் விருந்தினர்களின் கவனத்தைத் தங்கள் மீது திருப்ப குழந்தைகள் கையாளும் சாதாரண உத்தி. குழந்தைகள் தங்களுக்குத் தேவையான அன்பை, பெற்றோரின் கவனத்தை ஈர்ப்பின் மூலமாக பெறுவதால், நாம் தகுந்த அக்கறை செலுத்திக் குழந்தைகளைக் கவனிக்க வேண்டும்.

குழந்தைக்குத் தகுந்த தகப்பனாக இருப்பது சாதாரண காரியம் இல்லை. மகாத்மா காந்தி இந்திய நாட்டின் தேசப்பிதா. ஆனால் அவருடைய மகன் அவரை விரும்பவில்லை. ஒரு மகனுக்குத் தகுந்த தந்தையாக இருப்பது, தேசத்திற்கே தந்தையாக இருப்பதைவிடச் சிரமமான காரியம் என்பது இதிலிருந்து உணரலாம்.

குழந்தைகளை அளவுக்கு மீறி அடக்கியே வைக்கக் கூடாது. அதனுடைய தனி வாழ்வையும் அனுமதிக்க வேண்டும்.

குழந்தை தன்னை ஒரு புத்திசாலியாகக் கருதி வளருமாறு செய்ய வேண்டும். அதை அடிக்கடி 'முட்டாள்' என்று திட்டித் திட்டியே வளர்த்தால் இந்த எண்ணமே அதன் மனதில் ஆழப்பதிந்து விடும். பிறகு அந்தக் குழந்தையால் புத்திசாலியாக வளரவே முடியாது.

நீயொரு புத்திசாலியான பிள்ளை என்றே கூறி வளர்க்கப்படும் குழந்தையிடம் அந்த எண்ணம் விதை போலப் பதிந்து முளைவிடும். இது குழந்தை சிறந்த புத்திசாலியாக வளரப் பயன்படும்.



எல்லாக் குழந்தைகளுமே பிறக்கும்போது புத்திசாலித்தனமும், பரிசுத்தமும் உடையவையாகவே பிறக்கின்றன.. ஆனால் அவர்கள் மீது அழுக்கு குவிக்கப் படுகிறது.

இது தவிர்க்கப்பட்டு குழந்தையின் தனித்தன்மையும், புத்திசாலித்தனத் தன்மையும் வளரும் சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும்.

பெற்றோர் குழந்தைகளை மற்றவர்களுடன் பழகவும் அனுமதிக்க வேண்டும். பெற்றோரைத் தவிர மற்றவர்களுடன் சிறு வயதில் பழகாதவர்கள் பிற்காலத்தில் மற்றவர்களுடன் பழகுவதில் சிரமம் ஏற்படுகிறது. இவர்கள் தங்கள் பெற்றோரைப் போலவே மற்றவர்களும் இருப்பார்கள் என்று எண்ணி மற்றவர்களுடன் பழகும் போது வேதனையைச் சந்திக்கிறார்கள்.

பலருடன் பழகும் வாய்ப்பு சிறு வயதில் கிடைத்தால், பிற்காலத்தில் இவர்கள் தகப்பனாரைப் போலவோ, தாயாரைப் போலவே மற்றவர்கள் இருக்க மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள். இதனால் சமுதாயத்தில் மற்றவர்களோடு அன்புடன் பழக வாய்ப்பு ஏற்படுகிறது.

# லேடீஸ் ஸ்பெஷல்

## முகப்பருக்கள் ஜாக்கிரதை

• ஸ்நோ, பவுடர் இவைகளைத் தேர்ந்தெடுக்கையில் உங்கள் உடல் நிறத்திற்கு ஏற்ற வகையில் தேர்ந்தெடுங்கள். பவுடரின் நிறம் நீங்கள் பயன்படுத்தும் ஸ்நோவின் கலரை விட லைட்டாக இருப்பது நல்லது. கோடை காலத்தில் பொதுவாக தோலின் நிறம் மாறுவதுண்டு. ஆகவே, அதற்கேற்றவாறு ஸ்நோ, பவுடர் பயன்படுத்துங்கள். ஆனால், இவற்றை வாங்கும்போது நல்ல பொருள்களாகப் பார்த்து வாங்குங்கள். கண்ட கண்ட ஸ்நோ, பவுடர் இவற்றை வாங்கி முகத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். உங்கள் டாக்டரைக் கலந்தாலோசித்து விட்டு வாங்குங்கள்.



★ உங்கள் முழங்கைகள் கறுப்பாக, சொரசொரப்பாக இருந்தால் எலுமிச்சம் பழச்சாற்றை அவ்விடங்களில் தடவி லேசாகத் தேய்த்துவிட்டுச் சுமார் 5 முதல் 10 நிமிடங்கள் அப்படியே இருங்கள். பின்னர் கழுவி விடுங்கள். கருமை நிறம் மாறி விடும். முழங்கால்களிலும் இப்படியே செய்ய லாம். சில கிறீம்களும் இதற்காக விற்கிறார்கள். அவற்றையும் பயன்படுத்தலாம்.

★ சோப் போட்டுக் குளிக்கையில் நுரையை நிறையத் தடவித் தேய்த்துக் குளியுங்கள். இதனால் தோல் சுத்தமாகும். நமது தோல் சுத்தமாக இருந்தாலே போதும். அழகு தானே மிளிரும்.

★ தலை முடியை அடிக்கடி நீரில் கழுவுவது நலம். வாரம் ஒரு முறையாவது எண்ணெய் தேய்த்துக் குளிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தலையில் உள்ள துவாரங்கள் வழியாகக் கழிவுப் பொருள்கள் வெளியேறுகின்றன. அடிக்கடி தலை முடியை நீரில் அலசாது போனால் இந்த அழுக்குகள் முடியிலே தங்கி விடும். அதுவும் குட்டை முடி உடையவர்கள் இதைக் கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

★ அடிக்கடி மேக்கப் செய்து கொள்பவர்கள் ஒவ்வொரு தடவையும் முகத்தை நன்றாக நீரில் கழுவியபின் ஸ்நோ, பவுடர் போட்டுக்கொள்வது நல்லது. அல்லது முகத்தை நன்றாகத் துடைத்து விட்டு மேக்கப் செய்து கொள்ளவும். அப்படி இல்லாமல் பவுடருக்கு மேலேயே பவுடர் போட்டுக் கொண்டால் பின்வரும் விளைவுகள் ஏற்படும்.

1. பருக்கள் அதிகமாகும்.
2. கட்டிகள் உண்டாகலாம்.
3. சருமம் எரிச்சல் அடையலாம்.
4. அழகு குறையும், பளபளப்பு மறையும்.

# வெந்நீர் குளியல்

★ குளிக்கும்பொழுது தண்ணீரில் 3 அல்லது 4 சொட்டுகளுக்குக் குறையாமல் டெட்டால் விட்டுக் கலந்து கொண்டு குளியுங்கள். இது நம் தோலிற்கு மிகவும் நல்லது.



★வெந்நீரில் குளிப்பவர்கள் சுடச்சுட வெந்நீரைத் தலையில் விட்டுக் கொள்ளாதீர்கள். முதலில் பாதங்களில் விட்டுக் கொள்ளுங்கள். பின்னர் முழங்கால், தொண்டை, இடுப்பு, மார்பு, முகம், இறுதியில் தலை என்று விட்டுக் கொள்ளுங்கள். இதனால் உங்கள் உடம்பின் வெப்பநிலை, வெந்நீரின் வெப்பநிலைக்கு ஒத்து வரும். தடிமன் முதலியன வராமல் இருக்கும். மிகவும் சூடாக விட்டுக் கொள்ளாதீர்கள். பொதுவாக 98 F முதல் 99 F உஷ்ண நிலை இருந்தால் போதும்.

★ குளிர்ந்த தண்ணீரில் குளிப்பது உடம்பிற்கு மிகவும் நல்லது.

★ சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் இதனால்,

1. உடல் தூய்மையாகிறது.
2. ஆரோக்கியமான ஒட்சிசன் உடம்பில் செல்வதால் நாளடைவில் அழகு அதிகரிக்கிறது.
3. புற்றுநோய், கசரோகம் போன்ற நோய்கள் வராது.
4. உடம்பு சீராகும். இதனால் உற்சாகம் பெருகும். தன்னம்பிக்கை வளரும். தன்னம்பிக்கை வளர்ந்தால் ஒவ்வொரு பெண்ணும் வாழ்க்கையில் உயர்ந்து விடலாம்.

# பெண் நேற்று இன்று நாளை

நிர்வாகம் இளைஞர் கைகளிலும், பெற்றோர் கைகளிலும் அகப்பட்டுவிட திருமணம் என்பது இந்தக் காலத்தின் கேலிக் கூத்தாகப் போய்விட்டது. பெரும்பான்மையான நாடுகளில் இளைஞர்கள் வெற்றிபெற, பெற்றோர்கள் தோற்றுப் போய் விடுகிறார்கள்.

பெண் வியாபாரப் பண்டமாகி விட்டாள். ஒரு வீட்டிலிருந்து வாங்கப்பட்டு, இன்னொரு வீட்டில் சேர்க்கப்படுகிறாள். காலப் போக்கில், அவள் அழகு மங்கி விட, இருட்டு மூலையில் தூக்கி எறியப்படும் பழைய மரச்சாமான் ஆகிவிடுகிறாள்.



நவீன நாகரிகம் பெண்ணைக் கொஞ்சம் புத்திசாலி ஆக்கியுள்ளது. ஆனால், ஆணின் பேராசை காரணமாக அவள் துயரம் அதிகரித்து விட்டது. நேற்றைய பெண், மகிழ்ச்சியான துணைவியாக இருந்தாள். ஆனால் இன்றைய பெண் பரிதாபத்திற்குரிய மனைவியாக ஆகி விட்டாள். கடந்த காலத்தில், அவள் வெளிச்சத்தில் கண்ணை மூடிக் கொண்டு நடந்தாள் ஆனால், இன்று அவள் கண்ணைத் திறந்து கொண்டு இருளில் நடக்கிறாள்.

அவள் தன் அறியாமையில் அழகாகவும், எளிமையில் கற்புடையவளாகவும், பலவீனத்தில் பலமுடையவளாகவும் இருந்தாள். இன்று அவள், தன் அறிவுக்கூர்மையில் அழகற்றவளாகவும், தன் ஞானத்திலும் மூடநம்பிக்கை கொண்டவளாகவும், இதயமற்றவளாகவும், இருக்கிறாள். அழகு ஞானத்துடனும், அறிவுக்கூர்மை, கற்புடனும், உடல் பலவீனம், ஆன்ம பலத்துடனும், ஒரு பெண்ணில் ஒன்று சேரும் நாள் என்றாவது வருமா?

கலீல் ஜிப்ரானின்–'முறிந்த சிறகுகள்'

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | ச.ஜெயகௌரி 93/4 கன்னாரத்தெரு, கொழும்பு-13. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா? இவ்வாரம் பரிசுக்குரியவர் மார்ச் 05ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் காலை 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து (நாமிரு தனிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காலிங்க பிளேஸ், கிருல்லப்பனை, கொழும்பு-06.

## கர்ப்பிணிகள் கவனிக்கவும்

கர்ப்பமாக இருக்கும் தாய்மார்களின் வயிற்றில் குழந்தை இறந்து இருந்தால் கீழ்க்கண்ட அறிகுறிகள் உங்களுக்குத் தோன்றும்.

1. அடிவயிறு கனத்து கல் போல இருக்கும்.
2. வயிறு மிகவும் குளிர்ந்து போகும்.
3. லேசான விறையல் தோன்றும்.
4. குழந்தை புரள மாட்டாது.
5. வயிறு உறுதியாகவும், உருண்டையாயும் தோன்றுவதற்குப் பதிலாக வயிறு மிகவும் தொங்கலாகக் காணப் படும்.
6. புரண்டு படுத்தால், ஒரு பக்கமிருந்து மறுபக்கம் புரண்டு கல் போல் விழுவதாகத் தெரியும்.
7. தொப்புள் வெளியே தள்ளிக் கொண்டிருந்தது உள்ளே இழுத்துக் கொண்டு குழி விழும்.
8. வயிறு சிறுத்துத் தெரியும்.
9. மார்பு வற்றி விடுவதோடு அதன் கனம் குறையும். பால் இல்லாமல் போய் விடும்.
10. கண்கள் குவிந்து போவதோடு, கண்களைச் சுற்றிக் கருவளையமிட்டது போல் காணப்படும்.
11. ஆயாசமும், சோர்வும் தோன்றும்.

இந்த அறிகுறிகள் இருந்தால் உடன் மருத்துவரை அணுகி நிவாரணம் செய்ய வேண்டும்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கபடுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** C

பெயர்:.......................

முகவரி:.......................

.......................

கையொப்பம்:.......................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:02-03-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# ஆரம்பித்து வைப்பதில் சிறந்தவர் யார்?

## முன்னாள் கப்டன் ஸ்ரீகாந்த் பதில்

ஸ்ரீகாந்த்-உலகப் புகழ் பெற்ற அதிரடி ஆட்டக்காரர். மைதானத்தில் இறங்கிவிட்டால் நாலாபுறமும் பந்து பறக்கும். ஒரு நாள் போட்டிகளில் துவக்க ஆட்டக்காரர் எப்படி ஆடவேண்டும் என்று காட்டியவர். இரண்டாண்டுகளுக்கு முன் ஓய்வு பெற்றுவிட்டார். இந்திய அணியின் முன்னாள் கப்டன். தமிழ் நாட்டுக்காரர்.

'96 உலகக் கோப்பை பற்றி ஸ்ரீகாந்த் என்ன சொல்கிறார்?

"அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து போன்ற நல்ல அணிகள் பல மோதுகின்றன. லாரா விளையாடுவதால் மேற்கிந்திய தீவு அணியும் நல்ல அணிதான். அரை இறுதிவரை இந்தியா போகும் என்பதை நிச்சயமாக சொல்ல முடியும். ஆனால் கோப்பையை வெல்ல இந்தியா கடினமாகப் பயிற்சி பெறவேண்டும்." என்கிறார் ஸ்ரீகாந்த்.

ஸ்ரீகாந்திடம் மேலும் மூன்று கேள்விகள்:

**கே:- ஒரு வருடகாலத்திற்கு அசாருதீனை கப்டனாக அறிவித்திருக்கிறார்களே?**

ஸ்ரீ:- நல்ல முடிவு. அடுத்த முறையும் தான்தான் கப்டன் என்று தெரிந்துவிடுவதால் ரிஸ்க் எடுத்து விளையாடலாம்!"

**கே:- இந்திய வீரர்களில் ஆட்டத்தை துவக்கக்கூடியவர் யார்?**

ஸ்ரீ:- நிச்சயமாக டெண்டுல்கர்தான். நன்றாகத்தானே விளையாடுகிறார். துவக்க ஆட்டக்காரர்கள் நிறைய ரன்கள் எடுத்தால்தான் வெற்றிக்குரிய ஸ்கோரை எட்ட முடியும்.

**கே:- ஆனால் அவரும் உங்களைப் போல் தூக்கியடித்து ஆட்டமிழந்துவிடுகிறாரே?**

ஸ்ரீ:- 'ரிஸ்க்' எடுத்தால்தான் சிக்சர் அடிக்க முடியும். குறைந்த பந்துகளில் அதிக ரன்கள் எடுக்க முடியும். இப்போதைய சூழ்நிலையில் டெண்டுல்கரும், சித்துவும் நல்ல துவக்கத்தைக் கொடுக்க முடியும்.



**கே: உலகக்கோப்பைப் போட்டிக்கு முன்பு நாம் அதிகம் ஆடவில்லையே? இது எந்த அளவுக்கு நம்மைப் பாதிக்கும்?**

ப: வாஸ்தவம் தான். ஆனால் பாருங்கள், போன தடவை உலகக் கோப்பைக்கு முன்பு அவுஸ்திரேலியாவில் ஏகப்பட்ட மாட்ச்கள் ஆடி மனதளவில் ரொம்பவும் களைத்து விட்டோம். இந்த முறை புத்துணர்ச்சியோடு போட்டியில் நுழைகிறோம். இது ஒரு சாதகம் என்று தான் நினைக்கிறேன்.

**கே: உங்கள் அணியில் எந்தெந்த அம்சங்களில் பிரச்சனைகள் இருப்பதாக நினைக்கிறீர்கள்?**

ப: ஃபீல்டிங்கிலும், விக்கெட்டுகளுக்கு இடையில் ஓடுவதிலும் பிரச்சனை இருக்கிறது. கடைசி ஓவர்களில் பாட்டிங் செய்வதிலும் பந்து வீசுவதிலும் இன்னமும் எங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். பயிற்சி முகாமில் இதற்கெல்லாம் கவனம் செலுத்தினோம்.

**கே: நீண்ட காலமாகவே ஃபீல்டிங் நமது பலவீனமாக இருந்து வருகிறதே?**

ப: காலை நேரப் பயிற்சி (7-11) முழுவதுமே ஃபீல்டிங்கிற்குத்தான். நான் ஃபீல்டிங் கோச்சாகி விட்டேன் தெரியுமோ...? (சிரிக்கிறார்)... சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். உண்மையில் என்ன செய்கிறோம் என்றால், 30 யார்ட்ஸ் வட்டத்துக்குள் ஃபீல்டிங் செய்பவர்களுக்கும் அதற்கு வெளியில் ஃபீல்டிங் செய்பவர்களுக்கும் தனித்தனியே பயிற்சி கொடுக்கிறோம். உள்ளே இருப்பவர்களுக்கு, டைவ் அடிப் பது, பந்தைச் சரியாக எறிவது, கஷ்டமான கோணங்களிலிருந்து ஒற்றை ஸ்டம்பைக் குறியாகப் பதம் பார்ப்பது ஆகியவற்றுக்குப் பயிற்சி, சறுக்கிச் சென்று பவுண்டரிகளைத் தடுப்பது, உயரே பறந்து வரும் காட்ச்களைப் பிடிப்பது ஆகியவற்றிற்குப் பயிற்சி தருகிறோம்.

## "கிண்ணத்தைக் கைப்பற்றுவோம்"

## அசாருதீன் நம்பிக்கை



**கே: துவக்க ஜோடி எப்படியிருக்கும்? துவக்கத்தில இறங்கும் டெண்டுல்கர் சீக்கிரம் அவுட் ஆகிவிட்டால் மற்றவர்கள் மீது நிர்ப்பந்தம் அதிகரித்து விடுவதால் அவரைச் சற்றுப் பிந்தி இறக்க வேண்டும் என்று ஒரு பேச்சு அடிபடுகிறதே.**

ப: உண்மையில் அப்படியெல்லாம் நிர்ப்பந்தம் ஏற்படுவதாக நான் நினைக்கவில்லை. சச்சின் சரியாக ஆடாதபோது கூட நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். சச்சினும், பிரபாகரும் தங்கள் வேலையைச் சரியாகவே செய்து வருகிறார்கள். இப்போதைக்கு இந்தத் துவக்க ஜோடியை மாற்றக் கூடாது என்றுதான் கருதுகிறோம்.

**கே: ஆக, மற்ற நாட்டு அணிகள் செய்வது போல பரிசோதனைகளையோ புதுமையான முயற்சிகளையோ நீங்கள் செய்யப் போவதில்லை.**

ப: நான் அப்படிச் சொல்லவில்லை. அந்தந்த மாட்ச்சையும், பிட்ச்சையும் வீரர்களின் ஃபோர்மையும் பொறுத்து மாட்சுக்கு முந்தைய தினம் முடிவெடுப்போம்.

**கே: போட்டியை நடத்துபவர்கள் கோப்பையை வெல்வதில்லை என்று ஒரு பேச்சு இருக்கிறது.**

ப: இதையெல்லாம் நான் நம்புவதில்லை. கோப்பையை வெல்லும் திறமை எங்களுக்கு இருப்பதாகவே நான் நினைக்கிறேன். அதைச் சாதிக்க முழு மூச்சுடன் முயற்சி செய்வோம்.

'இந்தியா டுடே'' நிருபருக்கு அசாருதீன் அளித்த பேட்டியிலிருந்து.



படிப்பகம்

## வெடித்துச் சிதறும் பட்டாசு



கழுகு தின்னும் கனவில்
சிதறிக்கிடக்கின்றன
உறுப்புகள்!
ooo
ஒன்று சேர்த்து
உருவாக்கிவிடுங்கள்!
ooo
நெருப்பில்
இதயம் விழுந்து எரிகிறது
அதையெடுத்து
நீர் தெளித்து
சுகப்படுத்தித் தாருங்கள்!
ooo
பனி பெய்யும் இரவுகள்
புண்ணாகி அழுகின்றன!
விடியல்களில்
நெருப்புச் செய்தி வடிகிறது.

மனமோ
இதளுக்குள் விழுந்து
கிடக்கிறது;
கண்டு பிடித்து
எடுத்துத்தர முடியுமா?
ooo
சந்தோசம்
மரணித்துவிட்டது;
உயிர்ப்பித்துத் தாருங்கள்!
ooo
சுவர்களைத்தாண்ட முடியாது
உணர்வுகள் முடமானது.
யாரும் இங்கே
நிரந்தரமில்லாத அனாதைகள்.

## தேன் கிண்ணம்



நாம் தங்கும்
இந்த இடத்திலாவது
இதயம்
தென்றலோடு
கலக்க வேண்டாமா?
எங்கள் சுவாசங்களை
பேய்க்காற்றா
திருட வேண்டும்?
ooo
வெடித்துச் சிதறும் பட்டாசம்
இந்தச்சிறையும்
வித்தியாசப்படவில்லை!
எங்கள் சங்கீதமே!
விறகாகி
தீயோடு புணர்ந்தாய் நீ!
அழிந்ததோ
அழிந்து கொண்டிருப்பதோ
நாங்கள்தான்;
ooo

அழுக்குகள் கழுவும்
அழுகள் தான்
இனித் தேவை.
பீதி மொய்க்கும் இரவுகள்
இங்கே
பூக்காமலிருக்கட்டும்.
கழுகு தின்னும் கனவுகள்
எங்கள
காலத்தைவிட்டும்
விலகட்டும்!

நிந்ததாசன்



## ஒரு சாமியாரின் டயரிக் குறிப்பு



இந்தியாவில் உத்தரபிரதேசத்தில் சாமியார் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சாமியாரிடம் ஒரு நாட் குறிப்பு இருந்தது. அதிலே இருந்த சமாச்சாரங்கள் இவைதான்:

"யாக குண்டத்திலிருந்து தெய்வீகச் செயலாக தீ எழவேண்டுமென்றால் அதற்கான சில டெக்னிக்குகள் கைவசம் உள்ளன. யாகப் பொருட்களோடு கொஞ்சம் பொட்டாசியம் பெர் மாங்கனேட் கலந்து வைத்திருக்க வேண்டும்.

சிறிது நேரம் மந்திர உச்சாடனம் செய்வது மாதிரி முணு முணுத்து பிறகு மந்திரம் சொல்லிக்கொண்டே, நெய் ஊற்றுவது மாதிரி கிளிஸரினை நெருப்பில் ஊற்ற வேண்டும்.

உடனே புகையோடு பெரும் ஜுவாலை கிளம்பும். தேவர்கள் திருப்தியடைந்து யாகத்தில் அளிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லிக் கொள்ளலாம்.

பூமிக்கு அடியில் சோடியத்தை தூவிவிட்டு மண்ணால் மூடிவிடவேண்டும். மந்திரம் சொல்லிக்கொண்டே நீரைத் தெளிக்க வேண்டும். முதலில் வெடிச்சத்தமும் தொடர்ந்து நெருப்பும் கிளம்பும். கெட்ட ஆவிகளை துரத்திவிட்டதாக சொல்லிக்கொள்ளலாம்."

சாமியாரின் குறிப்பைப் பார்த்தீர்களா? நீங்களும் சாமியாராகலாம். கொஞ்சம் சமார்த்தியம்,· கொஞ்சம்·· விஞ்ஞான டெக்னிக்குகள் தெரிந்தால்ஓ.கே. ஏமாறுவதற்கு நிறையப்பேர் இருக்கிறார்கள்!

## தூங்காத இரவுகள்

காதைப் பொத்தி
கண்களை இறுக்கிமூடி
கட்டிலில்
படுப்பேன்
தூக்கம் வராது...!
*
தொலை தூரத்தில்
தெரு நாய் ஊளையிடும்.
அயலில்
ஆந்தையொன்று அலறும்..
காதிற்குள்
நுளம்பு கிணுகிணுக்கும்...
தலையணையை எடுத்து
தலைக்குமேல் போட்டு
குப்புறப்படுப்பேன்...
அப்போதும்
தூக்கம் வராது...!
*
மீண்டும் எழுந்து
கட்டிலைத்தட்டி
மீண்டும் படுப்பேன்;
தூக்கம் வராது...!
*
நெருப்பில் போட்ட
புழுவைப்போல
வளைந்து நெளிந்து..
படுக்கை விரிப்பு
சுருண்டுபோய்
உருண்டையாகும்..
தூக்கம் வராது...!
*
சேவல் கூவும்..
விடிந்து போகும்...
அப்போதும்
தூக்கம் வராது...!
*
கடிகாரத்தின்
விநாடிமுள்
துடிக்கும் சத்தம்
தெளிவாய்க் கேட்கும்
அதில்..
உன் பெயர்
அடிபடும்...!
*
பகலில் வராத
நீ..
இரவில் வந்து
தூக்கத்தைக் கலைத்து
இரவின் தூரத்தை
அறிமுகப்படுத்தி
அவஸ்தைப்படுத்துவாய்
நினைவுகளால்...!
*
யன்னலூடே வந்த
தென்றல்,
மேசையில் மோதி..
டயரியைப் புரட்டி,
அதில் பதுக்கி வைத்த
உன் கடிதத்தை
என் கட்டிலில்
தூக்கியெறியும்...!
*

விவே. வசந்தகுமாரி,
கோமாரியூர்.



## போர் கலக்கம்...!

முழங்க வெடித்து
சிதறியழுந்திய
உயிர் அறுப்புகள்–
•
நேசமெங்கினும்
பிணக்கபாலங்கள்...
•
தீச்சுவாலை
திரட்டிய அழிவுப்
புகை மண்டலங்களுக்குள்
மக்களின் அழிவு.
•
வாழ்க்கை
முற்றி தலைவெளிறிப்
பழுப்பு விழ–
முன்பெல்லாம்
மரணம்வரும்
ஆனால்,
இப்போது...
அழிவுகளை கேள்வியுற்று
கேள்வியுற்றே
ஆயுள் சுருங்கி
ஆன்மாவில் தொய்வு
விழுகிறது!
•
மிரளும்
உள்ளூரமனசு இன்னும்
மிக புண்பட்டுப்
போயிருக்கிறது;
போர்க்காலக்
கவலைகளால்...!
•
என்னதான்
தீர்வு வரினும்,
குமுறித் தவிக்கும்
பல
குடும்பங்களுக்கு,
இழப்பீடு வழங்கினும்
விலை
கொடுத்துவாங்கிட
இயலா நிம்மதி
எப்போது வரும்...?

தமிழினியன் ஜிஹார்

## சிரித்தால் இவர்கள் இருக்கும் எப்படி



குதிரை வண்டிக்காரர்–
'கொல்லு'ன்னு சிரிப்பார்.
பாத்திரக்கடைக்காரர்–
'கல கல' என்று சிரிப்பார்.
ஓட்டோ சாரதி –
'குலுங்கி குலுங்கி' சிரிப்பார்.
சோடா–காம்பிபட் கடைக்காரர்–
'விழுந்து விழுந்து' சிரிப்பார்.
நகைக்கடைக்காரர்–
புன்னகை புரிவார்.

## பாடாத குயிலுக்காய்....



பாடாத குயிலுக்காய்
பாட்டெழுதி வைச்சேன் புள்ள
ராவெல்லாம் கண்முழிச்சு
நல்ல மெட்டுப் போட்டேன் புள்ள

காயாத வெய்யிலெல்லாம்
காஞ்சு காஞ்சு கவியெழுதி
நோயால நான் நலிந்தும்
கண்ட பயன் என்ன புள்ள?
****
பாட்டெழுத முன்னமே–குயில்
போட்ட திட்டம் நானறியேன்.

குயிலுக்கு வந்த புத்தி
எனக்கு மட்டும் எங்க போச்சு?
****
குயில் நிறத்தைப் பாக்கலியே
அதன் குணத்தைப் பாக்கலியே
குரல் வளத்தைப் பாத்துத்தானே
குளிர் கவிதை நான் வடித்தேன்.
****
கிளி வந்து போச்சுப் புள்ள
அணில் வந்து போச்சுப் புள்ள
கலர் கலராய்க் கதை பேசும்
மயில் வந்து போச்சுப் புள்ள.
****
இத்தனையும் விட்டுப்புட்டு
பொல்லாத எம்புத்தி
பாடாத குயிலுக்காய்
பாட்டெழுதி வைச்சிடுச்சி!
****
போன கதை போகட்டுண்டி
ஆன கதை ஆகட்டுண்டி
செவ்விளநீர் நீ இருக்கப்
பழைய கதை ஏதுக்கடி?
****
பக்கமாய் வாடி புள்ள
பல கதைகள் சொல்லித்தாறேன்
கடன் கொடுக்க இருப்பதையும்
மொத்தமாய் சேர்த்துத் தாறேன்!!

-எம். சுரேஷ்-



## கல்லறை வாசகங்கள்



**சவப்பெட்டிக் கடைக்காரன்**
இது இவனுக்கு சந்தோஷமில்லாத மரணமொன்று.

**ஜோசியர்**
அவர் "ஆயுள்" ரேகை எங்கே முடிகிறது என்பதைக் கணித்துக் கொண்டிருக்கின்றார்.

**நீதிபதி**
இதோ தனது கடைசி "மரணதண்டனை" தீர்ப்பை எழுதிக்கொண்டிருக்கின்றார்.

**வக்கீல்**
இப்படி அமருங்கள்! அவர் "இயமனின் தீர்ப்பு"க்கு அப்பீல் தயாரித்துக் கொண்டிருக்கின்றார்.

**பல்வைத்தியர்**
அமைதியாக இருங்கள்! அவர் "கடைவாயிலை" பரிசோதிக்கின்றார்.

**வியாபாரி**
இது மட்டும்தான் இவனுக்கு இலாபம் தராத "பதுக்கல்."

**விலை மாது**
சகோதரர்களே! இனியாவது உங்கள் எச்சில் உங்களிடமே இருக்கட்டும்.!

**தற்கொலைக்குண்டாளி**
காய் பறிக்க வந்தவன் பூக்களை உதிர்த்திவிட்டான்.

**தபாலதிபர்**
அவர் தனது இறுதி "முத்திரையை" செல்லுபடியற்றதாக்கிக் கொண்டிருக்கின்றார்.

கவியூரான்–அக்கரைப்பற்று.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 25.02.96 முதல் 02.03.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன், செவ்வாய், சனி. |
| மீனம் | - கேது. |
| மேடம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |

சந்திரன்- மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| மீனம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மணச்செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்கலக்கம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- வெளியிடவாழ்க்கை; செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | மு.ப. 9 மணி |
| வியாழன்- பொருள்வரவு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| மேடம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- பொருள் வரவு, குடும்ப சுகம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| வியாழன்-மனக் குறைநீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வெள்ளி- தொழில்நிலை மந்தம்; பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் கவலை, மனப்போராட்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| இடபம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| திங்கள்- பெரியோர்பகை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, இனசன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| மிதுனம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- வீண் கலக்கம், அந்நியர் பகை | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பணவரவு. | காலை 6 மணி |
| புதன்- புதிய நட்பு, பணச் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| கும்பம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்-மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| கர்க்கடகம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- அந்நியர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் முயற்சி, பொருட் செலவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- உறவினர் பகை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- பயனற்ற செயல், தொழில் மந்தம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| மகரம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பணவரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| புதன் - அந்நியர் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனச் சோர்வு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| சிம்மம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கவலை. | காலை 6 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், வெளியிடவாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| புதன்- உயர்ந்த எண்ணம், தொழில் மேன்மை. | காலை 6 மணி |
| வியாழன்-பிரயாண மிகுதி, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், செய்தொழில் விருத்தி. | மு.ப. 9 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| தனு: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பொருள் நஷ்டம். | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், குடும்பக் கலகம். | காலை 8 மணி |
| வியாழன்-பெரியோர் பகை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி-எதிர்பார்த்த நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| விருட்சிகம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம். செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- காரிய சித்தி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| துலாம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 6 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. 9 மணி |
| சனி- முயற்சி பலிதம், பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| கன்னி: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பணச் செலவு, மனக்கலக்கம். | மு.ப. 9 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com





# தென்னை மரம்

உயர்ந்து வளரும் தென்னை-
ஊற்றும் அதிக நீரை
உறிஞ்சிக் கொள்ளும் தென்னை
வழங்கும் நமக்கு தேங்காய்!

ஓடு நீக்கி விட்டால்
உள்ளிருக்கும் தண்ணீர்.
குடுமி வைத்த தேங்காய்
குலுக்கும் போது தெரியும்!

ஒட்டியுள்ள நாரை
ஒன்று சேர்த்துத் திரித்தால்
கட்டுகின்ற வடமாய்
கைக்கு வந்து சேரும்!

உடைக்கும் போது அலறும்.
அரைக்கும் போது அமைதியுறும்
கடைகள் எங்கும் கிடைக்கும்
கடவுள் பூசைக்குதவும்!

செல்வன். இராமநாதன் தமிழ்வண்ணன், இரத்தினபுரி.

குன்றென நிமிர்ந்து நில்! கூடித் தொழில் செய்!
கெடுப்பது சோர்வு! கேட்டிலும் துணிந்து நில்!
கைத் தொழில் போற்று! கொடுமையை எதிர்த்து நில்!
கோல் கைக்கொண்டு வாழ்! கல்வியதை விடேல்
—சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பூனைக்கு மணி கட்டிய எலிகள்


ஒரு வீட்டில் நிறைய எலிகள் இருந்தன. அவை தாராளமாகச் சுற்றித் திரிந்தன.

ஒருநாள் அங்கு ஒரு பூனை வந்தது. எலிகள் ஓடி ஒளிந்தன.

பூனை விடவில்லை. பிடிக்குள் சிக்கிய எலிகளைக் கொன்று தின்றது. ஆதலால் எலிகளுக்கு ஒரே கிலி.

ஒரு எலி சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தது. 'பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டி விட்டால், பூனை வருகின்றபொழுது மணி ஒலிக்கும். எலிகள் தப்பித்துக் கொள்ளலாம்'.

இந்த எண்ணப்படி ஒரு மணியையும் கொண்டு வந்தது. எல்லா எலிகளையும் அழைத்துக் கூட்டம் போட்டது. பூனைக்கு மணி கட்ட வேண்டும் என்றது.



அதைக் கேட்டு ஒரு வயதான எலி கைகொட்டிச் சிரித்தது.

"நல்ல யோசனைதான்; ஆனால் பழைய யோசனை" எனக்கூறி மறுபடியும் சிரித்தது.

மணி கொண்டு வந்த எலி,

"நாம் பயந்து கொண்டிருந்தால் வாழ முடியாது. அச்சத்தைத் தவிர்க்க வேண்டும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து முயன்றால் முடியும். நாம் மொத்தமாகப் படை போல அணிவகுத்து நிற்க வேண்டும். பூனை வந்தவுடன் அதனைச் சூழ்ந்து கொள்ள வேண்டும். அது திகைத்து நிற்கும். நெருங்கிச் சென்ற அதன் மேலேறி அமுக்க வேண்டும். பூனை நமக்கடியில் அகப்பட்டுத் திணறும் பொழுது, நம்மில் இருவர் மணியைக் கட்ட வேண்டும். அந்தப் பொறுப்பையும், ஆபத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறியது.

"நடக்காத கதை, பூனையை எதிர்த்து நின்று கூண்டோடு சாகப் போகிறீர்கள்," என்றது கிழட்டு எலி. ஆனால் மற்றைய எலிகள் அதன் பேச்சைக் கேட்கவில்லை.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு", என்று புதிய பாட்டைப் பாடின.

அடுத்த நாள் பூனை வந்தது.

எலிகள் பயந்து ஓடவில்லை. மொத்தமாகப் பூனையைச் சூழ்ந்தன. மேலேறி அமுக்கின. பூனை எப்படித் தப்பிப்பது என்று திகைத்த வேளையில் அதன் கழுத்தில் இரண்டு எலிகள் அந்தச் சின்னஞ் சிறு மணியைக் கட்டி விட்டன. பின் எல்லா எலிகளும் ஓடித் தப்பின.

இப்பொழுது பூனையின் கழுத்தில் மணி. அது வரும் முன்பே அதன் கழுத்து மணி ஓசை கேட்கும். வெளியில் நிற்கும் எலிகள் தப்பித்துக்கொள்ளும்.

அச்சமின்றி ஒன்றுபட்டுச் செயற்பட்ட எலிகள் மகிழ்ச்சியாக வாழ்ந்தன.

# வாரம் ஒரு நாடு

## மாலைத்தீவுகள்

**தலைநகர்** – மாலே
**பரப்பு** – 298 சதுர கிலோமீட்டர்
**மொழி**– திவேஹி (சிங்கள கிளைமொழி)
**எழுத்தறிவு** – 93%
**சமயம்** – இஸ்லாம்
**நாணயம்**– ரூஃபியா.
**தனி நபர் வருமானம்** – 470 டொலர்.

**அமைவிடம்:**

இலங்கையிலிருந்து தென்மேற்கே 675 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள மாலைத்தீவு 1200 சிறு பவளத்தீவுகள் அடங்கியது.

**வரலாறு:**

பிரிட்டன் 1965 இல் சுதந்திரம் வழங்கியது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். சட்டப்பேரவை இருந்த போதிலும், அரசியல் கட்சிகள் எதுவுமில்லை.



**பொருளாதாரம்:**

தேங்காய், பழங்கள், கடற்பொருட்கள் மிக முக்கிய உற்பத்திப் பொருட்கள். உழைக்கும் மக்களில் 8 சதவீதத்தினரே விவசாயம் சார்ந்துள்ளனர். மீன்பிடித்தலும், சுற்றுலாவும் முக்கிய வருமான மூலங்கள்.

கடல் மூலம் சரக்கு ஏற்றுமதி இறக்குமதிக்காக, இந்நாடு பல கப்பல்களை ஈடுபடுத்துகின்றது.

# சுவையான பறவைக் கூடு



*** பறவைகளின் கூடுகளைச் சாப்பிடலாமா?**
'சுவிப்ட்' என்ற பறவையின் கூட்டைச் சாப்பிடலாம். இந்தப் பறவைக் கூட்டில் இருந்து தயாரிக்கப்படும் சூப் சீனா, ஹொங்கொங் ஆகிய இடங்களில் மிகவும் பிரபலம்.

*** இந்தக் கூடுகள் எதனால் செய்யப்படுகின்றன?**
'சுவிப்ட்' பறவைகள் தமது உமிழ்நீரால் இதைச் செய்கின்றன.

*** 'சுவிப்ட்' பறவைகள் இந்தக் கூடுகளை எங்கே கட்டுகின்றன?**
உயரமான கட்டடங்களிலும், குகைகளிலும் கட்டுகின்றன.

*** இந்தக் கூடுகளை ஆட்கள் எப்படி எடுக்கிறார்கள்?**
இதற்காகவே பல தொழிலாளர்கள் உள்ளனர். மூன்று கூர்-முனைகளைக் கொண்ட நீளமான கம்பு ஒன்றின் மூலம் குகைகளிலும், கட்டடங்களிலும் சென்று கூடுகளை எடுப்பார்கள். இந்தக் கம்புகளுக்கு ரடா என்று பெயர். கிழக்கு ஆசியாவில் கூடு சேகரிக்கும் பணி ஒரு பெரிய தொழிலாகவே இருக்கிறது. இந்தோனேசியா மட்டும் 60 கோடி ரூபாய்க்கு இக்கூடுகளை ஹொங்கொங்கிற்கு ஏற்றுமதி செய்கிறது.

*** எமக்கு அண்மையில் எந்தெந்த நாடுகளில் இக்கூடுகள் உள்ளன?**
இந்தியாவின் மேற்குக் கடற்கரை ஓரத்திலும், அந்தமான், நிக்கோபார் தீவுகளிலும் இப்படிக் கூடுகட்டும் பறவைகள் உள்ளன.

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.03.1996.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 130**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 128


**பரிசுக்குரியவர்:**
**வி. லக்ஷ்மி.**
**இ/மில்லவிட்டிய அ.த.வி. இரத்தினபுரி.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி. எஸ். ஷோபா. இல. 88 நாகொல்ல வீதி, மாத்தளை. | ம. கஜனி. 55- 3/2 வன்றோயன் வீதி, கொழும்பு-13. |
| சு. அர்ச்சனா. புனித சிசிலியா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு. | ச. அர்ச்சனா ராய். ப/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், பண்டாரவளை. |
| எம்.எம். மில்ஹான். அல்கா பாடசாலை, ஹேனமுல்லை, பாணந்துறை. | ஏ. அப்துல் மஜீத். 167, மக்காமடி வீதி, சாய்ந்தமருது, கல்முனை. |
| பி. ரெபெக்கா பொன்மலர். வெஸ்ட்ஹோல் தமிழ் வித்தியாலயம், கெட்டபுலா. | எல். ரஜீவ். ஸ்ரீயோவான் தமிழ் மகா வித்தியாலயம், இறக்குவானை. |
| செல்வி.இ. தர்ஷினி மே/பா இளையதம்பி. 'மணிபல்லவம்', ஆரையம்பதி-01. | கே.ஜீ.பி.என். அஷோக்பரன். றோயல் கல்லூரி ஆரம்ப பிரிவு, கொழும்பு-07. |

# ஒட்டகச் சிவிங்கி

எல்லா மிருகங்களிலும் மிக உயரமானது ஒட்டகச்சிவிங்கி. 18 அடி உயரம் வரை இவை வளரும். ஒட்டகச் சிவிங்கியின் கால்களும், கழுத்தும் தான் அதன் உயரத்திற்குக் காரணமாக உள்ளன. இரண்டாவது உயரமான மிருகம் ஆபிரிக்க யானை. இதைவிட ஒட்டகச் சிவிங்கி 5 அடி உயரம் அதிகம். எனினும் இதன் எடை 1200 கிலோதான்.



ஒவ்வொரு ஒட்டகச் சிவிங்கியின் உடலிலும் ஒவ்வொரு விதமான புள்ளிகள் இருக்கும். இவை மரங்களுக்கிடையே நின்றால் கண்டு பிடிப்பது கடினம். சிங்கங்கள்தான் இவற்றின் முதல் எதிரி. ஒட்டகச் சிவிங்கிகள் தங்கள் கால்களால் உதைத்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும். ஒரு உதையில் சில நேரங்களில் சிங்கம் கூட செத்துவிடும். குட்டி ஒட்டகச்சிவிங்கிகளை சிறுத்தை, முதலை போன்றவைகள் தாக்கும்.



ஒட்டகச்சிவிங்கி ஒரு முறையில் ஒரு குட்டி தான் போடும். பிறக்கும்போது குட்டி 5 அடி உயரம் இருக்கும். பிறந்து சில மணி நேரத்திற்குள் ஒட்டகச் சிவிங்கிக்குட்டியால் நடக்கவும், ஓடவும் முடியும். இரண்டு வாரத்தில் இலை, குழைகளைச் சாப்பிடும். ஆனால் ஆறுமாதம் வரை பால் குடிக்கும்.



ஒட்டகச்சிவிங்களும் சண்டை போட்டுக் கொள்ளும். கழுத்திலும், மார்பிலும் முட்டிச் சண்டையிடும். பெண் ஒட்டகச் சிவிங்கிகள் சண்டையிடாது.

காட்டில் இவற்றின் வாழ்நாள் 26 ஆண்டுகள்.



மிருகக்காட்சி சாலைகளில் ஒட்டகச்சிவிங்கிகள் 28 ஆண்டுகள் வரை வாழ்ந்துள்ளன.

ஒட்டகச் சிவிங்கிகள் நடக்கும் போது ஒரே சமயத்தில் ஒரு பக்கம் உள்ள இரண்டு கால்களையும் தூக்கி முன் வைக்கும். பின்னர் அடுத்த இரண்டு கால்களையும் தூக்கி வைக்கும். மணிக்கு இவை 56 கிலோமீட்டர் வேகத்தில் ஓடும்.

தண்ணீர் கிடைத்தால் ஒட்டகச் சிவிங்கிகள் தினமும் தண்ணீர் குடிக்கும். தண்ணீர் கிடைக்காத போது சாறுள்ள இலைகளைச் சாப்பிட்டுத் தன் தாகத்தைத் தணித்துக் கொள்ளும். தண்ணீர் குடிப்பதற்காக இவை முன்னங்கால்கள் இரண்டையும் நன்றாகப் பரப்பிக் கொள்ளும். அப்போதுதான் அதன் தலை தண்ணீரைத் தொடும்.

குட்டி ஒட்டகச் சிவிங்கிகள் தாய்ப்பால் குடிக்கும் வரை தண்ணீர் குடிக்காது.

# பாதரச வெப்பமானி என்றால் என்ன?

காற்றில் வெப்பநிலையை அளக்க படத்தில் காட்டியுள்ளதைப் போன்ற பாதரச வெப்பமானி பயன்படுத்தப்படுகிறது. இதில் அடங்கியுள்ள கருவி ஒரு தனி அமைப்பைப் பெற்றுள்ளது. ஒரே சீரான விட்டத்தைக் கொண்ட நீண்ட கண்ணாடிக் குழாயாக அமைந்த இக்கருவியின் ஒரு முனை ஒரு குமிழுடனும், எதிர்முனை காற்றுப் புகா வண்ணம் அடைக்கப்பட்டும் காணப்படுகின்றன. குமிழும், கண்ணாடிக் குழாயின் ஒரு பகுதியும் பாதரசத்தால் நிரம்பப் பெற்றுள்ளன. கண்ணாடிக் குழாயில் மீதியுள்ள பகுதி வெற்றிடம் (Vacaum) ஆகும். வெப்பநிலை உயரும் போது, கண்ணாடிக்குழாயும், அதில் அடங்கியுள்ள பாதரசமும் விரிவடைகின்றன. எனினும் பாதரசம் கண்ணாடியைவிட அதிக அளவில் விரிகிறது. பாதரசத்தின் மட்டம் உயருகிறது. எனவே பாதரசத்தின் விரிவினால் ஏற்படும் மட்ட உயர்வினைக் கொண்டு வெப்பநிலை கணக்கிடப்படுகிறது. வெப்பநிலை உயர்வினைக் குறிக்கும் வகையில் கண்ணாடிக் குழாயின் மீது ஒரு தகுந்த அளவுகோல் பதியப்பெற்றுள்ளது.




# விடுகதைகளும் விடைகளும்

1. எண்ணெயே வேண்டாத, எரிகிற விளக்கு. அது என்ன?
2. கழுத்துண்டு தலையில்லை, கரம் உண்டு விரல் இல்லை. அது என்ன?
3. பச்சைக் கடைக்குள் பளிங்கு முத்துப் பல் உண்டு. அது என்ன?
4. ஊற்றினால் தேக்கும், உதறினால் தெறிக்கும். அது என்ன?
5. வலியால் துடிக்க வாலால் அடிப்பார். அவர் யார்?
6. அப்பாவிச் சிறுவர்களின் சிப்பாய் சீர்நடை. அது என்ன?
7. கறுத்தப் புல் புதரில் சிறுத்தைக் குட்டி மேயுது. அது என்ன?
8. குழந்தைகள் பத்துக்கும் குடுமி ஒன்று. அது என்ன?
9. ஒரே சிப்பிக்குள் மூன்று முத்துக்கள். அது என்ன,
10. பெண்ணோ ஒருத்தி, புடவையோ ஆயிரம். அவள் யார்?

**விடைகள்**

1. மின்விளக்கு 2. சட்டை
3. முருங்கைக்காய் 4. பேனாவும், மையும்
5. தேள் 6. எறும்பு
7. பேன் 8. உள்ளி
9. ஆமணக்கு விதை 10. வெங்காயம்.

**தொகுப்பு: செல்வி. ஏ.அகல்யா, நுவரெலியா.**



படிப்பகம்

www.padippakam.com



பிறந்த நாள் விருந்து. பணக்கார சீமாட்டி இன்பவல்லிக்கு இன்று பிறந்த நாள் (எத்தனையாவது? கேட்காதீர்கள். பதில் கிடைக்காது. தவிர இந்த இன்பவல்லியே நமக்கு தேவையில்லாத பாத்திரம். இந்த விருந்து பின்னணியில் ஒரு கதை ஆரம்பம். இந்த வகையில் மட்டுமே தான் இன்பவல்லிக்கும் இந்தக் கதைக்கும் ஒட்டுதலே தவிர வேறில்லை)

விருந்தில் அமெரிக்கத்தனம் அதிகமிருந்தது. இந்தியப் பண்பாடு கலாசாரம் அனைத்தையும் வீட்டை விட்டுக்கிளம்பும் போதே உதறிவிட்ட விருந்தினர்கள்.

குறிப்பாக ஜோதி. (அவளைத் தமிழச்சி என்று சொல்வதற்காக தமிழர்கள் மன்னிப்பார்களாக.)

வெட்கம் மறந்திருந்தாள். மிக சுலபமாக தட்டை உடம்பும் ஒற்றைக் குச்சிக் காலுமாக கண்ணாடி கோப்பையிலிருந்த இறக்குமதி மதுவை மிக அலட்சியமாக ஏந்தினாள்.

எதிரிலிருப்பவர் யார் என்பதைப் பற்றிய கவலையேயில்லாமல் 'சீயர்ஸ்' என்று தட்டி விட்டு ஒரே மடக்கில் குடித்தாள். கோணலான அவள் சிரிப்பே அவள் ஏற்கனவே குடித்திருந்த மது அளவைக் காட்டியது.

• சுற்றிச் சுற்றி வந்தாள். எதிர்ப்பட்டவர்களின் பின்னங்கழுத்தில் கைகளைக் கோத்து நின்று பேசினாள். நிறைய சிரித்தாள்.

சற்றுத் தள்ளி நின்றிருந்த நான்கு இளைஞர்களின் பார்வை இவள் பேரிலேயே பதிந்திருந்தது. தங்களுக்குள்ளாக பேசிப்பேசி சிரித்தார்கள்.

"யாராவது நடிகையாக இருப்பாளா?"

"அது தப்பு ராம். ஒட்டு மொத்தமாக எல்லா நடிகைக்ளையும் உன் பேச்சு அவமானப்படுத்துகிறது. அவர்களில் நல்லவர்களும் உண்டு."

"அதற்கில்லை சாலமன்! வேறு பெண்களுக்கு ஆண்களிடம் இவ்வளவு சரளமாகப் பழகவராது. அவர்கள் தான் நடிக்கும் போது அந்நியனைத் தொட்டுத் தொட்டுப் பேசி கூச்சமே விலகிப் போயிருக்கும்."

தட்டு ஒன்றில் மது கோப்பைகளை சுமந்து வந்த ஆளை நிறுத்தி ஆளுக்கொரு கோப்பை எடுத்துக் கொண்டார்கள்.

மூன்றாமவன் மறுத்து விட்டான்.

"ஹேய் வரதராஜா! பார்ட்டிக்கு வந்தால் பத்தாம் பசலித்தனமோ, பத்தினித்தனமோ கூடாது. கம்பெனி கொடு."

அந்த வரதராஜன் மூக்குக்கு நேராக கும்பிட்டான். "வேண்டாம்பா. வீட்டில ஏதோ விசேஷம். வீடு பூரா விருந்தாளிங்க. இந்த வாசனையோட போனால் என் அப்பா என்னை வெட்டியே போட்டு விடுவார்."

"பார்ட்டி மேனர்ஸுன்னு ஒண்ணு இருக்கே?"

"அது உங்களோட நிற்கட்டும். எனக்கு வேணாம்." கண் சிமிட்டினான். "நான் அழகை ஆராதிக்கப் போகிறேன்."

"எது? அந்த அழகையா?" என்று ராம் கண்ணால் காட்டிய இடத்தில் அந்த அவள் நிற்க முடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தாள்.

அவள் பார்வை இவர்கள் பக்கம் வந்ததும்...

"ஹலோ பாய்ஸ்" என்றாள் கோணல் சிரிப்புடன்.

வரதராஜன் நான்கு விரல்களை அசைத்து "ஹாய்" என்றதும்–

தட்டுத் தடுமாறி அருகில் வந்து நின்றாள். "ஆணழகனே! உன் பெயர் என்ன?"

"வ்ரதராஜன்"

விக்கினாள். சிரித்தாள். "சினிமாத்தனமான பெயர், எனக்கு பிடிக்கல. நான் உன்னை ராஜா என்று கூப்பிட அனுமதியுண்டா?"

தோள்களை உயர்த்தி இறக்கினான். "ஆட்சேபணையில்லை."

"நீ மோசம்." அவன் விழிப்பை ரசித்தாள். "பின்னே என்ன? எல்லாரும் ஆளுக்கொரு கோப்பையைக் கையில் வைத்துக் கொண்டு சொர்க்கம் போகத் துடிக்கிறாங்க. நீ மட்டும் ஏன் பத்தினியாக நிற்கிறே? வாழ்க்கையை ரசிக்கணும் சிறுவனே!"

"சிறுவன்!" நிமிர்ந்தான். "நான் சிறுவனில்லே. அனுமதிச்சால் அதை உனக்கே நிருபித்துக்காட்ட முடியும் என்னால."

"தயார்!" லேசாக சிரித்தாள். "நான் தயார். இவங்க யார்? உன் சினேகிதர்களா?"

"ஆமாம்."

"வாங்க போயிடலாம். இந்த இடம் இந்தக் கூட்டம் எதுவும் எனக்குப் பிடிக்கல்ல. தனிமையைத் தேடிப் போகலாம். சொர்க்கம் வரை போய்த் திரும்பலாம்." விக்கினாள். உம்? என்ன சொல்றீங்க?"

நண்பர்களைத் திரும்பிப்பார்த்தான் வரதராஜன். அவர்களின் கண்களிலும் சலனமோ சபலமோ எதுவோ தெரியவே–

"போகலாமா?" என்றான் கிசுகிசுப்பாக.

"உம். நான் தயார்! சொல்லிக்கிட்டு வாங்க. போயிடலாம்."

"எங்கே?"

"அதான் சொன்னேனே சொர்க்கத்துக்கு. இருங்க இன்பவல்லிட்ட சொல்லிட்டு வந்துடறேன்."

அதற்குள் அந்த இன்பல்லியே அங்கே வந்து விடவே–

கும்பிட்டு நின்று தடுமாறினாள். "இன்பவல்லி மேடம்! விடை கொடு தாயே."

"என்ன ஜோதி அதுக்குள்ளே கிளம்பிட்டே? சாப்பிட வேணாமா?"

"வேண்டாம் மேடம்! பசி என் வயிற்றிலேயே. உடம்பு பூராவுமே பசி." கண் அடித்தாள். "என்ன பசின்னு சொல்லட்டுமா?"

"ஐயோ வேணாம்மா. எனக்கே தெரியும். வரவர மேனியாக் ஆயிட்டு வரே நீ."

"காரணம்தான் உங்களுக்குத் தெரியுமே மேடம்! என்னைப் போக விடுங்க ப்ளீஸ்."

"இரு. டிரைவரை விட்டு உன்னை வீட்ல விட்டுட்டு வரச் சொல்றேன்."

"ஐயோ வேணாம்மா. ஒண்ணு என்ன? மூணு டிரைவர்களிருக்காங்க. ப்ரெண்ட்ஸ் உங்ககிட்ட கார் இருக்கிறது அல்லவா?"

"இருக்கு"

"சரி." அந்த இன்பவல்லி சொன்னாள். "பத்திரமா கொண்டு போய் வீட்டில் விட்டுடுங்கப்பா."

"யார் நீங்க?" என்று அவர்களைக் கேட்க மிகவும் விரும்பினாள். அதற்குள்–

"எல்லாரும் அங்கே உனக்காக காத்திருக்கிறாங்க. அதென்ன பண்ணறே? கமான்ட'" என யாரோ இழுக்கவே–

"பத்திரம். பத்திரமா கொண்டு போய் விட்டுடுங்க" என்றவாறு போய்விட்டாள்.

"நீங்க வாங்கப்பா" என்று மூவரோடும் நடந்து காருக்குப் போனாள், அந்த ஜோதி. "என் கைப்பை எங்கே?"

"தோளில மாட்டியிருக்கு"

சிந்தாதிரிப்பேட்டையில் தெருக்கள் ஒன்றில் ஜன்னல் பக்கமாக அமர்ந்து மேஜைவிளக்கு வீசும் ஒளியில் படித்துக் கொண்டிருந்தவன் பெயர் அரசன். (அப்பா வைத்த பெயர் ராஜன். அதை இவனாக மாற்றி தமிழில் அரசனாகி அரசு பதிவேட்டிலேயே மாற்றிக் கொண்டு விட்டான். பற்று அதிகம். தமிழ்ப்பற்று)

கல்யாணமாகாத பிரம்மச்சாரி. ஊரில் அப்பா திறந்த மார்புடன் வயல்வெளியில் குடையுடன் நின்று 'ஆகட்டும்டா சீக்கிரம்' என்று அதிகாரம் செய்வார். அம்மா வீட்டில் மணக்க மணக்க சமைத்து வைத்து 'எங்கே இவுக? உச்சிப் பொழுதாகப் போகுது. சாப்பிடவரலையே?' என்று காத்திருந்தாள்.

இவன் மட்டும் இங்கே தனியாக ஒரு வீட்டின் முன்னறையை வாடகைக்கு எடுத்து வங்கியில் வேலையை பகலில் பார்த்து இரவில் பதவி உயர்வுக்காக படித்துக் கொண்டிருக்கிறான்.

வீட்டுக்காரர் கெடுபிடி அதிகமானவர். "பசங்களை கூட்டிட்டு வந்து சீட்டாடக் கூடாது. முக்கியமா பொண்ணுங்களை கூட்டிட்டு வந்தா அடுத்த நிமிஷமே பெட்டி படுக்கையை ரோட்டில் எடுத்து வச்சிடுவேன். நான் பொல்லாத ஆளு" என்பார் அடிக்கடி.

இவனுக்கு கவலையில்லை. சினேகிதர்களை வங்கியோடு பழகி நிறுத்துவான். பெண்கள் கிடையாது. நூறு சதம் பிரம்மச்சாரி என்பான் நெஞ்சை நிமிர்த்தி. உண்மையும் அதே.

தூக்கம் சொக்கும் கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டான்.

கைக்கடிகாரத்தை எடுத்துப் பார்த்தான். மணி இப்போதுதான் பத்தடித்து இருபது நிமிஷமாகிறது. அதற்குள் என்ன தூக்கம்? பரீட்சை நெருங்குகிறது. தூக்கமெல்லாம் வரக்கூடாது.

கூஜா தண்ணீரை மொண்டு தெருவுக்கு வந்து முகத்தை சுத்தமாக அலம்பிக் கொண்டான். உள்ளே போய் ஒட்டத் துடைத்து முகத்தில் பவுடரடித்துக் கொண்டதும் சுறுசுறுப்பு வந்தது.

படிக்க ஆரம்பித்தான் புதிய தெம்புடன்.

சாலையில் வந்து கொண்டிருந்தது அந்தக் கார். உள்ளேயிருந்த அந்த மூன்று வாலிபர்களின் முகமும் கொஞ்சம் அச்சம் படிந்து சங்கடமாகத் திரும்பி பின் ஸீட்டைப் பார்த்தார்கள்.

அடிக்கடி புலம்புவதும் ("காதலிக்காதே. தம்பி. அப்படியே காதலிச்சாலும் துரோகம் பண்ணிடாதே. பாவம். அப்புறம் இன்னொரு ஜோதி உருவாயிடுவா. பெண்களை விட்டுடு.") தூங்கிப் போவதுமாக இருந்தாள்.

"ஊஹீம்" சாலமன் சொன்னான். இது ஒண்ணும் சாதாரண பிராந்தி போதை மாதிரி தெரியல. போதை மாத்திரை தின்றவளோ என்னமோ."

ராம் பயந்தான். "எல்லாம் இவனால் வருகிறது. சும்மாயிருக்காம கூப்பிட்டான். அவளும் வந்துட்டா. இப்ப என்ன பண்ணறது? இவ வீட்டு விலாசமும் வேற தெரியல. நீ உன் வீட்டுக்கே கொண்டு போயிடு வரதராஜா."

மிரண்டு போனான் அந்த வரதராஜன். "என் வீட்டுக்கா? முடியாது."

"ஏண்டா? நீதான் பிரம்மச்சாரி, சொந்த பங்களா இருக்கிறவன். வீட்டில யாருக்கும் தெரியாம மாடிக்கு கொண்டுபோய் காலையில் விரட்டி விடு"

"விளையாடறியா? எங்க வீட்லதான் விசேஷம், ஏகப்பட்ட விருந்தாளிங்க வந்திருக்கிறாங்கன்னு சொன்னேனில்லே? ஏன் நீ உன் வீட்டுக்கு கொண்டு போயேன் சாலமன்."

"இது வேற வம்பா? என் மனைவி ஏற்கனவே சந்தேகமாக ஒரக்கண் பார்வை பார்க்கிறவள். நாளைக்கு விடிஞ்சதும் மாமனார் வேற வேளாங்கன்னி போகிறதுக்காக இந்தப் பக்கம் வருகிறார். இந்நேரம் வந்து வீட்டில சாப்பிட்டுட்டு தூங்கிட்டிருப்பரோ என்னமோ? வேறு வினையே வேணாம். நான் மாட்டேன்ப்பா."

"ராம் நீ என்ன சொல்றே?"

"கிண்டலா? நானிருக்கிறது ஹாஸ்டல். விடுதி கட்டுப்பாட்டின்படி பத்து மணிக்கு மேல் தனி ஆளாக வந்தாலே தப்பு என்கிறது சட்டம். இந்த அழகில் இப்படியொரு பெண்ணை வேறயா? மூளை கெட்டதனமாக உளறாதே."

"காதலிக்காதீர்கள் பெண்களே! ஆண்கள் ஏமாற்றுக்..."

திரும்பிப் பார்த்து நிறைய பயந்தார்கள்.

"பேசாம இருட்டான இடமாக பார்த்து சாலையிலேயே படுக்க வைத்து விட்டு போனால் என்ன?"

"முட்டாள் மாதிரி பேசாதே. நகையும் நட்டுமாக இருக்கிற இளம்பெண். சாலையிலிருந்தால் ஆபத்து வரும்."

"வேறு என்னதான் செய்யப் போகிறாயாம்?"

"யோசிப்போம் வழி கிடைக்கும். இது என்ன ஏரியா?"

"சிந்தாதிரிப் பேட்டை"

காரோட்டி வந்த வரதராஜனின் கண்ணில்பட்டது காட்சி. கவனித்தான்.

வீட்டுக்கதவைத் திறந்து இறங்கிய அந்த வாலிபனின் கையிலிருந்த ப்ளாஸ்க், தேநீரோ காப்பியோ கொணரப் போகிறான் என்பதை உறுதி செய்ததும், காரை சற்றே தள்ளி நிறுத்தினான்.

இறங்கிய வாலிபன் வீட்டைப் பூட்டாமலே போவதையுணர்ந்ததும் நண்பர்ளைப் பார்த்தான். "நான் நினைப்பதையே தான் நீங்களும் நினைக்கறீங்களா?"

தலையசைத்து ஆமோதித்தார்கள். அடுத்த சில நிமிடங்களுக்கு சுறு சுறுப்பாக இயங்கினார்கள்.

பெட்ரோமாக்ஸ் விளக்கு தொங்கியவாறு ஒளியை உமிழ–கனன்று கொண்டிருந்த பாய்லரின் அடுப்பு தட்டை ஆட்டி அசைத்து மேலும் கனன்று எரியவிட்ட டீக்கடை நாயர் "வாங்க சார்" என்றான்.

அரசன் சிரிப்புடன் ப்ளாஸ்கை நீட்டினான். "ஸ்பெஷல் டீயாக நல்ல ஸ்ட்ராங்காப் போடு." மெலிதாக கொட்டாவி விட்டான். "என்னமோ தெரியல. இன்றைக்கு பூராவும் ஒரே தூக்கக் கலக்கமாயிருக்கு."

"ஸ்பெஷல் ஏலக்காய் போட்ட டீ தரேன். தூக்கமெல்லாம் பறந்துடும். விடிய விடிய படிக்கப் போறீங்க சார்."

அவன் டீயை ஆற்றும் அழகைக் கொஞ்ச நேரம் ரசித்துப் பார்த்தான்.

ப்ளாஸ்கை வெந்நீர் விட்டு அலம்பி டீயை நிரப்பி நீட்டினான்.

பணத்தை எண்ணிக் கொடுத்து விட்டு ப்ளாஸ்கை வாங்கி திரும்பி நடந்தான். தூக்கமும் கலக்கமுமாக நடந்தான்.


வீட்டை நெருங்க நெருங்க கொஞ்சமாக வியந்தான். 'இதென்ன இது? வீட்டை சாத்தி தாழ்ப்பாள் போட்டல்லவா வந்தேன்! அதெப்படி இப்ப முழுசாக திறந்து கிடக்கிறது?'

அவசரமாகக் கதவைக் கடந்து உள்ளே போனவன்– திறந்து கிடந்த தனது அறைக்கு மேலும் வியந்து உள்ளே போனவனை அதிர்ச்சி சரேலென தாக்க–நின்றான்.

கட்டிலில் படுத்திருந்த அந்தப் பெண் முனகலாக "பெண்களே! வேண்டாம். காதலிக்காதீர்கள்" என்று விட்டு அமைதியாகப் பேசினாள்.

தூக்கம் தேநீரின் உதவியின்றியே கலைந்து போயிற்று அவனுக்கு, சுத்தமாக.

(தொடர்ந்து வரும்)





# நீ! நீயா!!

**மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்**

**சென்ற வாரம்**

பழைய பங்களா ஒன்றை இடிக்கத் தொடங்கும்போது. அங்கு ஒரு பிணம் கிடக்கிறது. பெண் பிணம். ஆறு குண்டுகள் உடலில் பாய்ந்திருந்தன. கொல்லப்பட்டது யார், கொலை செய்தது யார் என்ற விபரங்கள் புதிராக இருக்கின்றன. பொலிஸ் விசாரணை செய்கிறது. சிக்கலான கேஸாக இருக்கிறதே என்று யோசித்துக் கொண்டிருக்க, மற்றொரு பிணம். ரயில் பாதையருகே அந்தப் பிணம் கிடப்பதாக பொலிசாருக்கு தகவல் வருகிறது.

இனி...

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எஸ். மணிமாறன்.
வயது: 21
முகவரி: 33,குட்ஷெட் றோட், இரத்தினபுரி.
பொழுது போக்கு: ஓவியம், வரைதல்.

பெயர்: ஏ. பின்ஸி.
வயது: 25
முகவரி: P.O.BOX- 25809, CODENO-13119, SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல்கள்.

பெயர்: எம். லதா.
வயது: 17
முகவரி: குதா ஒழுங்கை, காத்தான்குடி- 03.
பொழுது போக்கு: தையல், பத்திரிகை.

பெயர்: ஜி. ஜலால்டீன்
வயது: 20
முகவரி: 16, றிசவயர் லேன், தெமட்டகொட, கொழும்பு-09.
பொழுது போக்கு: பத்திரிகை, பாடல்கள்.

பெயர்: எஸ். தஸ்லீம்.
வயது: 23
முகவரி: P.O.BOX-6984, DOHA, QATAR- A.G.
பொழுது போக்கு: பேனாநட்பு, பத்திரிகை.

பெயர்: மரீனா பேகம்
வயது: 23
முகவரி: P.O.BOX - 46935 FAHEEL - 64020. KUWAIT.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி.

பெயர்: எம். அன்வர் சதாத்.
வயது: 16
முகவரி: அலி வன்னியா வளவு, 87, பளார் வீதி. சம்மாந்துறை-3
பொழுது போக்கு: பத்திரிகை படித்தல்.

பெயர்: வை. ரசீக்.
வயது: 25
முகவரி: 4/2, தமடகஹவத்த, கலேவெல.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை, வானொலி.

பெயர்: சி. செல்வம்.
வயது: 25
முகவரி: HAUPT STR- 45, 8586 ERLEN, SWITZERLAND.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: என். ஞானவேலன்.
வயது: 19
முகவரி: உடபாகை தோட்டம், மத்திய பிரிவு, பொரலங்கோட.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: ரி. ரகுநாதன்.
வயது: 20
முகவரி: 42, வெலிலி, 2ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: கதைப்புத்தகம், பாடல்கள்.

பெயர்: எம். றில்வான்.
வயது: 26
முகவரி: P.O.BOX-5990, RIYADH-11432. K.S.A
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# 65

குளிர் அவர்களது முகத்தை தொட்டுத் தடவி தலைமயிரைக் குத்திட்டுச் சிலிர்க்கச் செய்தது. லுத்மிலா தனது கன்னத்தில் ஒரு துளி கண்ணீர் வடிந்தோட, உடல் எல்லாம் நடுங்கினாள். வெளியே வராந்தாவிலிருந்து உருவமற்ற பயபீதி சத்தங்களும், அவசரஅவசரமாகச் செல்லும் காலடியோசையும், முக்கலும் முனகலும் ஒலித்தன. எனினும் அவர்கள் மூவரும் வாய் பேசாது சலனமற்று அந்த ஜன்னல் அருகிலேயே நின்று இருளை வெறித்து நோக்கியவாறு இருந்தார்கள்.

தான் அங்கிருக்கத் தேவையில்லை என்று உணர்ந்த தாய், அவளது பிடியிலிருந்து விடுபட்டு விலகி வாசலுக்கு வந்தாள்; அங்கு நின்றவாறே அவள் இகோருக்கு வணக்கம் செலுத்தினாள்.

"நீங்கள் போகிறீர்களா?" என்று எங்குமே பார்க்காமல் அவளை அமைதியாகக் கேட்டார் டாக்டர்.

"ஆமாம்...."

தெருவுக்கு வந்தவுடன் அவள் லுத்மீலாவைப் பற்றியும் அவளது அடங்கிப் போன அழுகையைப் பற்றியும் எண்ணிப் பார்த்தாள்.

"அவளுக்கு எப்படி அழுவது என்று கூடத் தெரியவில்லை....."

சாவதற்கு முன்னால் இகோர் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வரவும் ஓர் ஆழ்ந்த பெருமூச்சு அவள் வாயைப் பிளந்து கொண்டு வெளியேறியது. தெருவழியாக மெதுவாக நடந்து வரும்போதே அவள் அவனது துடியான கண்களையும், அவனது கம்பீரத்தையும், வாழ்க்கையைப் பற்றி அவன் சொன்ன கதைகளையும் நினைவு கூர்ந்தாள்.

"நல்லவனுக்கு, வாழ்வதுதான் சிரமமாயிருக்கிறது. சாவதோ லகுவாயிருக்கிறது. நான் எப்படிச் சாகப்போகிறேனோ?" என்று அவள் நினைத்தாள்.

அவளது மனக்கண் முன்னால், அந்த வெள்ளைச்சுவர் சூழ்ந்த, வெளிச்சம் நிறைந்த ஆஸ்பத்திரி அறையில் டாக்டரும், லுத்மீலாவும் ஜன்னல் முன்னால் நிற்கின்ற காட்சியும், அவர்களது முதுகுப் புறத்தில் இகோரின் இறந்துபோன கண்கள் வெறித்து நோக்குவதுபோன்ற காட்சியும் தெரிந்தன. திடீரென அவளுக்கு மனித குலத்தின் மீது ஓர் ஆழ்ந்த அனுதாப உணர்ச்சி ஏற்பட்டு மேலோங்கியது; வேதனை நிறைந்த பெருமூச்சோடு அவள் நடையை எட்டிப் போட்டாள்; ஏதோ ஒரு மங்கிய உணர்ச்சி அவளை முன்னோக்கி தள்ளிச் சென்றது.

"நான் சீக்கிரமே போகவேண்டும்" என்று துக்கத்துடன் நினைத்துக் கொண்டாள்; எனினும் ஒரு துணிவாற்றல் பொருந்திய சக்தி, அவளது மனத்துக்குள் இருந்து அவளை முன்னால் உந்தித் தள்ளியது.

* * *

மறுநாள் முழுவதும் சவ அடக்கத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதிலேயே தாய் நாளைப் போக்கினாள். மாலையில் நிகலாயும் சோபியாவும் அவளும் தேநீர் அருந்திக்கொண்டிருந்த சமயத்தில் சாஷா கலகலத்துக் கொண்டே விசித்திரமான உத்வேகத்தோடு வந்து சேர்ந்தாள். அவளது கன்னங்கள் சிவந்துபோயிருந்தன. ....கண்களில் உவகை ஒளி வீசியது. அவள் மனத்தில் ஏதோ ஓர் ஆனந்தமயமான நம்பிக்கை நிறைந்து ததும்புவதாகத் தாய்க்குத் தோன்றிது. இகோரின் வாழ்க்கையை நினைத்துத் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அவர்களது சோக நிலைக்கு எதிர்மறை பாவம்போல, அவளது நடவடிக்கை இருந்தது.... அபஸ்வரம் போன்ற அவளது குதூகல பாவம் அவர்கள் மனத்தைப் பேதலிக்கச் செய்து, இருளிலே வெடித்தோங்கும் மாபெரும் தீபாக்கினியைப்போல் அவர்களது மனத்தையும் கண்ணையும் மழுக்கிக் குருடாக்கியது.

நிகலாய் ஏதோ சிரித்தவாறே மேஜைப் பலகையில் விரல்களால்தாளம் போட்டான்; பிறகு சொன்னான்:

"இன்று நீங்கள் உங்கள் வசமே இல்லை, சாஷா!"

"அப்படியா? இருக்கலாம்!" என்று குதூகலத்தோடு சிரித்துக் கொண்டே பதில் சொன்னாள் அவள்.

தாய் அவளை வாய்பேசாமல் பார்த்தாள். அந்தப் பார்வையிலேயே அவளது நடத்தையைக் கண்டித்தாள். அந்தச் சமயத்தில் சோபியா அவளுக்கு அந்த விஷயத்தை ஞாபகமூட்டினாள்:

"நாங்கள் இகோர் இவானவிச்சைப் பற்றி இப்போதுதான் பேசிக் கொண்டிருந்தோம்."

"அவன் எவ்வளவு அருமையான ஆசாமி!" என்றாள் சாஷா. "வாக்கிலே கேலியில்லாமலும், முகத்திலே சிரிப்பில்லாமலும், அவனை நான் என்றுமே பார்த்ததில்லை. மேலும், அவன் என்னமாய் உழைத்தான்! அவன் ஒரு புரட்சிக் கலைஞன்! புரட்சிச் சிந்தனையிலே தலை சிறந்தவன்.

## தாய்

தாய் தாய் தாய் தாய் தாய் தாய்

எவ்வளவு எளிதாகவும் ஆணித்தரமாகவும் அவன் அநீதியைப் பற்றியும், பொய் பித்தலாட்டங்களைப் பற்றியும், பலாத்காரத்தைப் பற்றியும் விவாதித்துக் கூறுவான்!"

அவள் அமைதியுடனும், கண்களிலே சிந்தனை வயப்பட்ட களிப்புடனும் பேசினாள். எனினும் அந்தக் கண்களில் மிகுந்த களிப்பு அவளது பார்வையிலிருந்த பெருமித நெருப்பை அணைக்கவில்லை; அவளது ஆனந்த வெறி அனைவருக்குமே புரியாத தாயினும் தெரியத்தான் செய்தது.

தங்களது தோழன் ஒருவனது மரணத்தால் ஏற்பட்ட துக்கத்தை சாஷாவினுடைய உவகை வெறியால் மாற்றிக்கொள்ள, மறந்திருக்க அவர்கள் விரும்பவில்லை. அதற்குப் பதிலாகத் தாங்கள் மூழ்கியிருக்கும் சோக உணர்ச்சியிலிருந்து வெளியே வர விரும்பாமலே, அவளையும் தங்களது மனவுணர்ச்சியின் நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் தம்மையுமறியாமல் முயன்று கொண்டிருந்தார்கள்.

"இப்போது அவன் செத்துப் போனான்" என்று அழுத்தமாகக் கூறிக்கொண்டே சாஷாவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தாள் சோபியா.

சாஷா திடீரென்று கேள்வி பாவம் தொனிக்கும் பார்வையோடு அவர்கள் அனைவரையும் பார்த்தாள்; முகத்தைச் சுழித்தாள். தன் தலையைத் தாழ்த்தி, மௌனமானாள்; தன் மயிரை மெதுவாக ஒதுக்கிவிட்டுக் கொண்டாள். சில கண நேரம் திக்குமுக்காடிய பிறகு அவள் திடீரென்று தலை நிமிர்ந்து ஆத்திர வேகம்கொண்ட தொனியில் பேசினாள்:

"செத்துவிட்டான்! அதற்கு என்ன அர்த்தம், சாவது என்றால்? எது செத்தது? இகோரிடம் நான்கொண்டுள்ள மதிப்புச் செத்ததா? தோழன் என்ற முறையில் நான் அவனிடம் கொண்டிருந்த பாசம் செத்ததா? அல்லது அவனது கருத்துக்களைப்பற்றியும் சேவையைப் பற்றியும் உள்ள என் நினைவு செத்ததா? அவன் என் இதயத்தில் எழுப்பிய உணர்ச்சி மறைந்ததா? நேர்மையும் துணிவும் கொண்ட மனிதன் என்று அவனை நான் உணர்ந்திருந்த என் அறிவு மறைந்ததா? இவையெல்லம் செத்தா போயின? என்னைப் பொறுத்தவரை அவை என்றும் சாகாதவை என்பது எனக்குத் தெரியும். ஒரு மனிதனை 'அவன் செத்து விட்டான்' என்று சொல்லும் போது மிகவும் அவசரப்பட்டே கூறி விடுகிறோம் என்றே எனக்குத் தோன்றுகிறது. 'அவனது உதடுகள்தான் செத்துப் போயின. ஆனால் அவன் உரைத்த வாசகங்கள் இன்னும் வாழ்பவர்களின் இதயங்களிலெல்லாம் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும்!'

## மக்சீம் கார்க்கி

"தோழர்களே! நான் சொல்வது முட்டாள்தனமாகக்கூடத் தோன்றலாம். ஆனால், நான் நேர்மையான மனிதர்களின் சிரஞ்சீவித் தன்மையில், என்னை இந்த மாதிரியான அற்புத வாழ்க்கையில் ஈடுபடுத்தியவர்களின் சிரஞ்சீவித் தன்மையில் நம்பிக்கை கொள்கிறேன். அவர்கள் கற்றுக்கொடுத்த இந்த வாழ்க்கை, தனது பிரமிக்கவைக்கும் பிரச்சனைகளால், வகை வகையான காட்சிகளால், கருத்துக்களின் வளர்ச்சியால் என்னைப் புல்லரித்து புளகாங்கிதம் அடையச் செய்கிறது. இந்தக் கருத்துக்களின் வளர்ச்சி என்னுடைய சொந்த இதயத்தைப் போல் எனக்கு அத்தனை அருமையிருக்கிறது. ஒருவேளை நாம் நமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி வாழலாம்; நாம் சிந்தனை களுக்கே அடிமைப்பட்டு வாழ்கிறோம். அதனால் அந்தச் சிந்தனை நம்மைப் பாதித்து உருக்குலைத்து விடும். எதையுமே நாம் உணர்ச்சியற்று மதிப்பிடுகிறோம்...."


"உங்களிடம் ஏதோ அருமையான மாறுதல் ஏற்பட்டிருப்பது போலத் தோன்றுகிறதே" என்று புன்னகையுடன் கேட்டாள் சோபியா.

"ஆமாம்" என்றாள் சாஷா. "ரொம்பவும் அருமையானது தான். அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. நிகலாய் வெஸோவ்ஷிகோவோடு நேற்றிரவு முழுவதும் பேசிக் கொண்டிருந்தேன். எனக்கு எப்போதுமே அவனைப் பிடித்ததில்லை. அவன் முரட்டுத்தனமும் அறியாமையும் கொண்டவனாகவே எனக்குத் தோன்றினான். சந்தேகமின்றி அவன் அப்படித்தானிருந்தான். எல்லோர் மீதும் அவனுக்கு ஓர் அசைவற்ற மோசமான எரிச்சல் உணர்ச்சியே ஏற்பட்டு வந்தது. எப்போது பார்த்தாலும், எந்த விஷயத்தை எடுத்தாலும் அவன் தன்னை வைத்தே, தன்னைத்தானே முன்னிலையில் வைத்துப் பேசுவான். எப்போது பார்த்தாலும் 'நான், நான்,நான்' என்று முரட்டுத்தனமாக, குரோத உணர்ச்சியுடனேயே பேசுவான். அவன் பயங்கரமான குறுகிய மனப்பான்மைக்கு ஆளாகியிருந்தான்."

அவள் புன்னகை செய்தாள்; தனது பளபளக்கும் கண்களால் அவர்களை மீண்டும் ஒரு முறை பார்த்தாள்.

"இப்போதோ அவன் 'தோழர்களே!' என்று அழைக்கிறான். அவன் அந்த வார்த்தையை எப்படிச்சொல்கிறான் என்பதை நீங்கள் பார்க்கவேண்டுமே! ஒருவித அடக்கமும் அன்பும் கலந்த பாவத்தோடு அழைக்கிறான். அந்த பாவத்தை வார்த்தைகளால் சொல்லமுடியாது. அவன் வியக்கத்தக்க முறையில் மாறி விட்டான். படாடோபமே இல்லை. நேர்மையான ஈடுபாடும், உழைக்க வேண்டும் என்ற ஆர்வமும் அவன் மனத்தில் நிரம்பியிருக்கின்றன. அவன் தன்னைத் தானே உணர்ந்து கொண்டுவிட்டான். அவனது குறைகளையும் நிறைகளையும் அவன் நன்கு தெரிந்து கொண்டு விட்டான். அவனிடம் காணப்படும் முக்கிய மாறுதல் இதுதான்: அவனிடம் ஓர் ஆழ்ந்த தோழமையுணர்ச்சி தோன்றியிருக்கிறது."

கண்களில் உவகை ஒளிவீசியது. அவள் மனத்தில் ஓர் ஆனந்த மயமான நம்பிக்கை நிறைந்து ததும்புவதாகத் தாய்க்குத் தோன்றியது. இகோரின் வாழ்க்கையை நினைத்துத் துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அவர்களது சோக நிலைக்கு எதிர்மறை பாவம் போல, அவளது நடவடிக்கை இருந்தது.



சாஷா பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த தாய்க்கு ஓர் உண்மை புலப்பட்டது. சாஷாவைப் போன்ற நெஞ்சமுத்தமுள்ள ஆசாமிகூட, சமயம் ஏற்பட்டால் குதூகலமும் இங்கிதமும் நிறைந்து விளங்க முடியும் என்பதை உணர்ந்து உள்ளூர மகிழ்ந்து கொண்டாள். ஆனால், அதே வேளையில் அவளது இதயத்தின் அடியாழத்தில் அவள் பொறாமையுணர்ச்சியோடு எண்ணிக் கொண்டிருந்தாள்:

"பாவெலுக்கு மட்டும் என்னவாம்?"

"அவன் தன் தோழர்களைப் பற்றி மட்டுமே நினைக்கிறான்" என்று தன் பாட்டில் நிகலாயைப் பற்றியே பேசத் தொடங்கினாள் சாஷா. "அவன் என்னிடம் என்ன சொல்ல வந்தான் தெரியுமா? சிறையிலுள்ள மற்றத் தோழர்களைத் தப்பியோடச் செய்யும் விஷயத்தைப் பற்றிச் சொன்னான். அந்தக் காரியம் ரொம்பச் சுளுவானது என்று அவன் சாதிக்கிறான்."

சோபியா தலையை உயர்த்தி ஆர்வத்தோடு பேசினாள்:

"அதுவும் ஒரு நல்ல யோசனைதான், சாஷா! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

தாயின் கையிலிருந்த தேநீர்க் கோப்பை நடுநடுக்கியது. சாஷா தன் புருவங்களைச் சுருக்கி விழித்துத் தனக்கு ஏற்பட்ட உத்வேக உணர்ச்சியை உள்ளடக்க முயன்றாள். ஒரு கணம் கழித்து, அவள் தீர்மானமான குரலில், எனினும் இனிய புன்னகையோடு பேச முனைந்தாள்:

"அவன் சொல்வது உண்மையென்றால், நாம் அந்த முயற்சியில் ஈடுபட்டுப் பார்க்க வேண்டியதுதான், முயல்வது நம் கடமை!"

திடீரென அவளது முகம் சிவந்தது. ஒன்றுமே பேசாமல் நாற்காலிக்குள் உட்கார்ந்து போனாள்.

"அடி கண்ணே!" என்று சிறு புன்னகை ததும்ப, தன்னுள் நினைத்துக் கொண்டாள் தாய். சோபியாவும் புன்னகை புரிந்தாள். நிகலாய் சாஷாவைப் பார்த்தான், லேசாகச் சிரித்துக் கொண்டான். அந்தப் பெண் தன் தலையை நிமிர்த்தினாள். கடுமையாக எல்லோரையும் பார்த்தாள். அவளது முகம் வெளுத்து, கண்கள் பிரகாசமாக ஒளிர்ந்தன. அவளது குரல் மிகவும் அவமானத்தால் வறண்டு ஒலித்தது.

"நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்றாள் அவள். "நான் ஏதோ சொந்தக் காரணத்துக்காகத்தான் இதைச் செய்யச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்."

"ஏன் சாஷா?" என்று பாசாங்குடன் கேட்டுக் கொண்டே எழுந்து அவளிடம் சென்றாள் சோபியா. இப்படிச் சொன்னது சாஷாவின் மனத்தைத் துன்புறுத்திவிட்டது என்றே தாய்க்குத் தோன்றியது. சோபியா இப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என்றே தாய் கருதினாள். தாய் பெருமூச்செறிந்தாள்; குற்றம் கூறும் பாவத்தோடு அவளைப் பார்த்தாள்.

"இந்தப் பிரச்சனையில் நான் எந்தச் சம்பந்தமும் கொள்ளத் தயாராயில்லை!" என்றாள் சாஷா. "நீங்கள் இந்தப் பிரச்சனையை என் சொந்த விவகாரமாகக் கருதினால், அதைப் பற்றிய முடிவுக்கு வருவதில் நான் கலந்து கொள்ளவே மாட்டேன்!"

"போதும், சாஷா" என்று அமைதியாகச் சொன்னான் நிகலாய்.

தாயும் அவளருகே சென்று, அவளது தலைமயிரைக் கோதித் தடவிக் கொடுக்க ஆரம்பித்தாள். அந்தப் பெண் அவளது கரத்தை எட்டிப் பிடித்தாள்; கன்றிச் சிவந்து போன தன் முகத்தைத் தாயின் முகத்துக்கு நேராக நிமிர்த்தினாள். பேசுவதற்கு வாய் வராததால், தாய் லேசாகப் புன்னகை செய்தாள்; பெருமூச் செறிந்தாள். சாஷாவுக்கு அடுத்தாற் போலிருந்த நாற்காலியில் சோபியா உட்கார்ந்தாள்; தன் கரத்தை சாஷாவின் தோள்மீது சுற்றிப்போட்டாள்.

"நீ ஒரு விசித்திரப் பிறவி" என்று அவளது கண்களையே பார்த்துப் புன்னகை செய்தவாறே சொன்னாள் சோபியா.

"நான்தான் அசட்டுத்தனமாய் நடந்து கொண்டு விட்டேன்.."

"நீங்கள் என்ன, இப்படி நினைக்கிறீர்கள்?" என்று சோபியா பேச முனைந்தாள்; ஆனால் அவள் பேச்சை முறித்துக் குறுக்கிட்டுப் பேசினான்.

(தொடர்ந்து வரும்)

# கிழக்குப் பயணம்...

" ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த நான் அது செங்கலடி செக் பொயின்ற் என்று கண்டு கொண்டேன்."

ஞாயிற்றுக்கிழமை... திங்கட்கிழமை காலை ஏழு மணிக்கே முதற் பாடத்திற்கு சமூகமளிக்க வேண்டியிருந்ததால் ஞாயிற்றுக்கிழமை காலையில் சுபஹ் தொழுகையை முடித்துவிட்டு மட்டக்களப்புக்கு பஸ் எடுப்பதற்காக நானும் எனது நண்பனும் வாழைச்சேனை பஸ் ஸ்டாண்டுக்கு சென்றுவிட்டோம்.

சுமார் நான்கு மணிநேரம் வரை பஸ்ஸுக்காக காத்திருந்து களைத்துப் போகவே எனது நண்பன் பைஸல் மெதுவாக "எதுசரி குடித்து விட்டு வருவோம்" என்று சொல்லவும் இருவருமாக எழுந்து பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் சென்று ஆளுக்கொரு 'ஃபன்டா' எடுத்துவிட்டு மீண்டும் பஸ்ஸ்டாண்டுக்குள் நுழைந்தபோது 'மட்டக்களப்பு' என்ற போர்ட் போட்ட பிறைவற் பஸ் ஒன்று உறுமிக்கொண்டுவந்தது. இருவரும் ஓடிச்சென்று சீட்பிடிப்பதற்குள் போதுமென்றாகிவிட்டது.

C.T.B பஸ்களையெல்லாம் இராணுவத்தினர் கொண்டு சென்றுவிட்டதால் பஸ்ஸுக்கு சரியான தட்டுப்பாடு. அதனால் சரியான சனநெரிசல். பிறைவற் பஸ்காரர்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்திய ராணுவத்தினர் தங்கள் ட்றக்குகளில் ஆட்டுக் கடாய்களை ஏற்றுவது மாதிரி கொண்டக்டர் நெருக்கி நெருக்கி ஆட்களை ஏற்றிக்கொண்டான்.

மூச்சுவிடக் கூட இம்மியும் இடைவெளி இல்லாததால் பயணிகள் பெரிதும் அவஸ்தைப்பட்டனர். என்றாலும் பஸ் ஓட ஆரம்பித்தபோது சன்னல் வழியாக வந்த காற்று ஒருவாறாக இதமளித்தது.

படிப்படியாக சனங்களும் இறங்கத் தொடங்கினர். பஸ் சிராணை அடைந்த போது நின்றுவந்த பயணிகளின் வீதம் சற்றுகுறையவே இன்னும் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

மெதுவாக எனது பேக்கைத்திறந்து உள்ளிருந்த அரபுப்பத்திரிகை ஒன்றை எடுத்து எனது விழிகளை அதில்பதித்து அதிலிருந்த கட்டுரையொன்றில் கவனம் செலுத்தியபோது பஸ்நின்றது.

"எல்லாரும் அவசரமாக இறங்கிப் போங்க" என்ற கொண்டக்டரின் குரல் கேட்டு சன்னல்வழியாக எட்டிப்பார்த்த நான் அது செங்கலடி செக்பொயினற் என்பதை புரிந்து கொண்டேன்.

மெதுவாக பேப்பரையும் மடித்துக் கொண்டு சனங்களுடன் கூடவே நானும் எனது நண்பனும் இறங்கிச் சென்று கொட்டும் வெய்யிலில் சுமார் அரைமணிநேரம் வரை கால்கடுக்க 'கியூ'வில் நின்று செக்கிங் முடிந்ததும் ஓடிச்சென்று மீண்டும் எங்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டோம்.

செங்கலடி டவுனுக்குள் பஸ் நுழைந்தவுடன் சனநெரிசல் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியது. போதாக் குறைக்கு நான்கைந்து துப்பாக்கி ஏந்திய காக்கியுடைக்காரர்களும் ஏறிக் கொண்டனர்.

சுமார் ஒன்றரை மைல் தூரம் இருக்கும்; சென்றபோது மீண்டும் பஸ் நின்றது. அது ஏறாவூர் செக்பொயினற். "கட்டி ஒக்கம பகிண்ட" என்று துப்பாக்கி ஏந்திய முரட்டுக்கரம் ஒன்று அதட்டவும், சனங்களெல்லாம் முண்டியடித்துக்கொண்டு இறங்கினர்.

என்றாலும் ஓரிரு கிழடுகளும் குழந்தைக்காரப் பெண்களும் இறங்காது போகவே மீண்டும் கொச்சைத் தமிழில் "எல்லாம் இறங்கிப் போ" என்று அதட்டல், பயத்தில் அவர்களும் இறங்கிக் கொண்டனர்.

ஒவ்வொருவராக அழைத்து செக் பண்ணிமுடிக்க ஒருமணி நேரம் சென்றுவிட்டது. அதற்குள்ளும் 'கியூ'வை விட்டும் கொஞ்சமேனும் பிசகி விட்டால் அவ்வளவுதான். அதனால் அவதானமாக நானும் எனது நண்பனும் 'கியூ'வில் நின்று செக்கிங் முடிந்ததும் மீண்டும் பஸ்ஸினுள் ஏறிக் கொண்டோம்.

**காவத்தமுனை –ஹாறான்**



இன்னும் சற்று தூரம் சென்றபோது; ஊறாணி செக் பொயின்ற் வந்தது. அதிலும் சுமார் ஒருமணி நேரம் வரை தாமதிக்க வேண்டி இருந்தது. அதற்குள் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு நோயாளிகளைப் பார்க்கச்செல்ல வந்தவர்கள் "மணி ஒன்றைத்தாண்டிவிட்டால் நோயாளர்களைப் பார்க்கமுடியாதே!" என்ற அங்கலாய்ப்பில் அவசரப்பட்டனர்.

கல்முனை செல்ல வேண்டியிருந்ததால் எங்களுக்கும் சற்று அவசரமாகத்தானிருந்தது "என்றாலும் என்ன செய்வது? கிழக்கில் பயணம் செய்வதென்றால் இப்படித்தான் இருக்கிறது". என்று ஒரளவு எங்களுக்கு நாங்களே ஆறுதல் கூறிக்கொண்டோம்.

பஸ் மட்டக்களப்பு டவுனை அடைந்த போது மணி மூன்றையும் தாண்டிவிட்டது. பசிவேறு வயிற்றைக்கிள்ளியது. இருவரும் அவசரமாக இறங்கி பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் சென்று ஆளுக்கொரு கட்லட் கடித்து டீயும் குடித்து விட்டு ஒரளவு பசி தணிந்தபிற்பாடு "பொஸ் கல்முனைக்குப் போற லாஸ்ட்பஸ் எத்தனைக்குவரும்?" என்றேன், அந்த ஹோட்டல்கார முதலாளியிடம்.

"இப்ப டைம் என்ன? தம்பி"! "டைம் மூன்டரையாகுது", என்றதும் உதட்டைப் பிதுக்கிவிட்டு 'இதற்குப்பிறகு கல்முனைக்கு பஸ் இல்லதம்பி! மூன்று மணிக்குத்தான் கடைசி பஸ்;" நான் நினைவிழந்து விழாததுதான் குறை.



படிப்பகம்

www.padippakam.com

# ~~அன்புள்ள~~ அக்கா

**தி. நடராஜன்**

கொஞ்சம் விலகி நின்று கூட்டம் போகட்டும் என்று ஒதுங்கி நின்றார்கள் மீனாவும் அவள் அக்காள் வசந்தியும்.

ஏன் இப்படி நெருக்கியடித்துப் போக வேண்டுமென்று தோன்றியது. எப்படியும் தியேட்டரை விட்டு வெளியே போகத்தான் போகிறோம். அதற்கு ஏன் இந்த நெருக்கடி? கொஞ்சம் நிதானமாகவே போகலாமே?

மீனா தியேட்டர் உள்ளே பார்த்தாள். தான் எந்த இடத்திலே உட்கார்ந்திருந்தோம்? கூடவே பக்கத்தில் உட்கார்ந்த பெண்ணின் உராய்வும் நெருக்கடியும் ஞாபகம் வந்தது. அவளது வியர்வை நாற்றம் ஞாபகம் வந்தது. படம் போரடிக்கிற நேரத்தில் அந்தப் பெண்ணின் வேர்வை நாற்றமே மிகையானதாக இருந்தது. இந்த நாற்றத்தில் இவள் கணவன் எப்படி இவளோடு முயங்குகிறான் என்று இடைவேளை முழுவதும் யோசனை ஓடிக்கொண்டிருந்தது.

நாயகனும், நாயகியும் சரசமாடும் காட்சிகளே ஞாபகத்தில் வந்தன. படம் சுமார்தான். கதையில் வலுவே இல்லை. ஆனால் சரச சல்லாபக் காட்சிகள் அதிகம். இடைவேளைக்கு முன்னால் மூன்று தடவை- இடைவேளைக்குப் பிறகு நான்கு தடவை- அப்படிப்பட்ட அந்தக் காட்சிகள் இடம் பெற்றிருந்தன. அத்தகைய காட்சிகள் வரும் ஒவ்வொரு சமயமும் உடம்பு பரபரத்தது. தனக்கே இப்படியிருக்கிறதே அக்காவுக்கு எப்படியிருக்கும்! ச்சே! ஏன்தான் இந்தப் படத்திற்கு வந்தோமோ என்றிருந்தது.

அக்கா விரும்பப் போய்தான் வந்தாள். இப்படி நெருக்கமான காட்சிகள் வரும் என்று தெரிந்திருந்தால் இந்தப் படத்துக்கு வந்திருக்கவே மாட்டாள்.

கணவனோடு இப்படிச் சில படங்களுக்கு வந்திருக்கிறாள். அந்த நாள்களில் எல்லாம் இரவு வேளையில் கணவனின் சேட்டைகள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். இவளுக்கும் அவற்றில் சந்தோஷமாகத்தான் இருக்கும்.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பின்பும் கணவன் கண்ணுக்கு அழகாய்த் தெரிவதே ஒரு அதிர்ஷ்டம். அதுவும் அவன் தன்னையே சுற்றிச் சுற்றி வரும்போது கிடைக்கிற சுகமே அலாதியானது. பழகிப் போன உடம்பானாலும் அனுபவம் புதிது புதிதாகத் தோன்றும். உடம்புக்குத் தான் வயது; மனசுக்கில்லையே.

ஆனால் அக்காவை நினைக்கும் போது பாவமாக இருந்தது. அவள் கணவன் துபாய் போய் இரண்டு வருஷம் ஆகிறது. இவளை விட அக்கா இரண்டு வயது பெரியவள். கல்யாணம் முடிந்து பத்து வருஷம் ஆகிறது. இதுவரை குழந்தையில்லை. அம்சமான உடம்பு. மேக்கப் பண்ணினால் சினிமா நடிகை தோற்றுவிடுவாள். அப்படி ஒரு கவர்ச்சி.

இப்படி மனைவிகளைப் பிரிந்து போகும் கணவன்மார்கள் அவர்களின் தனிமையையும், விரகத்தையும் நினைத்துப் பார்ப்பார்களா?

இத்தனைக்கும் அக்காவை மாமன் மாமியார் அவளை உள்ளங்கையில் வைத்து தாங்குகிறார்கள். அவளும் கௌரவமாக ஒரு பள்ளியில் டீச்சராக வேலை பார்க்கிறாள். தான் உண்டு தன் வேலை உண்டு



என்று இருப்பவள். யாரும் அவளை ஒரு வார்த்தை தவறுதலாகச் சொன்னதில்லை. அக்காவுக்கு ஒரே ஒரு ஏக்கம். குழந்தை இல்லையே என்ற ஏக்கம்.

ஒவ்வொரு வருடமும் விடுமுறையின் போது அக்கா இங்கு வந்து விடுவாள்.

> கதவைத் திறக்க தாழில் கைவைத்தாள். கதவு சாத்தப்பட்டிருந்தது. நெஞ்சில் பட படப்பும் கைகால் நடுக்கமும் ஏற்பட்டது.

பதினைந்து நாட்களாவது இங்கு தங்கி விட்டுத்தான் போவாள்.

"என்னடி யோசன? போவமா?" என்று இவள் கையைப் பிடித்தாள் வசந்தி.

இப்போது தியேட்டர் ஏறக்குறைய காலியாகியிருந்தது.

அக்காவை முன்னால் போகவிட்டு நடந்தாள். ஸ்பீக்கர் 'மருதமலை மாமணியே' பாடிக்கொண்டிருந்தது. அதே இரைச்சல். சீர்காழிக்கும், மதுரை சோமுவுக்கும் வெண்கலக்குரல். ஸ்பீக்கரின் இரைச்சலை மீறிக் கேட்கிறது. இதே ஸ்பீக்கரில் வேறு பாடகர் பாடின பாட்டை போட்டால் பாட்டே வெளியே கேட்காது. வெறும் இரைச்சல் தான் கேட்கும்.

"என்னடி இது! இந்த ஸ்பீக்கர் இப்படி கரபுராண்ணு ஒரே இரைச்சலா இருக்குது?" காதைப் பொத்திக் கொண்டாள்.

"படத்துல கதை இருக்கோ, இல்லையோ கட்டிப்பிடிக்கிற சீனுக்கும், முக்கி முனகுகிற சீனுக்கும் குறைச்சலில்லை." தன் கட்சிக்கு ஆள் சேர்ந்துவிட்டது போன்ற சந்தோஷம் ஏற்பட்டது இவளுக்கு. இப்படித்தான் அந்தக் காட்சியை விரசமில்லாமல் விமர்சிக்க முடியும். இதற்குமேல் விவரித்தால் விரசமாக இருக்கும். எல்லோருக்கும் உணர்வை வார்த்தைகளாய்க் கோர்க்கும் வித்தை தெரிவதில்லை.

–●–●–

வீட்டின் முன்விளக்கு எரிந்தது. காம்பவுண்ட் இரும்புக் கேட்டை திறந்து கொண்டு உள்ளே சென்றாள். அக்கா வசந்தி உள்ளே வந்ததும் கேட்டை சாத்தி தாழ் போட்டாள். முன்கதவு திறந்திருந்தது. ஹாலிலும் வீட்டின் உள்ளேயும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தார்கள். ஹாலின் மேலச் சுவரோரம் ஸ்டீல் டேபிள் முன்னால் எஸ்பெண்ட் சேரில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான் அவள் கணவன் சேகர்.

இவர்கள் உள்ளே நுழைவதைப் பார்த்ததும் படிப்பதை நிறுத்திவிட்டு இவர்களைப் பார்த்தான்.

"பிள்ளைங்க எங்கே?" இவள் தான் கேட்டாள்.

வசந்தி கொடியில் கிடந்த தங்கையின் வாயில் சேலையை எடுத்துக் கொண்டு பக்கத்து ரூமுக்குப் போனாள்.

"தாத்தா வீட்டுக்கு போயிட்டுது!"– என்றான் சேகர்.

"நீங்க சாப்பிட்டீங்களா?"

"ம்.. இனிமேதான். அதுக ரெண்டும் அங்க போயி சாப்பிட்டுக்கிறேன்னு போயிடுச்சுங்க!" என்றவன், புத்தகத்தை மூடி வைத்து விட்டு,

"படம் எப்படி?" என்று கேட்டான்.

"சுமார்தான்" என்றவள் இன்னொரு வாயில் சேலையை எடுத்துக் கொண்டு உள் வீட்டுக்குள் சென்றாள்.

இவள் மாற்றுச் சேலையோடு வரும் போது அவன் வெளியிலிருந்து உள்ளே வந்தான்.

வசந்தி இப்போது– சேகர் அமர்ந்திருந்த சேரில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டு அவன் மூடி வைத்த புத்தகத்தை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சாப்பிட்டு முடித்த இவள் பாத்திரத்தை ஒதுக்கி வைக்கப் போய்விட்டாள். வசந்தி சேகரோடு பேசிக் கொண்டிருந்தாள். மனசுக்குள் என்னவோ செய்தது. நெஞ்சு படபடப்பும் அதிகமாகியது. நேற்று வரை இப்படி தப்பிதமாக எண்ணத் தோன்றவில்லை. அக்கா வந்து பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. தினமும்தான் பேசுகிறாள். பேசும் போது சிரிக்கிறார்கள். அப்போதெல்லாம் தோன்றாத விகல்பமும், எரிச்சலும் இப்போது எற்பட்டது. காரணமில்லாத பயமும் தோன்றிது. பாத்திரம் கழுவி– அடுக்களையும் கழுவி முடித்துவிட்டு இவள் ஹாலுக்கு வந்த போதும் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். சேகருக்கு அருகே இன்னொரு சேரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள் வசந்தி.

சேகர் என்னவோ சொல்ல, அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். மீனா அங்கே வந்ததும் சிரிப்பு நின்றது.

"என்னடி ஒரு மாதிரியா இருக்கே?" என்றாள் வசந்தி.

"சும்மா நிக்கிறேன். நீங்க பேசிக்கிட்டிருக்கீங்களே! அதான்" என்றாள் வசந்தி.

"நீ என்னிக்கி ஊருக்குப் புறப்படறேக்கா?" கேட்ட பின்தான், இப்படி கேட்டிருக்கக் கூடாது என்று உணர்ந்தாள் மீனா.

"ஏன் கேக்கிறே? பத்து நாள் தானே ஆச்சு, இன்னும் ஒரு பத்து நாள் இருந்துட்டே போறேன்!"– இது வசந்தி.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு படுக்கப்போய் விட்டார்கள்.

-0-0-

வசந்தி வந்த நாளிலிருந்து சேகரின் படுக்கை ஹாலில்தான். ரூமுக்குள் அக்காவும், தங்கையும் படுத்தார்கள்.

சேகர் படுத்துவிட்டான். அறுபது வாட்ஸ் பல்பை அணைத்துவிட்டு நைட் லாம்பை எரிய விட்டு உள்ளே போனாள். கதவை தாழிட்டாள். ஒரே பாயில் இரண்டு தலையணை போட்டு ஒன்றில் வசந்தி தலை வைத்துப் படுத்திருந்தாள். இவளும் விளக்கை அணைத்து விட்டு படுத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் இருட்டுக்குள்ளே இருவரும் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் தூங்கினார்கள்.

மீனா அசந்து தூங்கிக்கொண்டிருந்தாள். திடீரென்று நாய் குரைப்புச் சத்தம் கேட்கவே விழித்து விட்டாள். ஏதோ யோசனையில் பக்கத்தில் துழாவினாள். வசந்தி இல்லை. திடுக்கிட்டு எழுந்தாள். விளக்கைப் போடப் போனவள்– ஏதோ யோசனையில் விளக்கு போடும் எண்ணத்தை கைவிட்டு கதவோரம் போய் நின்றாள்.

ஹாலில் சேகரும் வசந்தியும் கிசுகிசுத்துக் கொண்டிருப்பது கேட்டது.

கதவைத் திறக்க தாழில் கை வைத்தாள். கதவு சும்மா சாத்தப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. நெஞ்சில் படபடப்பும் கைகால் நடுக்கமும் ஏற்பட்டது. உள்ளங்கை வியர்த்தது. அங்கே என்ன நடக்கும் என்பதை ஊகிக்க அதிக நேரமாகவில்லை இவளுக்கு.

கதவைத் திறக்கப் போனவள் யோசனை செய்தாள்.

இந்த நேரத்தில் கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்குப் போவதில் சிக்கல் இருக்கிறது. தன்னோட கௌரவமும், சகோதரியின் கௌரவமும் நிலைகுலைந்து பாதாளத்திற்கு போகும் அபாயம் இருக்கிறது. கதவு திறக்காமலே இருப்பது எல்லோருக்கும் நல்லது. நடை தளர்ந்து, நெஞ்சு கனத்து படுக்கையில் சரிந்தாள். திரும்ப வந்து படுத்த அக்காவிடம் சேகர் உபயோகிக்கும் சென்டின் மணம் புறப்பட்டு வந்தது. இவளுக்கு கண்ணீர் கசிந்து, தலையணையில் இறங்கியது. ●

---

# கடிதமாய் உனக்கு.....

**ஷர்மிளா இஸ்மாயில் - கண்டி**

*"என் காதலையெல்லாம்*
*கடிதமாய் உனக்கு*
*அனுப்பி வைப்பேன்!*
*முத்தமெனும் இனிய*
*முத்திரையிட்டு..."* ஸ்டீரியோ வழியாக அந்த ஆங்கிலப்பாடகன் இதமாய்ப் பாடி இனிமை சேர்த்துக் கொண்டிருந்தான்.

தனது டயறியை எடுத்துப் பிரித்தவள் திகதியை உணர்ந்து ஒருகணம் சிலிர்த்தாள். 'ஆகஸ்ட் 19 அவனது பிறந்த நாள்...' அவன்... அந்த அவன்!

அதுவரை சலனமற்றிருந்த மனது திடீரென பாரமாயிற்று. கண்கள் ஈரமாயின. உடம்பெல்லாம் ஏதோவொரு வேதனை மின்சாரம் பாய்ந்து மனதை நொறுக்கியடித்தது. மனதின் தரையிலெல்லாம் வேதனைச் சிதறல்கள்.

அதன் பலனாய் விம்மல். பெருமூச்சு. உதட்டைக் கடித்து உணர்வுகளை அடக்கினாள். நினைவுகளோ ஆர்ப்பாட்டமாய் ஊர்வலம் நடத்தின.

*"என் கனவுகளையெல்லாம்*
*கடிதமாய் உனக்கு*
*அனுப்பி வைப்பேன்–கவனமாக.*
*முத்தமெனும் முத்திரையிட்டு..."* பாடல் வரிகள் இதயத்தைப் பிழிந்தன. 'உன் கனவுகளின் சிறகை நான் முறித்துப் போட்டுவிட்டேன். உன் காதலையெல்லாம் நான் கலைத்துப் போட்டுவிட்டேன். தவறு தான். மன்னிக்க முடியாத குற்றம்...' அவள் மானசீகமாய் எண்ணங்களுள் புதையலானாள்.

'இருந்தும்... என் நியாயங்கள் என்வரையில் சரியாகவிருந்தன. உன் பாஷையில் நானொரு கோழை. கோழைகள் காதலித்தால் வேதனையே விளைவு. தெரிந்தும்... உன் முகத்தை முதன் முதலாகக் கண்டது முதல் இதயம் இடறிப் போனது என் குற்றமா? வழுகிப்போன இதயம் வீழ்ந்திருந்தது உன் பாதங்களுக்கருகில்...

அந்த இதயத்தின் இயக்கத்தை என்னால் எப்படி இறுக்கி வைக்க முடியும்? உன் வாழ்க்கையையெல்லாம் எனக்காக அனுப்பி வைத்தாய் -கடிதமாக-முத்தமெனும்



முத்திரையிட்டு... தெரியும். நீ வாழ்ந்தது எனக்காகத் தான். உன் நேசத்தின் ஆழத்தில் நான் அமிழ்ந்து போனேன். ஆனாலும் உனக்காக வாழத்தான் மறந்து போனேன்.

மல்லிகையைப் பெயரிலும் வாசனையை இதயத்திலும் கொண்டவனே, நீ என்னை இன்னும் மன்னிக்காமல் இருக்கலாம். மறந்தும் இருக்கலாம். உனக்காக இன்னொருத்தி தன் புன்னகையைத் தேக்கி வைத்து இப்போதும் காத்திருக்கலாம்... இன்னொருத்தி.! (மனது வலிக்கிறது)

என்றாலும்... என் மனதில் இத்தனை இத்தனை நாளாய் சேர்த்து வைத்த சேதிகளை சொல்லி விடுகிறேன்.

உன் இதயத்து மடல் என் கரம் கிட்டிய அந்த சுந்தரதினம். சுகந்தமாய் உணர்ந்தேன் வாழ்வினை. திகதிகளையும் வினாடிகளையும் கூட நேசிக்கத் தொடங்கினேன். உன் மடலை உருப் போட்டதில் இதயம் இரு மடங்கு துடித்தது.

உனக்கு நான் எனக்கு நீயென தீர்மானித்தது மட்டுமல்ல கடிதங்களும் அவ்வழியே கரம் மாறின. கவிதை எழுதக் கற்றுக் கொண்டேன். நீ வாசித்து வியந்தாய். வானொலியின் சில பாடல் வரிகள் கடிதத்திற்கு முத்தாய்ப்பு வைத்தன. வாழ்க்கையின் அர்த்தம் புரிந்தது. வாழ்ந்தோம் நமக்காகவே.

காதல் வானில் உலவி கருத்தினையும் நிஜ உலகினையும் மறந்த போது எனக்குப் பொறுப்பாய் இருந்தவர்கள்–என்னைவிட வாழ்க்கையினை ரொம்பவும் அறிந்தவர்கள் என் காதலைக் கண்டு கொண்டார்கள்.

> " படிக்கிற வயதில் காதலா? முடியாது, கூடாது நிறுத்திக் கொள்."

கவலைப்பட்டார்கள். பின் கடுமையாய்க் கோபப்பட்டார்கள்.

"படிக்கிற வயதில் காதலா? முடியாது. கூடாது நிறுத்திக்கொள். படிப்பொன்றே உன் குறிக்கோளாக வேண்டும். மீறாதே. இது விதி. மீறப்படக் கூடாது. தாண்டினால் விளைவு உனக்கு மட்டுமல்ல உன்னவனுக்கும் பாதகமே. புரியுதா?" நான் பயந்தேன். உன் பார்வையில் ஒரு கோழையானேன். யோசித்தேன். "எம் பேச்சை மீறிப்பார். அவன் பெற்றோருடன் தொடர்பு கொண்டு பிரச்சனை வலுப்படுத்தப்படும். தீர்வு நல்லதாயிருக்காது." அழக் கூடத் தோன்றவில்லை. உன் பெற்றோர் முன்னிலையில் நீ காதல் குற்றம் சுமத்தப் பட்டவனாய்... என்ன செய்வாயோ? என்னால் உன் குடும்பத்தை பகைப்பாயோ? இல்லை; உன் படிப்பினை குலைத்துக் கொள்வாயோ? என்னால் நீ தண்டிக்கப் படுவதா...?

காதலைக் குற்றமெனும் என்னவர்களை எனக்கு நன்கு தெரியும்; பொல்லாதவர்கள். சொன்னதைச் செய்வார்கள். நான் தான் கோழையாயிற்றே; பயந்தேன். கடிதங்கள் கூட எழுதுவதற்கு அனுமதியில்லை. காவலும் கண்டிப்புகளும் பலமாயின. என்னைப் போல் நீயும் வேதனைத் தீயில் குளிப்பதா? அதுவே விதியாவதா? கூடாது 'மறந்து விடு. உனக்கேற்றவள் நானில்லை. இன்னொருத்தி காத்திருப்பாள் உனக்காக– (மனம் வலித்தது) எழுதிவிட்டேன். கிடைத்த கொஞ்ச சுதந்திரத்தில் தீக்குள் மனதை விட்டு ஒரு கடிதம்.

அதிர்ந்திருப்பாய் அழுதிருப்பாய். கோபித்திருப்பாய். துரோகி என்றிருப்பாய்..... கோழை என்றிருப்பாய். பின் காலத்தின் சுழற்சியில் என் நினைவுகள் மெதுவாக மங்கியிருக்கும். எனக்கென இன்னொருவன் வந்திருப்பதாய் நினைத்திருப்பாய்... என்னை மறந்திருப்பாய்! இதோ உன்... உன் மன்னிப்பை வேண்டி என் மனதையனுப்புகிறேன், கடிதமாக–கண்ணீரெனும் முத்திரையிட்டு... நேரமிருந்தால் படித்துப் பார்., டயரியை மூடினாள். அவள் கண்ணில் வழிகின்ற கண்ணீர் காதல் சொல்லிற்று.

---

# பூட்டு

**தேவகடாட்சம் தனலட்சுமி**

நித்திரைப் பாயில் இருந்து கொண்டு அடம்பிடிக்கத் தொடங்கி விட்டான் செல்வத்தின் மூத்த மகன். கலை நிகழ்ச்சிகளையும், விளையாட்டுப்போட்டிகளையும் உள் அடக்கிய சுதந்திரதின விழா இன்று! எவ்வளவுக்கு எவ்வளவு களியாட்ட விழாக்களை தவிர்க்க முடியுமோ, தவிர்க்க வேண்டும். என செல்வத்தின் பய உணர்வு ஓலமிட்டாலும், நிலைமை விளங்காத பிஞ்சு உள்ளத்தின் உணர்வை கட்டுப்படுத்த அவன் எண்ணவில்லை.

மகனை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு விழாவிற்கு விரைந்தான் செல்வம். சைக்கிளில் ஓடிய தூரத்தை விட தள்ளிக் கொண்டு சென்ற தூரம் தான் அதிகம். அவ்வளவு சோதனை. அடையாள அட்டை கையில் பிடித்த வண்ணமே நடை. அடிக்கடி 'அந்த வேதனை'யை எண்ணி மகனைப் பார்த்து உறுமிக் கொண்டான். இப்போது சுதந்திரதின விழா ஒலிபெருக்கியில் சமாதான கீதம் கேட்கிறது. அண்மித்து விட்டதை மகன் தன் புன்சிரிப்பால் காட்டினான்.

சைக்கிளை தள்ளிக் கொண்டு சென்ற செல்வத்தை தடுத்து நிறுத்திய பாதுகாப்பாளர்கள்; சைக்கிளை அவ்விடத்தில் நிறுத்தி விட்டு நடந்து செல்லுமாறு பணித்தார்கள். எவ்வளவு தூரம் விழா மைதானத்துக்கு நடக்கவேண்டும்? அதுவும் பிஞ்சு மகனையும் கூட்டிக் கொண்டு! செல்வத்தின் மனம் அங்கலாய்த்தது. விழாவிற்கு செல்வதா? விடுவதா? தன் மகனுக்கு எப்படி புரிய வைப்பது? தீர்மானிக்க முடியாத நிலையில் மெதுவாகத் திரும்பினான்.

மூன்று சக்கர சைக்கிளில் இரு கால்களையும் இழந்தவர் இருந்தார். இன்று அங்கவீனர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்குவார்கள். புரிந்து கொண்ட செல்வம் மெதுவாக அந்த கால்களை இழந்தவரிடம் கதை கொடுத்தான். "ஏன்! நீங்கள் போகலாம் தானே?" லேசாகச் சிரித்துக் கொண்டே கூறினார் அவர்: "எவ்வளவோ கூறியும் பாதுகாப்பாளர்கள் கேட்கிறார்களில்லை. அதுவும் நிலாவெளியில் தாக்கிய 'ஷெல்' வீச்சில் தான் எனது கால்கள் ஊனமானது என்ற வைத்திய அறிக்கையை காட்டியும் என்னை நடந்து போகும்படி கூறுகிறார்கள்! சீ... விழாவிற்கு போவதற்கே சுதந்திரமில்லை," என்று கூறிக் கொண்டு முச்சக்கர வண்டியை திருப்பிக் கொண்டு வேகமாக இடத்தை விட்டு அகன்றார்.



இவை அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருந்த செல்வத்தின் மகன் ,"அப்பா! சுதந்திரதின விழா பார்த்தது போதும். வாங்க வீட்டபோவம். இப்படி விழா பார்க்க தேவையில்லை!" இந்த பிஞ்சுக்கே புரிகிறது! இல்லை– புரியவைக்கிறார்கள்!என்று எண்ணியபடி சாத்தியிருந்த தனது சைக்கிளின் பூட்டைத் திறந்து கொண்டு சைக்கிளை தள்ளுகிறான்.

மீண்டும் ஒலிக்கும் அந்த சமாதான பாடல் துல்லியமாக கேட்கிறது. செல்வம் புன்னகைத்துக் கொள்கிறான். அதைக் கண்டு அவனது மகனும் புன்னகைக்கிறான். ●



படிப்பகம்

www.padippakam.com

# செய்வது தெரிந்து செய்



தளபதி வெடித்தான். அவன் வார்த்தைகள் வெளிப்பட்ட விதம் அப்படித்தானிருந்தது.

"பாண்டியர் படைகள் தோள்தட்டி எழுகின்றன. சோழநாட்டை துவம்சம் செய்துவிட்டுத்தான் மறுவேலை என்று மார்பு நிமிர்த்தி எழுகின்றன. மன்னர் ஆணையிட்டால் போதும் பாண்டியன் படைகள் புறப்படமுன்னரே நாம் முந்திக் கொள்ளலாம். அவர்கள் முதுகெலும்பை ஒடித்துப் போடலாம்."

சோழ மன்னன் அமைதியாகப் புன்னகைத்தான். இளைஞன் தனது தளபதியின் வேகத்தை மனதுக்குள்ளே மெச்சினான். பின்னர் எதிரே இருந்த அமைச்சரை தன் விழிகளால் ஏறிட்டான்.

"என்ன அமைச்சரே! நம் தளபதி போர்க்கொடி உயர்த்த வேண்டும் என்கிறாரே, நீர் என்ன சொல்கிறீர்?"

அமைச்சர் தனது மல்லிக்கைப்பூ நிறத் தாடியைத் தடவிக்கொண்டார். வயோதிபத்தின் அடையாளமாக நெற்றியில் விழுந்திருந்த சுருக்கம் அவர் யோசித்த போது மேலும் அதிகப்பட்டது.

"தளபதி சொல்வதில் நியாயம் இருப்பதாகத்தான் நினைக்கிறேன்!"

"அதாவது..?"

"அவர்கள் போரை ஆரம்பிக்க முன்னர் நாமாகவே அதனை ஆரம்பித்து விடுவது."

"அதாவது..?"

"முதலடி நமதாக இருக்க வேண்டும். அந்த அடி மூர்க்கமாகவும் இருக்க வேண்டும். அத்தோடு எதிரணி ஆடிப்போய்விட வேண்டும். தப்பியோடிப்போய்விட வேண்டும்."

"எனக்குப் பிடிக்கவில்லை!"

"ஏன் மன்னா?"

"போர், போர், போர்! கண்டும், கேட்டும், விழுப்புண்பலபட்டு அறிந்தும் சலித்துவிட்டது! யாரோ இரண்டு மன்னர்களது எண்ணப்படி எண்ணிக்கையற்ற மனிதர்களது உயிர்களை உதிரிப்பூக்களாக்கும் விளையாட்டு! களத்துமேட்டிலே செங்குருதி ஆறாகப்பெருகி ஓட, அந்த இரத்தத்தில் தொட்டு நம் நெற்றிக்கு திலகமிடுவது கொடுமையிலும் கொடுமை! மனித உடல்களை கழுகுகளுக்கு தீனியாக்கி விட்டு, மன்னர்கள் மட்டும் மாடமாளிகைகளில் கொலுவிருப்பதும், கொஞ்சும் சலங்கை ஒலிப்பெண்டிரோடு கூத்தடிப்பதும் என்ன முறைமை? வேண்டாம் என்கிறேன் இந்த இரத்த விளையாட்டு! போதும் என்கிறேன் இந்த பொல்லாத விளையாட்டு!"

மன்னன் நீண்ட உரையாக ஒரே மூச்சில் பேசிமுடித்தபோது தளபதி முகம் வாடியிருந்தது. அமைச்சர் அனுபவப் பட்டவர் என்பதால் அவர் முகத்தில் இருந்து அகத்தின் குறிப்பை அறிய முடியவில்லை.

"மன்னா! நாமாக வலியச் செல்லவில்லையே! தம் வலிவை நம்மீது காட்ட நினைப்பவர்களுக்கு பாடம் புகட்ட நினைக்கிறோம். தவறில்லையே மன்னா?!"

சோழ மன்னன் தனது தளபதியை புன்னகையால் வருடினான்.

"தேடிவந்து நம்மை சீண்டினால் திருப்பியடிப்பது தவறில்லை. வருத்தியடிப்பதும் தவறில்லை. நாமாக ஏன் தேடிச் செல்ல வேண்டும். தாமாக அவர்கள் வந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். எதற்கும் மூன்றுநாளில் முடிவு சொல்கிறேன். இப்போது நீங்கள் செல்லலாம்."

மன்னின் அந்தப்புர அழகு சுந்தரி புவனா பள்ளியறையில், மன்னன் மடியில் தலைவைத்துக்கொண்டு கேட்டாள்; "பாண்டிய நாட்டின்மீது போர் தொடுக்க மறுத்து விட்டீர்களாமே?"

"யார் சொன்னது?"

"யாரோ சொன்னார்கள், அதுவா முக்கியம்;. அறிந்தது உண்மையா? பதில் சொல்லுங்கள்!"

"ஆமாம், உண்மைதான்!"

"காரணம்?"

"அரச சபை இரகசியங்களை அந்தப்புரத்தில் அவிழ்த்துவிடக்கூடாது புவனா?"

"அந்தப்புரத்தில் பாவிக்கக்கூடாத வார்த்தையை நீங்கள் பாவித்துவிட்டீர்கள்!"

"என்ன வார்த்தை?"

"அவிழ்க்கக்கூடாது!"

மன்னன் சட்டென்று நகைத்தான்; "அடி கன்னி! என் வார்த்தையை வைத்தே என்னை வதைத்து விடாதே!

மடியில் கிடந்தவளின் மார்பில் மாங்கனிகளை மூடிக்கிடந்த மேலாடையை மன்னன் கரம் தொட்டு விலக்க, அங்கு பட்ட விழிகள் இமைக்கதவங்களை மூடமறந்தன.

மோகமுள்ளில் மன்னனின் மனம் பட்டுச்சேலையாய் விழுந்து போனது.

மன்னனின் கண்கள் காண அனுமதித்து விட்டு, கலசங்களை மீண்டும் மேலாடை எனும் திரையால் மறைத்தாள் புவனா.

பார்த்தது பாதி, பார்க்காதது மீதி என்ற கட்டத்தோடு திரைபோட்டால்தானே மன்னன் மகுடிக்கு அடங்கிய பாம்புபோல் பணிவான்.

"நமக்குள் எதற்கு திரை? பிரமன் படைத்த சந்தனச் சிலைக்கு, மனிதன் நெய்த சேலை எதற்கு? உன்னை நன்றாய் பிரமன் படைத்தனன், என் கண்கள் கண்டு களி கொள்ளுமாறே!"

"அரச இரகசியங்கள் இங்கே அவிழ மறுத்ததால், சரச காவியங்கள் இங்கே அரங்கேற்றப்படமாட்டா!"

"அப்படி வருகிறாயா நீ?"

"நாட்டின் ராணியா, இல்லையே. நாட்டிய மேனியை காட்டிப்பிழைக்க வந்தவள்தானே, சொந்தமாய் சேர்ந்தவளா, இல்லையே, சுகம் தர வந்தவள்தானே, என்றெல்லாம் நினைத்துத்தானே உங்கள் அரச இரகசியத்தையும், அந்தப்புர இரகசியத்தையும் இரண்டாகப் பிரித்துப் பார்க்கிறீர்கள்! என்னிடம் சொல்லக்கூட அஞ்சுகிறீர்கள்?"

"தவறு புவனா, தவறு! என் விழிகளால் நழுவி, மனதில் புகுந்து, என் நினைவில் நிரம்பி, என் நிழலாய் எங்கும் தொடரும் உருவே, கோல வடிவே, உன்கொவ்வை இதழில் ஐயம் கொண்டவார்த்தைகள் எதற்கு? நெருப்பும் சூடுமாய் நீயும் நானும் இருப்பது மெய்யடி!"

"அப்படியானால் ஏன் மறைத்தீர்கள்?"

"மறைத்தேனா? நானா? பாண்டியன் படைகள் கடலிலும் பெரிது! ஆயுத வலிமை அதனிலும் பெரிது. மலையிலும் வலிது! அதனால்தான் போரே வேண்டாம் போதும் என்றேன்! போரில் எந்தன் தேகம் அழிந்தால், புவனா உன்னை அணைப்பது எப்படி? பூவே உன்னைச் சுமப்பது எப்படி? புயலாய் உன்மேல் பாய்வது எப்படி? தேக சுகங்கள் ஒரு தொகை இருக்க, தோகை இளமயில் என் மடியினில் தவழ, தேகத்தை மாய்க்கும் போர் எனக்கெதற்கு?"

"ஆமாம் மன்னா, கம்பீர உருவே! படுகளம் சென்றால் இரத்தம்தான் விரயம், சாவுதான் முடிவு, பள்ளியறையில் இரு உடல் மோத விளைவது இன்பம். வெல்வது சொர்க்கம்! வாருங்கள் கோவே! பாருங்கள் சிலையை! கரங்கள் என்னும் உளியால் சிலையை செதுக்குதல் சுகமே!"

மன்னன் உடன்பட்டான். மங்கை மன்மத படையெடுப்பில் சிறைப்பட்டாள்.

பாண்டியபடைகள் சோழ நாட்டுக்குள் பாய்ந்தன.

பாண்டியன் தனது தளபதிக்கு சொன்னான்; "புவனா உளவறிந்து, சோழன் உணர்வறிந்து சொன்னது உண்மைதான். சோழன் ஒரு கோழை. எதிர்ப்பே இருக்காது. எகிறிப்பாயட்டும் நம் படைகள்".

அலட்சியமாக முன்னேறிய பாண்டிய படைகள் மீது திடீரென்று நாற்புறமும் இருந்து பாய்ந்தன வேல்கள், அம்புகள், தீக்கணைகள்.

பாண்டியன் நாற்புறமும் நோக்கினான். சோழன் விரித்த வலையில் வசமாக மாட்டிவிட்டோம் என்று மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டான் இனி மீட்சியே இல்லை.

பாண்டிய படைகள் சரணடைந்தன. பாண்டியன் தன் நாடும் பறிகொடுத்தான்.

சோழ மன்னன் தனது அரச சபையில் பாராட்டு மழையில் நனைந்து கொண்டிருந்தான்.

"மன்னா! புவனா எதிரியின் கைப்பாவையாக வந்தாள். அவளை உங்கள் கைப்பாவைபோல ஆட்டுவித்தீர்கள்! புவனா ஏமாந்தாள். பாண்டியனும் ஏமாந்தான்."

அமைச்சர் புகழ மன்னன் அமைதியாகச் சொன்னான்;

"எல்லோரும் கேளுங்கள் உங்கள் எல்லாப் புகழ்ச்சியும் போய் சேர வேண்டியது திருவள்ளுவருக்கே!"

"எப்படி?" சபை கேட்டது.

"எப்போது எதைச் செய்ய வேண்டும் என்ற வகையறிந்து, நம் வலிமையைப் பெருக்கி, நம் தற்காப்பை தேடிக்கொண்டால் போதும், அதுவே பகைவரின் செருக்கை அழித்துவிடும். எதிரியை நோக்கித் துள்ளிக்குதிப்பதைவிட, நம் வலிமையை பெருக்கிக்கொள்வதுதான் முக்கியம். வெற்றிக்கு முதலடி"

சபை பிரமித்தது.

**"வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும் பகைவர்கண் பட்ட செருக்கு"**

குறள்-878, அதிகாரம்-88

இலக்கிய நயம் — துருவது ரசிகன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல—141

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | |
| ■ | | ■ | 4 | | | |
| 5 | | ■ | 6 | | | ■ |
| | | ■ | 7 | | | 8 |
| | ■ | 9 | | | ■ | |
| 10 | | | ■ | ■ | ■ | |
| | ■ | 11 | | | | |

### இடமிருந்து வலம்

01. தசரதனின் மனைவி இவள்.
03. இது நம்மோடு கூட வரும். ஆனால் வெளிச்சம் உள்ளபோது மட்டும்.
04. சில விலங்குகள் மட்டுமல்ல மனிதர்களும் இப்படியானவர்கள் தான்.
06. நமது குடும்பத்தில் பிரதானமான ஒருவர்.
07. இது தீயை விட வேகமாகப் பரவிவிடும்.
08. எமது அண்டை நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்று.
10. மகாபாரதத்தில் வரும் வீமன் வைத்திருப்பது.
11. தமது பிள்ளைகள் இதாக வரவேண்டும் என்பதே பெற்றாரின் விருப்பம்.

### மேலிருந்து கீழ்

02. பண்டைய படைக்கலங்களில் இதுவும் அடங்கும்.
03. போட்டிகளில் கலந்து கொள்ளும் போது நடுவர் சொல்லும் இவைகளையும் கேட்க வேண்டும்.
05. புகைமிரத வண்டிக்கு முன்பு எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டது.
08. சிலருக்கு எதிலும் இது ஏற்படுவதில்லை.
09. உலோகத்துக்கும் பாத்திரத்துக்கும் ஒரே பெயர்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 02.03.1996இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-141
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-139ற்கான சரியான விடைகள்:


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | ந் | 2 தை | ■ | 3 கூ | த | ல் |
| த் | ■ | 4 ய | தே | ச் | சை | ■ |
| தி | 5 வா | ல் | ■ | ச | ■ | 6 கே |
| ர | க் | ■ | 7 க | ம் | 8 ப் | ளி |
| ம் | 9 கு | வ | ளை | ■ | ர | க் |
| ■ | று | ■ | ப் | ■ | த | கை |
| 10 ம | தி | ப் | பு | ■ | ம் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 139இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எல்.ஜெயசீலன், மொரட்டுவ.
2. யூ.எல்.வாஹிட், களுத்துறை.
3. செல்வி. சக்கீலா வஹாப்தீன், கல்பிட்டி.
4. கே.வனிதா, கந்தப்பளை.
5. வி.துரைராசா, கொழும்பு-6
6. திருமதி.எம்.கிருஷ்ணவேணி, பெரியபோரதீவு.
7. முஹம்மட் பஸ்லி, பெரியமுல்லை.
8. ஏ.எம்.ஜெஸீமா, மூதூர்.
9. எஸ்.சுவர்ணமாலா, மஸ்கெலியா.
10. கே.சிவகுமாரன், வத்தளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## 1992 உலகக் கிண்ணப் போட்டியில் அசத்தியவர்கள்



### துடுப்பாட்டம்

| பெயர் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|
| 1. மார்டின் குரோ (நியூஸிலாந்து) | 456 - | 114.00 |
| 2. ஜாவிட் மியான்டாட் (பாகிஸ்தான்) | 437 - | 62.43 |
| 3. பீற்றர் கேஸ்ரன் (தென்னாபிரிக்கா) | 410 - | 68.34 |
| 4. டேவிட் பூன் (அவுஸ்திரேலியா) | 368 - | 52.53 |
| 5. பிறைன் லாரா (மே.இ.தீவுகள்) | 333 - | 47.58 |
| 6. மொகமட் அஸாருதீன் (இந்தியா) | 332 - | 47.41 |
| 7. அமீர் சொகைல் (பாகிஸ்தான்) | 326 - | 32.60 |
| 8. அன்ரு ஜோன்ஸ் (நியூஸிலாந்து) | 322 - | 46.00 |



### பந்து வீச்சு

| பெயர் | | வீழ்த்திய விக்கெட்டுக்கள் |
|---|---|---|
| 1. வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்) | - | 18 விக்கெட்டுக்கள் |
| 2. கிறிஸ் ஹரிஸ் (நியூஸிலாந்து) | - | 16 விக்கெட்டுக்கள் |
| 3. முஸ்டாக் அஹமட் (பாகிஸ்தான்) | - | 16 விக்கெட்டுக்கள் |
| 4. இயன் பொத்தம் (இங்கிலாந்து) | - | 15 விக்கெட்டுக்கள் |
| 5. எடி பிறாண்டஸ் (ஸிம்பாவே) | - | 14 விக்கெட்டுக்கள் |
| 6. அலென் டொனால்ட் (தென்னாபிரிக்கா) | - | 13 விக்கெட்டுக்கள் |
| 7. விலி வோற்சன் (நியூஸிலாந்து) | - | 12 விக்கெட்டுக்கள் |
| 8. மனோஜ் பிரபாகர் (இந்தியா) | - | 12 விக்கெட்டுக்கள் |
| 9. அன்டர்சன் கம்மின்ஸ் (மே.இ. தீவுகள்) | - | 12 விக்கெட்டுக்கள் |

## பாகிஸ்தான் அணி நிலவரம்

தற்போது நடந்து வரும் உலகக் கோப்பைப் போட்டிக்கு முன்னர் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடிய போட்டிகளின் துடுப்பாட்ட, பந்துவீச்சு விபரங்கள்.

சிந்தியா பதில்கள் அடுத்த வாரம் வழமைபோல

| | துடுப்பாட்டம் | | | | | | | | பந்துவீச்சு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீரர் | போட்டிகள் | இனிங்ஸ் | அவுட்டில்லை | ஓட்டங்கள் | அதிகூடிய | 100 | 50 | 0 | பந்துகள் | மெய்டன் | ஓட்டங்கள் | விக்கெட் | 5விக் | சிறந்த |
| அமீர் சொஹைல் | 85 | 84 | 1 | 2682 | 134 | 3 | 17 | 4 | 2869 | 9 | 2078 | 59 | 0 | 4/22 |
| அக்கிப் ஜாவெட் | 121 | 36 | 22 | 144 | 21 | 0 | 0 | 5 | 6111 | 76 | 4162 | 134 | 2 | 7/37 |
| அத்தா-உர்-ரகுமான் | 25 | 9 | 5 | 27 | 11 * | 0 | 0 | 1 | 1295 | 7 | 980 | 21 | 0 | 3/32 |
| இஜாஸ் அகமட் | 121 | 107 | 17 | 2391 | 124* | 4 | 10 | 3 | 378 | 1 | 272 | 3 | 0 | 2/31 |
| இன்சமாம்-உல்-ஹக் | 96 | 93 | 13 | 3306 | 137* | 4 | 24 | 4 | 34 | 0 | 42 | 2 | 0 | 1/4 |
| ஜாவெட் மியான்டாட் | 228 | 215 | 41 | 7327 | 119* | 8 | 50 | 8 | 436 | 3 | 297 | 7 | 0 | 2/22 |
| முஸ்டாக் அகமட் | 90 | 47 | 18 | 263 | 26 | 0 | 0 | 5 | 4521 | 38 | 3294 | 99 | 0 | 3/14 |
| ரமீஸ் ராஜா | 170 | 169 | 13 | 5257 | 119* | 9 | 29 | 12 | 6 | 0 | 10 | 0 | 0 | 0/10 |
| ரஷீட் லத்தீவ் | 70 | 48 | 14 | 518 | 39 | 0 | 0 | 5 | - | - | - | - | - | - |
| சையட் அன்வர் | 82 | 81 | 6 | 2540 | 131 | 8 | 7 | 6 | 150. | 1 | 130 | 3 | 0 | 1/9 |
| சலீம் மாலிக் | 214 | 194 | 28 | 5442 | 102 | 5 | 35 | 14 | 2216 | 8 | 1808 | 55 | 1 | 5/35 |
| சக்லெய்ன் முஸ்டாக் | 5 | 2 | 0 | 30 | 30 | 0 | 0 | 1 | 239 | 3 | 173 | 8 | 0 | 4/47 |
| வக்கார் யூனூஸ் | 112 | 52 | 17 | 335 | 37 | 0 | 0 | 9 | 5562 | 67 | 4118 | 187 | 7 | 6/26 |
| வாசிம் அக்ரம் | 193 | 148 | 28 | 1746 | 86 | 0 | 2 | 18 | 10,018 | 125 | 6280 | 282 | 5 | 5/15 |


படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 21

# குடி மக்களை ஏமாற்றிய கோதண்டராமன்

'இராமன், நான் 'சத்தியம் தவறாத சக்கரவர்த்தி' என்ற பெயருடன் நிலைத்திருக்க வேண்டும் என்ற அவாவினால் தனது உரிமையையும் துறந்து துறவி போல் கானகம் போகிறானே!' என்ற ஏக்கம் தசரத மன்னருடைய உள்ளத்தையும் உடலையும் ஊடுருவி அவருடைய உயிரையே ஊசலாடச் செய்தது. கோசலையின் அந்தப்புரத்துக்கு தன்னை அழைத்துச் செல்லுமாறு கேட்டார். கோசலை சுமத்திரையுடன் கைகேயியும் அவரைத் தாங்கச் சென்றாள். முழுமையான உணர்வின்றி இருந்த போதும் கைகேயியின் கரம் அவர் உடலைத் தொட்டதும் தீயால் சுடப்பட்டவர் போன்று துடித்து, ஆவேசம் வந்தவர் போல் கத்தினார்.

"அடியே கைகேயி! என் உடலைத் தீண்டவோ என் கண்ணில் உன் உருவம் படவோ வேண்டாம். நீ என் மனைவி என்ற தகுதியை இழந்து விட்டாய். என் மகனின் பட்டாபிஷேகத்துக்காகக் கொண்டு வரப்பட்ட புண்ணிய நதிகளின் தீர்த்தங்கள் என்னுடைய இறுதிக்கிரியைகளுக்கே பயன்படுத்துவதற் கேற்றவையாக உன் செயலால் காட்டி விட்டாய். உன் மகனும் எனது இறுதிக்கிரியை களைச் செய்யும் அருகதையற்றவனாகி விட்டான். என் அருகில் கூட வர வேண்டாம்; போய்விடு!"

இவ்வாறு கைகேயியைத் துரத்தினார். கோசலையின் அந்தப்புரத்தில் படுக்கையில் கிடத்தப்பட்டதும் மீண்டும் தசரதர் மூர்ச்சையானார். கண் விழித்ததும் "இராமா....இராமா" என்று அவருடைய வாய் புலம்பிக் கொண்டே இருந்தது.



## கவலைக் கடலின் கதிரவன் மறைந்தான்

இதே கால கட்டத்தில் அயோத்தி மாநகர மக்கள் கடல் போல சூழ்ந்து வர- இராமர், சீதை, இலக்குவன் ஆகியோருடன் தேர் நகர்ந்தது. தேரோட்டும் திறமை பெற்றவரான அமைச்சர் சுமந்திரர் தேரைச் செலுத்திக் கொண்டு சென்றார். தன் குலத் தோன்றலான இராமச்சந்திரன், முடி சூடி மேன்மையான ஆட்சி செலுத்துவதை விடுத்து வெங்கானம் செல்கிறானே என்ற வேதனை தாங்காத வெங்கதிரோன் மேற்குவான் விளிம்பிலிருந்து எட்டிப் பார்த்து விட்டு கடலுள் தன்னை மறைத்துக் கொண்டான்.

அப்போது அவர்கள் தமஸா நதிக் கரையை அடைந்திருந்தனர். தம்பி இலக்குவனைப் பார்த்து இராமர், "தம்பி! இன்று நமது வனவாசத்தின் முதல் நாள். இந்நதிக் கரையிலே தங்கி நாளை உதயத்தின்போது புறப்படுவோம். புதியதோர் வாழ்க்கை முறையினை ஏற்கும் நாம் இந்நதியில் நீராடி, உணவெதுவும் உண்ணாது உபவாசம் இருக்க வேண்டும். நம்முடன் வந்திருக்கும் மக்களுக்கு, அமைச்சர் சுமந்திரருடன் சென்று இரவு உணவுக்காக ஏற்பாடு செய்து கொடுப்பாயாக," என்றார்.

இதனைக் காது கொடுத்துக் கேட்டிருந்த சிலர், இராமரும் சீதையும் இலக்குவனும் உபவாசம் இருக்கப் போவதை அங்கிருந்த சகலரிடமும் பரப்பிவிட்டனர். அவர்களில் சிலர் இலக்குவனையும் அமைச்சர் சுமந்திரரையும் அணுகி, "இளவரசர் இராமர் உணவு உட்கொள்ளவில்லையானால் நாங்கள் எவரும் தண்ணீர் கூட அருந்த மாட்டோம்" என்று ஒரு குரலில் கூறிவிட்டனர். இதனைக் கேள்வியுற்றதும் இராமச்சந்திரர் உளம் நெகிழ்ந்தார். தமஸா நதியில் நீராடியபின் மாலை பிரார்த்தனையை முடித்து விட்டு, சீதையால் பின்னப்பட்ட புல்லணையில் படுத்து கண்களை மூடிக் கொண்டார்.

அவரைப் போல் சீதையும் கண்களை மூடிக் கொண்டாள். தன் வில்லினை நிலத்தில் ஊன்றிய வண்ணம் அதனில் தன் உடலை அணைத்தபடி கண்களை மூடாமல் காவல் காத்து இலக்குவன் நின்றான். மக்களும் களைப்பும்-கவலையும் மேலிட்டவர்களாக அந்த நதிக் கரையில்- பசும் புற்றரையில் படுத்துறங்கலானார்கள்.

சுமந்திரர் தேரில் பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து நீராட்டி, அவை உண்பதற்காக் கொண்டு வந்திருந்த கொள்ளு போன்ற தானியங்களைக் கொடுத்தார். அவையும் எதனையும் உட்கொள்ள மறுத்துவிட்டன. இதனால் சுமந்திரரும் எதனையும் உட்கொள்ளாமல் தேர்ச் சக்கரத்தில் தன் முதுகினைச் சாய்த்தவாறு கண்களை மூடிக் கொண்டிருந்தார்.

இராமர் கண்களை மூடியிருந்தபோதும் உறக்கம் அவரைத் தழுவவில்லை. தம்மோடு வந்திருக்கும் குடிமக்களை எப்படியாவது அயோத்திக்குத் திருப்பி அனுப்பியேயாக வேண்டும் என்று முடிவுகட்டியிருந்தார். அன்றையப் பயணத்தின் போது வாய்ப்புக் கிடைத்த போதிலெல்லாம், மக்களைத் திரும்பிப் போகுமாறு எவ்வளவோ வேண்டிக் கொண்டார். தன்தம்பி பரதன் ஆட்சி புரிய சகல தகுதிகளும் உள்ளவன், சிறந்த அறிவாளி, மக்கள் நலனில் தன்னை விடவும் பன்மடங்கு அக்கறை காட்டக்கூடியவன், என்றெல்லாம் எவ்வளவோ எடுத்துரைத்தார். ஆனால் அவர்களோ, "இராமச்சந்திர மூர்த்தி இல்லாத இடம் எங்களுக்கு இடுகாடு" என்று கூறி திரும்பிச் செல்ல மறுத்து விட்டனர்.

இத்தகைய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அமைச்சர் சுமந்திரரும், "மக்களுக்காகவேனும் நீங்கள் நாடு திரும்பத்தான் வேண்டும்," என்று கண்ணீர் மல்க மன்றாடினார். ஆனால் இராமரிடம் எதுவும் எடுபடவில்லை.

நள்ளிரவு கழிந்து சில நாழிகைகளான பின்னர் சுமந்திரரின் தோள் தொட்டு இராமர் அவரை எழுப்பினார். இருவரும் எதுவித அரவமுமின்றி மக்கள் படுத்திருந்த இடத்தை விட்டு அப்பால் சென்று நதிக்கரையில் நின்றனர். அப்போது இராமர் "அமைச்சர் அவர்களே! இந்த மக்களை ஏமாற்றும் நிலையில் தான் நானிருக்கிறேன். அவர்களை எப்படியும் நாடு திரும்ப வைக்க வேண்டும். தாங்கள் உடனடியாக இரதத்தை இங்கிருந்து அயோத்தி நோக்கித் திருப்பிச் செலுத்திக் கொண்டு போய் விடுங்கள். நாங்கள் மூவரும் நதியைக் கடந்து கானகம் புகுந்துவிடுகிறோம். காலையில் கண் விழித்ததும் மக்கள் எங்களைக் காணாது தவிப்பார்கள். தேரின் தடத்தைப் பார்த்து நாங்கள் அயோத்தி திரும்பிவிட்டதாக எண்ணி மகிழ்ந்து நாடு

இராஜகுமாரி

திரும்பி விடுவார்கள்," என்று கூறினார். சுமந்திரர் உடனடியாக இதற்கு இணங்கிவிடவில்லை.

"மக்களை ஏமாற்றுவது மன்னன் மகனுக்கு அழகல்ல" என்றார், அதுமட்டுமல்லாமல், இராமர் செல்லுமிடம்தான் தனக்கும் ஏற்ற இடம் என்றும் கானகத்துக்கு தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு, இராமச்சந்திரரின் காலில் விழுந்து புரண்டு அழுதார்.

## ஆபத்துக்குப் பாபமில்லை

இராமர் பலவகையில் ஆறுதல் கூறினார். "ஆபத்துக்குப் பாபமில்லை. மக்களுக்காகவே மக்களை ஏமாற்ற வேண்டிய நிலையிலுள்ளேன். கானகத்தில் தவ வாழ்க்கை மேற்கொள்ளச் செல்லும் ஒருவன் தன் மனைவியையும் தம்பியையும் உடன் அழைத்துச் செல்வதே பொருந்தாது. இருப்பினும் அவர்களை அழைத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கேற்பட்டுள்ளது. இது தவிர்க்க முடியாதது. அமைச்சரையும் அழைத்துச் செல்வது அடாத செயலாகும். அத்துடன் இராச்சிய பரிபாலனத்துக்கு தங்களின் பணி இன்றியமையாதது. சக்கரவர்த்தியுடன் இருந்து உதவுங்கள். தம்பி பரதன் வந்து பட்டம் சூட்டும் தருணத்தில் முதன் மந்திரியாகிய தாங்கள் முன்னின்று காரியங்களைக் கவனிக்க வேண்டுமல்லவா? நாங்கள் எக்குறையும் எக்கவலையுமின்றி கானகம் ஏகுவதாக அப்பாவிடமும் அன்னையர் மூவரிடமும் கூறுங்கள். தம்பி பரதனுக்கும் எனது நல்லாசிகளை வழங்குங்கள். சென்று வாருங்கள்" இவ்வாறு கூறி அதே இடத்துக்கு சீதையையும் இலக்குவனையும் அழைத்து வந்து சுமந்திரருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு மூவரும் தமஸா நதியைக் கடந்து தங்கள் பயணத்தை மேற்கொண்டனர்.

★ ★ ★

இராமச்சந்திரர் சீதாப்பிராட்டியாருடனும் இளைய பெருமாளான இலக்குவனுடனும் கானகம் புகும் காட்சியை கம்ப நாட்டாழ்வார் வர்ணிக்கும் முறையைப் பார்ப்போம்:

தையல்தன் … தன் தகவும் தம்பியும்,
மை அறு க … , உணர்வும் வாய்மையும்
செய்ய தன் வல்லுமே சேமமாகக் கொண்டு,
ஐயனும் போயினான் அல்லின் நாப்பணே.
(அயோத்தியா காண்டம்- 571)

இதன் பொருள்:

சீதையின் கற்பும் தம்பி இலக்குவனும் தன்னுடைய தகமையுடன் கூடிய நடுவு நிலமை தவறாத் தன்மையும் குறைவேயில்லாத கருணையும் மேலான அறிவாற்றலும் சத்தியம் தவறாமையும் தன்னுடைய வில்லும் துணையாக வர, அந்த நள்ளிரவிலே இராமன் கானகம் புகுந்தான்.

★ ★ ★

தமஸா நதிக்கரையில் நல்ல தூக்கத்திலாழ்ந்திருந்த மக்களனைவரும் சூரியன் உதித்தெழுவதற்கு முன்னர், அப்பிரதேசத்தில் புள்ளினங்களின் ஒலி கேட்டெழுந்தனர். எழுந்ததும் இராமர் ஓய்வெடுத்திருந்த மரத் தடியில் புல்லணை சுருட்டி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். இராமரைக் காணவில்லை. அவரருகே படுத்திருந்த சீதையையும் காணவில்லை. இவ்விருவர் அருகில் வில்லை ஊன்றியபடி காவலுக்கு நின்றிருந்த இலக்குவனையும் காணவில்லை. எதிர்ப் புறத்தே நின்றிருந்த இரதத்தையோ, அதனருகே அமர்ந்திருந்த அமைச்சர் சுமந்திரரையோ காணவில்லை. ஒரு கணம் திகைப்புடன் தயங்கிய மக்கள், இரதத்தின் சில்லுகளின் தடத்தைக் கண்டதும் ஆனந்தக் களிப்பில் துள்ளிக் குதிக்கலானார்கள். 'இராமர் அயோத்தி திரும்பிவிட்டார்,' என்றே எல்லோரும் ஏகோபித்த முடிவெடுத்து எல்லோருமாக- ஓட்டமும் நடையுமாக அயோத்தி நோக்கிப் புறப்பட்டனர்.

★ ★ ★

இராமன் பிரிந்து சென்றபோதே பாதியுயிரைப் பறி கொடுத்தவராக தசரத மன்னர், அறிவு மயங்கிய நிலையில் கிடந்தார். அப்போது "சுமந்திரர் வந்துவிட்டார்" என்று யாரோ கூறிய வார்த்தை அவருடைய காதுகளில் புகுந்ததும் அவருடைய கண்களும் அகலவிரிந்தன. சுமந்திரர் மன்னவர் முன்னே வந்து நின்றார். "என் இராமன் வந்துவிட்டானா?" என்று ஆவல் பொங்கக் கேட்டார். கண்கள் நீர் சொரிய சுமந்திரர்: "எத்தனையோ தடவை மன்றாடிக் கேட்டேன். வரமறுத்து வனம் புகுந்து விட்டார் பிரபு!" என்று கூறி முடிக்கு முன்னர் தசரதச் சக்கரவர்த்தியின் ஆவியும் பிரிந்தது.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 19

சரியானவிடை:- கோசலை

1. பாத்திமா பறீக்கா. 28/8, மகாவித்தியால மாவத்த, கொழும்பு-13.
2. கா. சுபாஷ். திருவள்ளுவர்புரம், தரவலை(ப.க)-டிக்கோயா.
3. ஆர். தர்மராஜ். 122, நியு டவுன், திகன, ராஜவெல.
4. க. தனலெச்சுமி. 362, அன்புவழிபுரம், திருகோணமலை.
5. எல். அசோதினி. 143,உமா ஆலை வீதி, கொம்மாதுறை-செங்கலடி.

போட்டி இல. 21 கேள்வி:- வனவாசம் புகும் இராம, இலக்குவன், சீதை முதல் நாள் தங்கிய நதிக்கரை யாது?

மார்ச்.02க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:
இராமாயணப் போட்டி–இல.20, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.

# கவுண்டமணி–செந்தில் கல கல சந்திப்பு

செ: அண்ணே, அண்ணே.

கவு:- என்னடா பனங்கொட்டைத் தலையா?

செ:- ஒரு யோசனை அண்ணே.

கவு:- யோசனை சொல்லுற மூஞ்சியைப் பாரு.

செ:- அண்ணே, நல்ல மூஞ்சியைப் பாத்து ஒட்டுப் போட்டுத்தாணண்ணே இந்தப்பாடு படுறீங்க. அகத்தின் அழகு முகத்தில தெரியாதண்ணே. யாரையண்ணே தேடுறீங்க.

கவு:- இந்த ஒப்பற்ற தத்துவத்தை நீதான் சொன்னியா, அல்லது உனக்கு பின்னாடியிருந்து வேற யாராவது சொன்னாங்களா என்று பார்க்கிறன்டா.

செ:- ஹி ஹி ஹி. பின்னால் இருந்தெல்லாம் என்னை ஆட்டுவிக்க முடியாதண்ணே.




கவு:- முன்னாலே இருந்துதான் ஆட்டுவிக்கலாம் என்கிறியா? ஏன்டா தேங்காய் தலையா உதை வாங்குறதுக்கெண்ணே வந்தியா? (உதைக்கிறார்)

செ:- அண்ணே அடிக்காதீங்கண்ணே... அண்ணே அடியுங்கண்ணே.

கவு:- ஏன்டா மூஞ்சூறு வாயா, முதலை மாதிரி இருக்கியே, முழுசா திரும்பிப் போற உத்தேசமேயில்லையா?

செ:- அதில்லையண்ணே.

கவு:- எதில்லையெங்கறே நீ

செ:- அடிக்கிற கைதானண்ணே அணைக்கும். காய்க்கிற மரம்தாணண்ணே. கல்லெறி படும். பூக்குற பூதானண்ணே கண்ணடி படும்.

கவு:- (தன்னைக் கிள்ளிப்பார்க்கிறார்)

செ:- அண்ணே, கடிக்குதாண்ணே?

கவு:- ஏண்டா நாயே நீ கடிச்சியா?

செ:- இல்லையண்ணே.

கவு:- உன்னைக் கண்டா வேற நாயே இங்கே வராதடா சட்டித் தலையா?

கவு:- அண்ணே, கேலி பண்ணாதேங்க அண்ணே. நானும் ஒருநாள் சீப்பு மினிஸ்டரா வந்துடுவேணண்ணே.

கவு:- அடே, அறிவுக் கொழுந்து, அது சீப்பு மினிஸ்டர் இல்லையடா சீ:ப் மினிஸ்டர். அப்படியண்ணா என்னா அர்த்தம் தெரியுமாடா. முதலமைச்சர்.

செ:- தெரியுமண்ணே. அய்யோ அடிக் காதீங்க அண்ணே.

கவு:- நீதானே சொன்னே, அடியுங்கண்ணே என்னியே!

செ:- எப்பண்ணே சொன்னேன்.

கவு:- அப்படிப் போடு. அடே எகுமைத் தோலா. அரசியல் வாதியாகணும் என்று நீ ஆசைப்படதில தப்பேயில்லடா. நான் சொல்றேன் கேட்டுக்க, நீ பெரியாளா வருவே!

செ:- அண்ணே! உண்மையாத்தான் சொல்லுறீங்காண்ணே?

கவு:- ஆமாடா! ஆமா! முன்னாடி சொல்லிப்புட்டு தடாலெண்ணு மறுத்தாய் பாரு, அப்பவே தெரிஞ்சு போச்சு. அரசியல்வாதியாகற தகுதி வந்தாச்சு.

செ:- அவரும் அப்படித்தானண்ணே சொன்னாரு

கவு:- எவருடா?

செ:- ஜோசியரு. சர்வானந்தா சுவாமிகள்.

கவு:- பாம்பின் கால் பாம்பறியுமடா பரதேசி. நீயே ஒரு திருடன். இன்னொரு திருடனையும் கண்டு பிடிச்சே பாரு. மவனே, நீ எங்கேயோ போய் நிக்கப்போறே!

செ:- வையாதீங்கண்ணே! சுவாமிகள் ரொம்ப பெரிய ஆளு.

கவு:- ஏன்டா கழுதை, சுவாமிகளுக்கு சிஷ்யைகள் இருக்கிறாங்களாடா?

செ:- இருக்காங்கண்ணே! சிவப்பு சிவப்பா, தக்காளி மாதிரி, தார்பூசணி மாதிரியெல்லாம் இருக்காங்கண்ணே.

கவு:- வேற என்னவெல்லாம் பார்த்தே?

செ:- வேற ஒண்ணும் தெரியலயண்ணே.

கவு:- அதையெல்லாம் சுவாமி பார்த்துக்குவாரடா, நீ பார்க்காதே என்ன? வீட்டிலே உள்ள வங்கெல்லாம் எழுந்து, காரியம் கெட்டுடுமேயடா. காதோடு காதா சொல்லி கூப்பிடுற விஷயமடா இது.. முண்டம்.

செ:- அப்படித்தாணண்ணே பாடுறாங்க. என்ன நினைப்பிலே பாட்டெழுதுறாங்க எண்ணு தெரியயேல்லயண்ணே!"

கவு:- அவங்க நினைக்கிறதிருக்கட்டும், நம்மைப்பற்றி என்ன நினைச்சிக்கிட்டு எழுதறாங்க எண்ணு தான் தெரியேல்லே.

செ:- அய்யோ.. அய்யோ.. அய் யய்யோ...

கவு:- என்னடா.. என்னடா.. ஆச்சு. சொல்லி தொலையேண்டா.

செ:- அது பாட்டண்ணே.

கவு:- ஏன்டா பரதேசி நாயே! இதெல்லாம் ஒரு பாட்டாடா?

செ:- எப்படி? எப்படி? சமைஞ்சது எப்படி? சக்கரவள்ளிக் கிழங்கு சமைஞ்சது எப்படி?

கவு:- அடடே அடடே, அதைச் சொல்ல தெரிந்தெடுத்திருக்கான் பாரடா ஒரு கிழங்கு. எங்கயோ போய்ட்டான்.

செ:- கதவைச் சாத்து கதவைச் சாத்து மாமா!

கவு:- ஏன், அவளோ சட்டுப்புட்டென்று சாத்த வேண்டியதுதானேயடா. அந்த நேரத்தில போய் கோரிக்கை விட்டுக்கிட்டு...

செ:- அண்ணே உங்களுக்கு புதுப்பாட்டே பிடிக்காதுண்ணு தெரியுதண்ணே. வேண்டாண்ணே, நான் பாடேல்லயண்ணே.

கவு:- யப்பா, தப்பிச்சேன்.

செ:- அண்ணே எனக்கொரு சந்தேகம்?

கவு:- என்னடா. எதுவாயிருந்தாலும் கேளு.

செ:- பழைய படங்கள்ள எப்படியண்ணே 40 பாட்டு 50 பாட்டு போட முடிஞ்சது?

கவு:- அதுவா? சொல்றேன் கேட்டுக்க. கதாநாயகன் பிறப்பாரு, அதுக்கு ஒரு பாட்டு. கதாநாயகன் வளர்வாரு, அதுக்கு ஒரு பாட்டு. கதாநாயகன் காதலிப்பாரு. அதுக்கு ஒருபாட்டு. அவருக்கு தனியா ஒரு பாட்டு. கதாநாயகிக்கு தனியா ஒருபாட்டு. அதிலே மொத்தம் மூணு பாட்டு. லவ்வு பிரேக் ஆயிடும். அவன் தனியா ஒரு சோகப்பாட்டு. அவ தனியா ஒரு சோகப்பாட்டு. சோகத்தை தாங்க மாட்டாம விஷப் புட்டியை கையிலை எடுப்பாரு. கையிலை வைச்சுட்டே இரண்டு பாட்டு பாடுவாரு. அச்சா. விஷத்தை குடிச்சிட்டு வாயில நுரை தள்ளிக் கொண்டு ஒரு பாட்டு. செத்திருவாரு. யப்பா தப்பிச்சோம் எண்டு நினைப்பம், செத்து ஆவியா வந்து இஞ்சு பாட்டு படிச்சிடுவாரு.

செ:- அண்ணே!

கவு:- என்னடா?

செ:- இப்ப புரிஞ்சுதண்ணே. 50 பாட்டு எப்படி தேறிச்சுண்டு! ரொம்ப தாங்ஸ் அண்ணே.

கவு:- ஏன்டா?

செ:- பொதுக்கூட்டமொண்ணு இருக்கண்ணே. நீங்க சொன்னதை எடுத்து விட்டா சனங்க சிரிப்பாங்க. கைதட்டுவாங்க. நான் வளர்ந்திடுவேன்.

கவு:- ஏன்டா நாயே! இங்க வா பன்றிக் கழுதை.. அடே நில்லடா.

(கவுண்டமணியிடம் பிடிபடாமல் செந்தில் ஓடிக்கொண்டிருக்கிறார்.)



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# அமைதிப்படை தளபதிகள்

1992இல் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்ற 5வது உலகக்கிண்ணப் போட்டியில் கலந்து கொண்ட 9 அணிகளின் தலைவர்கள்.

டேவ் ஹொட்டன் (சிம்பாப்வே), கெப்ளர் வெசல்ஸ் (தென். ஆபிரிக்கா), முகமட் அசாருதீன் (இந்தியா), றிச்சி றிச்சட்சன் (மேற்கிந்தியத் தீவுகள்), அரவிந்த டி சில்வா (இலங்கை), மாட்டின் குரோ (நியூசிலாந்து), அலன் போர்டர் (அவுஸ்திரேலியா), கிரஹாம் கூச் (இங்கிலாந்து), இம்ரான் கான் (பாகிஸ்தான்).

விளையாட்டுக்கள் நாடுகளுக்குள் நட்புறவை பத்திரப்படுத்தவும், அமைதியை நிலை நிறுத்தவும் நடத்தப்படுபவை. துரதிஸ்டவசமாக நாடுகளின் இடையே உள்ள கசப்புக்களும் போட்டிகளில் பிரதிபலிப்பது உண்டு. உதாரணமாக இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகள் இரு நாடுகளுக்கும் இடையில் அமைதியாக நடக்கும் போர் மாதிரித்தான். அணிகள் என்ன நினைக்கிறதோ தெரியவில்லை. ரசிகர்கள் அப்படித்தான் நினைக்கிறார்கள். ▫▫▫



அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# இப்படியும் முடியுமா?



படத்தில் இருப்பவர் பெயர் முஹமட்-இர்ஸாதுல்லா ஹமிடி. இவரது படமும், பெயரும் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் வந்துள்ளன. காரணம்- அவர் செய்துள்ள சாதனை.

முதலில் ஒரு நாணயத்தை நிலைக்குத்தாக நிறுத்தி (கண்ணாடி மேசை என்பதால் இரண்டு நாணயங்கள் போல தெரிகிறது). அதன்மேல் 870 நாணயங்களை கிடைநிலையாக வைப்பார். ஒரு நாணயம் கூட சரிந்து விழாது. நீண்ட முயற்சியால் படைக்கப் பட்ட உலக சாதனை. சுலபம் என்று நினைப்பவர்கள் முயன்று பாருங்கள். அப்போது தெரியும் முஹமட்டின் அருமை, பெருமை.




# சாதிக்க ஆசை

92ம் ஆண்டு உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டவர் வாசிம் அக்ரம். இம்முறை பாகிஸ்தான் அணியின் கப்டன். வெற்றிகரமான கப்டனாவாரா?



பாகிஸ்தான் அணிக்குள் ஓரளவு உட்பூசல்கள் தணிந்தது போலத்தான் தெரிகிறது. வாசிம் அக்ரம் மீண்டும் கப்டனாகியிருக்கிறார். இம்ரான் கானுக்கு பின்னர் பாகிஸ்தான் அணியிலுள்ள சகல துறை ஆட்டக்காரர் வாசிம் அக்ரம். ஒரு நாள் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய உலக சாதனையாளர். இம் முறை நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னர் வாசிம் ஒரு நாள் போட்டிகளில் சரித்த விக்கெட்டுக்கள் 282.

96 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னரான வாசிம் அக்ரமின் சாதனைப்பட்டியல் இது:

193 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருக்கிறார். ஒரே ஆட்டத்தில் 5 விக்கெட்டுக்களை 5 தடவை சரித்துள்ளதுதான் அவரது பந்துவீச்சில் சிறப்புச் சாதனை. அவரது சிறந்த பந்து வீச்சு 5/15. ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 148 இன்னிங்ஸில் துடுப்பெடுத்து ஆடி சேகரித்த ஓட்டங்கள் 1746. 28 தடவை அவுட்டாகாமல் திரும்பியிருக்கிறார். உயர்ந்த பட்ச ரன்குவிப்பு -86. இரண்டு தடவை அரை சதம் போட்டிருக்கிறார். 193 போட்டிகளில் பந்து வீசிய அக்ரம், 125 தடவை ஓட்டம் எதனையும் கொடுக்காத ஓவர்களை வீசியுள்ளார். இம்முறை உலகக் கிண்ணத்தின் பின்னர் வாசிம் அக்ரமின் பட்டியல் மேலும் மெருகேறும்.

1975முதல் 1992 வரை ஐந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை 26 ஆட்டங்களில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது. அதில் 4 போட்டிகளில் வெற்றி. 20 இல் தோல்வி. இரண்டு ஆட்டங்கள் இரத்தாகின.

1992 இல் உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்று முடிந்தபின்னர், இன்றைய உலகக் கிண்ணப் போட்டிக்கு இடைப்பட்ட காலகட்டத்தில்- இலங்கை அணி மொத்தம் 66 சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் வாய்ப்புப் பெற்றது. 29 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 34 போட்டிகளில் தோல்வி. இரத்தான போட்டிகள் 3.

நடந்துகொண்டிருக்கும் உலகக் கிண்ணப் போட்டி இலங்கை அணிக்கு ஒரு சவால்.

# பயமறியா இளம் கன்று

இலங்கை அணியில் இளம் பந்துவீச்சாளர் சமிந்தவாஸ். வேகப்பந்து வீச்சில் ரசிகர்களின் கவனத்தை கவர்ந்து வருகிறார். இறுதிவரை சளைக்காமல் வீசக்கூடியவர். சூடான இளம் இரத்தம். இதுவரை (நடந்து கொண்டிருக்கும் உ.கி. போட்டிக்கு முன்னர்) 40 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பந்து வீசி இருக்கிறார். 50 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். 40 தடவைகள் ஓட்டம் எதனையும் கொடுக்காமல் பந்து வீசியுள்ளார். அவரது சிறப்பான பந்து வீச்சு 4/20. 24 தடவைகள் துடுப்பெடுத்தாடியுள்ளார். மொத்தமாக இதுவரை 197 ஓட்டங்களை சேகரித்துள்ளார். 10 தடவை அவுட் ஆகாமல் திரும்பியிருக்கிறார். ஒரு ஆட்டத்தில் அவர் அடித்த உயர்ந்த பட்ச ரன் 22. சராசரி 17.90. 7காட்ச் பிடித்துள்ளார்.

இலங்கை அணியில் தற்போது விளையாடும் வீரர்களில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்திருப்பவர் அர்ஜுன ரணதுங்க (கப்டன்). 177 சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் பந்துவீசி மொத்தம் 74 விக்கெட்டுக்களை சாய்த்திருக்கிறார். சிறந்த பந்து வீச்சு 4/14. அர்ஜுன ரணதுங்கா மொத்தமாக குவித்துள்ள ஓட்டங்கள் 4908. 169 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடியுள்ளார்.

சனத் ஜெயசூரிய 98 ஒரு நாள் போட்டிகளில் பந்து வீசி 71 விக்கெட்டுக்களை கைப்பற்றி உள்ளார். சிறந்த பந்து வீச்சு. 6/29.

சமீபத்தில் சர்ச்சைக்குரியவரான முரளிதரன் இதுவரை 35 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பந்து வீசி 37 விக்கெட்டுக்களை சாய்த்திருக்கிறார். 14 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்தாடி 31 ரன்களை சேகரித்துள்ளார். அவரது சிறந்த பந்து வீச்சு 4/23.

முரளிதரனுக்கு உலகக் கிண்ணப் போட்டி மேலும் புகழ் சம்பாதித்துக் கொடுக்கும்.





## பிறந்த நாள் வாழ்த்து

### ஷபாதுல் அக்ஸால்

பேருவளை மருதானை அறப் வீதி இல 51, அல் ஹாஜ் - உவைஸ் முபஷ்ஷிரா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஷபாதுல் அக்ஸால் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 17.02.1996 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார்.

இவரை உம்மா, வாப்பா, வாப்பும்மா, அப்பாமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியும்மாமார், சாச்சாமார், சாச்சிமார், நம்ஸன் நானா, ஸம்லா தாத்தா, அப்லால் நானா, அஸ்ரினா தாத்தா, அஸ்ரிபா தாத்தா, மற்றும் நானாமார், தாத்தாமார், சப்ராஸ் மாமா ஆகியோர் வல்ல அல்லாவின் அருளால் சீரும் சிறப்பும் பெற்று வாழ அன்புடன் வாழ்த்தினார்கள். ■



படிப்பகம்